
மணல்நதி
பாலகுமாரன்

# மணல் நதி

## 1

வானம் மூடிக் கொண்டிருந்த வேளையில் அவர்கள் சென்னையின் எல்லையைத் தாண்டினார்கள். ஐம்பத்து இரண்டு இருக்கைகள் கொண்ட பஸ்ஸில் நாற்பத்தி ஏழு பேர் அமர்ந்திருந்தார்கள். பஸ்ஸின் கடைசிப் பக்கமான ஒரு குறுக்குச்சீட்டில் நாற்பத்தி ஏழு பேருக்கான சமையல் சாமான்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. பஸ்ஸின் முதல் இருக்கையில் ஒரு இரட்டை சீட்டில் ஒரு வயதான அம்மாள் படுத்துக் கொண்டு வந்தார்.

பஸ் அதிகம் குலுக்கலில்லாமல் ஓடிற்று. என்ஜினின் சிறலில் அது நல்ல பஸ் என்று எல்லோருக்கும் தெரிந்தது. புழுதி உள்ளே அடிக்காமலிருக்க கருப்புக் கண்ணாடியை எல்லோரும் இழுத்து மூடியிருந்தார்கள். சென்னையைத் தாண்டியதும் மூடிக் கொண்டிருந்த வானம் பின்னே போய்விட, உள்ளேயிருப்பவர்களுக்கு வானம் மப்பாக இருப்பது போலவே தென்பட்டது. நடுச்சீட்டில் அமர்ந்திருந்த ஆள் வெற்றிலையைத் துப்ப கதவு தள்ள, வெக்கையும், புழுதியும் பஸ்ஸிற்குள் சுழன்று ஓடிவந்தன. ''மூடு ...மூடு...'' என்று எல்லோரும் கத்தினார்கள்.

''சே, உடம்பு முழுக்க புழுதி எதுக்கு இப்போ கதவைத் திறக்கணும்...'' ஒரு முப்பது வயதுப் பெண் கத்தினாள்.

''போக வர நாலாயிரத்து ஐநூறு கிலோ மீட்டர். யம்மா, பூங்கொடி நீங்க புழுதியில்லாம வந்துடுவீங் கள்ளா?'' கதவு திறந்தவன் பதிலுக்குக் கத்தினான்.

''போற இடம் முழுக்க வெக்கையும், புழுதியும் தான். நாற்பத்து ரெண்டு டிகிரி வெயிலு, ஈரத்துணிய பிழிஞ்சு உதறினா காய்ஞ்சுடும். இருந்திருந்து ஜூன் மாதம் போறோம். இப்பவே வெயிலுக்குப் பழகிட்டா நல்லது. இல்லேன்னா மூக்குல ரத்தம் வந்து ஒரு மாதிரியாயிடு வீங்க.''

கதவு திறந்தவன் விவரம் சொல்ல, பஸ்ஸிற்குள் மௌனம் பரவிற்று. கதவைத் திறந்ததும், மூடியதும் மறந்து போய் பயணத்தின் களைப்பு கற்பனையில் வளர்ந்து கலவரம் கொடுத்தது.

''நம்ம ஊர்லேயும்தான் வெயிலு. வெளில,வாசல்லே போகாம இருக்கோம்.''

இன்னொரு ஆள் பதில சொல்ல, எல்லா தலையும் அவர் பக்கம் திரும்பியது.

''வாங்க, நம்மூர் வெயில்ல நனைஞ்சவரே வாங்க. எல்லாம் தெரிஞ்ச மாதிரி பேசறது தப்பு. உங்களுக்கு டிகிரில சொன்னாப் புரியுது. நம்மூர்ல மிஞ்சி மிஞ்சிப் போனா நாற்பது, நாற்பத்தி ஒண்ணு. நாலு மணி யாச்சுன்னா மெட்ராஸ் கடல் காத்து திரும்பும். ஆறு மணிக்கு ஒரு செம்பு தண்ணி ஊத்தினோம்ன்னா சிலு சிலுன்னு இருக்கும். ராத்திரி ரெண்டு மணிக்கு பூமி குளிர்ந்து போயிடும். போர்த்திக்கிட்டுத் தூங்கலாம். டெல்லி அப்படியில்ல, பகல் எரியும். ராத்திரி சுடும். சுவரு,



கட்டில்,சொம்பு,தட்டு,பாத்திரம், டபரா எல்லாம் சுடும். ராத்திரி ஏழரை மணி வரைக்கும் வெளிச்சம் இருக்கும். காலை நாலரை மணிக்கு பொல பொலன்னு விடிஞ்சுடும். ஆறுமணிக்கு வெயில் தாக்கும். பதினொன்னுலேர்ந்து அஞ்சரை வரைக்கும் பேசக்கூட முடியாது. அத்தனை வெயில்.''

''முன்னமே போயிருக்கீங்களா?''

பஸ்ஸின் நடுவிலிருந்து எழுந்த கேள்வியை நோக்கி அவன் முகம் திரும்பினான்.

''ரெண்டு வருஷம் முன்னாடி எங்க தாய், தகப்ப னோட வந்தேன். போன வருஷம் எங்க மாமனார், மாமி யாரோட வந்தேன். இந்த வருஷம் நானும், என் சம்சாரமுமா கிளம்பிட்டோம்.''

''அப்போ உங்களுக்கு இந்தி தெரியுமா?''

அதெல்லாம் தெரியாது. இப்படி யாத்ரா சர்வீஸ் பிடிச்சுப் போயிடறதுதான். இப்படி போறதுக்கு எதுவும் தெரிய வேணாம்.''

''கடை கண்ணில சாமான் வாங்கறதா இருந்தா?''

''என்னா வாங்கப் போறீங்க? கங்கை சொம்பும், காசிக் கயிறும்தானே. விக்கிறவனே தமிழ் பேசுவான், கவலைப் படாதீங்க ''

என்னென்ன வாங்க வேண்டுமென்று அடுத்தடுத் துள்ளவர்கள் பேசிக்கொள்ள, சொற்களின் சலசலப்பு பரவலாயிற்று !தெலுங்கு எழுத்துக்கள் தோன்றித் தோன்றி மறைந்தன.

இருட்டுவதற்குள் ஒரு இலக்கை அடைந்துவிட வேண்டுமென்ற வேகத்தில் பஸ் முழு வேகத்துடன் முயல, பஸ்ஸிலுள்ளவர்கள் பின்பக்கம் விரையும் வயல்களை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். பொட்டல்

கடாய் நிலமும், அங்கங்கே குடிசைகளும், சில சமயம் சிற்றூர்களும், சில நேரம் பெரிய பட்டணத்தின் விளிம்பும் கடந்து போவதை வியப்போடு பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இது யாருடைய நிலம்? எவருடைய பூமி எவருக்குஇது ஊர்? இங்கு என்ன விளைச்சல்? எதற்கு இங்கே குடியிருப்புகள்? இந்தப் பொட்டல்வெளியில் ஏன் மனிதர்கள் வாழ்கிறார்கள்? அப்படி வாழ என்ன கரரணம்? இங்கு நீர் உண்டா? நிலவு பொழியுமா? நெஞ்சு வலித்தால் ஆஸ்பத்திரி உண்டா? சோப்பு, சீப்புக் கடையோ, சினிமா தியேட்டரோ இல்லாத இடத்தில் எப்படி வாழ முடியும்? இருட்டின பிறகு இங்கு என்ன வேலை? எது விளக்கு? கெரசினா அரிக்கேனா, நல்லெண்ணெய் குத்து விளக்கா? அல்லது தீப்பந்தமா' அல்லது வெறும் அடுப்பு வெளிச்சமா?

ஒற்றைத் தீப்பெட்டியும் அணைந்து விட்டதெனில் எப்படிப் பற்ற வைப்பான். யாரிடம் நெருப்பு கேட்பான் சாக்கடை ஓடும் சந்து வீட்டில் பல செளகர்யங்கள் இருக்கின்றன. சந்து தாண்டினால் தெரு, தெரு தாண்டினால் மெயின் ரோட்டில் பஸ் ஏறினால் அண்ணாசாலை, அப்புறம் பூக்கடை, கொத்தவால் சாவடி, மாம்பலம். திருவல்லிக்கேணி, ராயப்பேட்டை, மந்தைவெளி, மயிலாப்பூர் அடையாறு. அடர்த்தியாய் காட்டு மரத்தில் தொங்கும் தேன் கூடாய் கடல் ஒட்டிச் சென்னை நகரம் பூமியை ஒட்டிக் கொண்டிருக்கிறது. அந்தத் தேன் கூட்டில் எல்லாம் கிடைக்கும். சந்து சந்தாய் இருந்தாலும் மிகுந்த செளகர்யம். அந்தச் சந்து வீட்டில் மாடி போர்ஷனுக்கு ஆயிரத்து நானூறு ரூபாய் வாடகை இந்த வெட்ட வெளிக் குடிசைக்கு வாடகை உண்டா? கைப்பிடி பம்ப் உண்டா? கரெண்ட் உண்டா? தண்ணி லாரி வருமா? பழைய துணிக்குப்பாத்திரம் கொடுக்கும் ஆள்வருவானா?

ஆயினும் இங்கே மனிதர்கள் வாழ்கிறார்கள். வாழ குடிசை கட்டிக் கொண்டிருக்கிறார்கள்.



ஒரு கிழவர் பின்னால் குழந்தைகள் ஓடுகின்றன. இரண்டு நாய்கள் தொடருகின்றன இவை எப்படி வளரும்? எதற்காக வாலாட்டும்? உலகம் பெரிது என்று எல்லோருமே புரிந்தது. பெரிது என்றதிகைப்பே பேச முடியாமல் வைத்தது.

''ஒரு கிரவுண்ட் நானூறு ரூபாய் இருக்குமா. இன்னும் சீப்பா? நூறு கிரவுண்ட் வாங்கிப் போட்டுசுற்றி வேலிகட்டி, நாற்பத்தைம்பதுவீடு கட்டி, குடும்பங்களைக் குடியேற விட்டால் இதுவும் ஊர். இதுவும் ஒரு பேட்டை.

முதலில் மின்சாரம் வரும், பிறகு பஸ் வரும். பஞ்சாயத்து, ஏதாவது வரும். போராடி மனுக் கொடுத்தால் ரயில் வரும் ஊர் வேலியுடைத்துப் பெரிதாகும். பள்ளிக்கூடம், பாங்க், தொழிற்சாலையெல்லாம் உருவாகும் ஸ்ரீனிவாசபுரம் என்று பெயர் வரும்.

கிரவுண்ட் நானூறு ரூபாய்க்குஎன்று நூறு கிரவுண்ட் வாங்கியது ஸ்ரீனிவாசன்தானே. அவன் பெயரிலேயே ஊர்ப்பெயர் இருக்கும். அவன் செத்துப் போனால் சிலை வரும் பிறகு ரயில்வே ஸ்டேஷன் ஜங்ஷனாக மாறும். வெளியூர், உள்ளூர் பேருந்துகள் இரண்டாக பிரிக்கப்படும். கண்டோண் மெண்ட் என்று தனியாக ஒரு பகுதி ஊருக்கு வடக்கேயோ, தெற்கேயோ உருவாக்கப்படும். இன்னொரு தேன் கூடு சந்தகள் சாக்கடைகளுள்ள தேன் கூடு இன்று இருக்கிற எல்லாத் தேன்கூடுப் பொட்டலாம் இருந்தவைதான். சுள்ளிச் செடியும், கருவேலம் புதருமாய் இருந்தவைதான். இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு சென்னைக் கடற்கரையில் மணல் வெளியும், புதற் செடியும்தான் பார்த்திருப்பார்கள். நடுக்கடலில் நங்கூரமிட்டு சிறிய படகில் கரை முட்டியிருப்பான். கருப்பு கருப்பாய் மனிதர்களைப் பார்த்து வியந்திருப்பான். வெள்ளை முண்டாசும், அழுக்கு இடுப்பு வேட்டியும் கண்டு வியந்திருப்பான். ரவிக்கை அணியாது மாராப்புக்குள் உருளும் சிறிய முலைகளைக் கண்டு திகைத்திருப்பான்.

அந்தத் திகைப்பு செத்துப் போகவில்லை. இரண்டா யிரம் வருடத்திற்குப் பிறகும் வேறு ஊரில் வேறு மனிதர் களைச் கண்டு அதே வித திகைப்பு வருகிறது. பொட்டல் நிலம்பார்த்தபோது வியப்பு வருகிறது. சுயவேலையில்லாத குடிசைகளைக் கண்டபோதும், கவலையும் பரிதாபமும் வருகின்றன.

இது என்ன ஊர்? யாருடைய ஊர்? இங்குஏன் மனிதர் கள் வாழ்கிறார்கள்? என்ன வேலை செய்கிறார்கள்? அந்தக்கிழவனுக்கும், குழந்தைகளுக்கும், நாய்களுக்கும் சோறு உண்டா? எப்படி? எவரால்? எதன் பொருட்டு?

டிரைவருக்கு அடுத்த ஒற்றைச் சீட்டில் அமர்ந்திருந்த சீனுவாசன் கற்பனையை ஒரு சிறு நகரம் கலைத்தது. இங்கேசாராயம்கிடைக்கும் என்றகோணலான தமிழ்எழுத் துக்கள் யோசிப்பை திசை மாற்றியது. பஸ் ஊர்ந்து போக, சென்னையில் சாய்ந்திருந்த பெப்சி பாட்டில் அங் கேயும் சாய்திருந்தது. எனது மேனி எழிலுக்குக் காரணம் லக்ஸ் என்று ஸ்ரீதேவி தெலுங்கில் சொன்னாள். லக்ஸ் விளம்பரத்தில் ஸ்ரீதேவி வேறு என்ன சொல்ல முடியும்? தெலுங்கு தெரியாத போதும் விளம்பரம் புரிந்தது, ஜீவன் டோன் மாத்திரைகள் தசை முறுக்கிக் காண்பித்தன. முக்கோணம், ஒரு குழந்தை போதும் என்று சொன்னது. மத்தியானக் காட்சிக்கு ஒரு தியேட்டரில் பெண்கள் சுவரேறிக் குதித்தார்கள். ஆலமரத்தடி அனுமார் மட்டும் சிகப்பாக இருந்தார். இனிமேல் காஷ்மீர் வரையில் அனுமார் சிகப்பாகத்தான் இருப்பார். கோவில்கள் வேறு மாதிரி இருக்கும்.

மறுபடியும் பொட்டல் வர, சீனுவாசன் அதிர்ச்சி யுடன் கண்களை மூடிக் கொண்டான். இந்த தேசம் பெரிது என்று எண்ணிக் கொண்டான்.

''தூங்கறதா இருந்தா பின்னாடிப் போய் தூங்குங்க.' டிரைவரின் குரல் அவனை அதட்டி எழுப்பியது.



''இந்தப் பக்கம் வந்துடறீங்களா?''

பின் பக்கமிருந்து நாலைந்து குரல்கள் எழுந்தன.

அவர்கள் அவசரம் சீனுவாசனுக்குக் கடுப்பைக் கொடுத்தது. சீனுவாசன் இந்த பயணத்தின் போது தூங்கவும் கூடாது? பேசவும் கூடாது என்று உறுதிப் படுத்திக் கொண்டான். பொட்டல் வெளியை வெறித்துப் பார்த்தான். பஸ் தார் ரோட்டை விழுங்க, இருள் பூமியை விழுங்கிக் கொண்டிருந்தது.

பஸ் நானூறு கிலோ மீட்டர் தாண்டி ஒரு சிறு நகரத்து ஹோட்டல் வாசலில் நின்றது. ஹோட்டல் விளக்கை பூச்சிகள் சுற்றிக் கொண்டிருந்தன. பயணிகள் கீழேயிறங்கி தள்ளாடி நின்றார்கள். எல்லோரும் அழுக் காய் இருந்தார்கள். எல்லோரும் களைப்பாக இருந்தார் கள்.

ஹோட்டலுக்கு அருகே சமையல் சாமான்கள் இறக் கப்பட்டு, அடுப்பு மூட்டப்பட்டது. முன் பசிக்கு சிலர் பக்கோடா வாங்கிக் கொண்டார்கள்.

''தனியா ஆள் வெச்சு சமைச்சு சாப்பாடு போட றோம்'' என்று யாத்ரா சர்வீஸ் கொடுத்த முதல் உறுதி உப்புமாவாய் கிளறப்பட்டு எல்லோருக்கும் வழங்கப் பட்டது.

''ஏன் உப்புமா...பொங்கல் போடக்கூடாதா?''— ஏதோ பெண் குரல் கேட்க, சமையற்காரன் சொடே ரென்று தண்ணீர் அடித்து தீயை அணைத்தான்.

''ஆரம்பிச்சுட்டாளுங்கப்பா.. பொங்கல் போட்டா உப்புமா கேப்பாளுங்க. உப்புமா போட்டா பொங்கல் கேப்பாளுங்க. வந்த இடத்தில வாயை மூடிட்டுத்தின்னதா சரித்திரமே கிடையாது...''

ஆனால் அந்த நேரத்துக்கு அந்த உணவு சுவையாக இருந்தது. இரவு படுக்கைக்கு இன்னும் ஒரு மணி நேரம்

பயணப்பட வேண்டும். அவன் இருக்கைக்குப் பின்னாலிருந்த இரண்டு ஆண்கள் அவனருகே வந்து நின்றார்கள். சிரித்தார்கள்.

''எம் பேரு நரசிம்மன்,இவன் என் தம்பி சந்தானம்'' அறிமுகப்படுத்திக்கொண்டார்கள்.அண்ணனுக்குஐம்பது வயது இருக்கும். தம்பிக்கு நாற்பத்தைந்து இருக்கும். இருவர் தலையும் நரைத்திருந்தது.உயரமாய், ஒல்லியாய் கொஞ்சம் கூர் மூக்காய் இருந்தனர். அந்த சகோதரர்களைப் பார்த்தவுடன் சீனுவாசனுக்கு திருக்குன்றத்து கழுகுகள் ஞாபகம் தேவையில்லாமல் வந்தது.

## 2

ஆனால் இந்த சீனுவாசனைப் பார்த்தால் மண்ணாந்தை நினைவு வருகிறது. மண்ணின் நிறத்தில் உள்ள ஆந்தைக்குப் பெயர் மண்ணாந்தை உயரச் சுவர் பொந்தில் கோவில் கோபுரத்து இடுக்கில் ஏதோ களிமண் பூச்சு மாதிரி காறை பெயர்ந்த இடம் மாதிரி அசையாது உட்கார்ந்திருக்கும். விழிகள் மட்டும் நாலு திசையும் உருளும். அருகே உட்கார்ந்து கத்தும் காக்கைக்குக்கூட ஆந்தை இருப்பது தெரியாது.அசைவு ஏற்பட்டால்தானே உருவம் தெரியும் குரல் கொடுத்தால்தானே இருப்பு புரியும். அசையாது குரல் கொடுக்காது இருக்கிற ஆட்களெல்லாம் ஆந்தைதான்.

பகலில் அசையாத ஆந்தை இரவில்அசையும்.பேசாதவரை பேசாத ஆள் பேச்சுக் கொடுத்தால் நிறையப் பேசுவான்.

''தனியா வந்தீங்களா?'' நரசிம்மன் கேட்க சீனுவாசன் இது முட்டாள்தனமான கேள்வி என்பதாய் புன்னகை செய்தான்.



என்ன முட்டாள்தனம் என்பது புரியவில்லை புன்னகை மட்டும் புரிந்தது.

''நாற்பத்தி ஆறு பேர் கூட வராங்களே...நான் எப்படி தனியான்னு சொல்றது ''

''அது இல்லை சார்...வீட்ல யாரும் வரலை...''

''மனைவியைச் சொல்றீங்களா...?''

''அந்த மாதிரி யாராவது?''

''மறுபடி சீனுவாசன் சிரித்தான்.அந்த மாதிரி யாரையாவது கூட்டிக்கிட்டு வந்திருக்கலாம்.அலஹாபாத்,காசி, கயா போறதுக்கு அப்படி யாரும் வரமாட்டாங்க,ஊட்டி, கொடைக்கானல்னா ரெடிம்பாங்க. நான் தனி.''

எதுக்கு இந்தக் கெட்டிக்காரத்தனம் அல்லது இடக்கு பதில் என்று நரசிம்மனுக்கு புரியவில்லை. கேட்டது புரியவில்லை என்றால் பொய். பதில் சொல்ல விருப்பமில்லை என்று சொல்லியிருக்கலாம்.ஒருவேளை இப்படிகேட்டதே தப்பு என்று இந்த மண ஆந்தை நினைக்கிறதோ...

''சிரார்த்தம் பண்ண மனைவி அவஸ்யம்னு சாஸ்த்திரம் சொல்றது...'' நரசிம்மன் தம்பி சந்தானம் பேசினான்.

''சாஸ்த்திரம் ஏதாவது பேசும், பேசிட்டு அப்படியில்லைன்னா...பொண்டாட்டி உயிரோட அல்லது உயிரோட இருந்து கூட வராமலோ இருந்தாஎன்ன பரிகாரமும் சொல்லும். புல்லுக்கட்டு போதும் பொண்டாட்டிக்கு பதிலான்னு ஒரு கண்டிஷன் கொடுக்கும்.''

''கூட புல்லுக்கட்டு கொண்டு வந்திருக்கேளா?''

நரசிம்மனுக்கு பதில் தாக்குதல் நடத்தாமல் இருக்க முடியவில்லை.

''வழில வாங்கிண்டா போச்சு...''

''எது...பொண்டாட்டியா...புல்லுக்கட்டா?''

சடேரென்று மூன்று பேரும் சிரித்தார்கள். குத்தலான கேலி தாண்டி ஒரு ஸ்நேகம் சட்டென்று அங்கே வந்துவிட்டது.

''பய கெட்டிக்காரன். ஏதோ தெரிஞ்சு வச்சுண்டிருக்கான். சந்தானத்துக்கு மண்ணாந்தை மேல் ஒரு பிரியம் வந்தது. அவன் வாயைக் கிளறத் தோன்றியது.

''குறைஞ்சபட்சம் ஒரு அம்மிக் குழவியாவது வச்சிருக்கலாம். புல்லுக்கட்டுன்னு பொண்டாட்டிய சொல்றது ரொம்ப அல்பமான விஷயமா இருக்கும்.''

''அல்பம் உதாரணத்துல இல்லை.''

''பிறகு...''

''ஆள்கிட்ட இருக்கு.''

''புரியலையே...''

''உங்களால குறைஞ்ச பட்சம் ஒரு புல்லுக்கட்டு கொண்டு வர முடியாதா...கொண்டு வந்தா போதும், அதை பொண்டாட்டிக்குப் பதிலா பக்கத்துல குத்துட்டு நிக்க வச்சு சிரார்த்தம் பண்ணலாம்.''

''அதிக பட்சம் எதுவோ?''

''ஸ்வர்ண பிம்பம்...ஒரு சாண் உயரம்.''

''யூ மீன் கோல்ட்...''

''எஸ்...கோல்ட் பதுமை...''

''அடேங்கப்பா...''

''அப்புறம் அதை உருக்கி பிராம்மணாளுக்கு பங்கு போட்டு கொடுத்துடணும்.''

'அடிச்சக்கைன்னுனாம். அப்ப புல்லுக்கட்டுபோதும்.'

அதனால்தான் முதல்ல எடுத்தவுடனே புல்லுக்கட்டுன்னு சொன்னது. புல்லுக்கட்டு போதுமான்னா கொஞ்சம் கொஞ்சமா மேலே ஏத்தி ஸ்வர்ணபிம்பம் வரைக்கும் செய்யலாம்.''

மூவரும் பேசாமல் இருந்தார்கள். ஒரு சாண் உயர ஸ்வர்ண் பிம்பத்தை நினைத்துக் கொண்டிருந்தார்கள். உலகத்தின் அபூர்வம் பற்றிப் பேச வாயடைத்துதான் போய் விடுகிறது.

''சிராத்தம் பற்றி நிறைய தெரிஞ்சு வச்சிருக்கிறேள் '

''எப்பவோ படிச்சது ஞாபகம் இருக்கு. திலபர்வம் புக்கன்னு கூட படிச்சிருக்கேன்.''



''என்னது?''

''திலபர்வம்.''

''அப்படீன்னா...?''

''எள்ளு மலை. திலம்னா எள்ளு. மலையளவு இல்லை ஒரு ஆள் படுத்து நுழையற அளவு எள்குமிச்சி வச்சு அதுக்குள்ள கணவன், மனைவி ரெண்டு பேரும் ஒருத்தர் பின்னால ஒருத்தரா உள்ள நுழைஞ்சு மறுபக்கம் வெளியே வந்து அந்த திலத்தை, அதாவது எள்ளை அப்படியே தானம் கொடுத்துடறது.''

''அடேயப்பா...''

''அடேயப்பா தான்நம்மால முடியாது. ஒரு நாலணா பொட்டலம் மடிச்சு கொண்டுவந்து வலது கைகட்டை விரல் வழியா வழிய விடறோம்.''

''எதுல சார் படிச்சேள்...?''

''ராஜேந்திர சோழன் அப்படி தானம் பண்ணினார். ராஜ ராஜ சோழன் செத்த பிறகு... கல்வெட்டு இருக்கு.''

''அப்பவே சிரார்த்தம் உண்டா?'' சந்தானத்தின் கேள்விக்கு சீனுவாசன் பதில் சொல்ல வில்லை.''

''எல்லாருக்கும் சிரார்த்தம் உண்டா?'' சார்?'' நரசிம்மன் கேட்டதும் அவன் பக்கம் திரும்பினான்.''

''சிரத்தை உள்ளவாளுக்கு உண்டு.''

''புரியலையே.''

''சிரத்தையோடு செய்வதுசிரார்த்தம். சிரத்தைன்னா ஈடுபான்னு அர்த்தம். ஈடுபாடு உண்டுன்னா இதுவும் உண்டு.''

''எதனால ஜனங்களுக்கு இதுல ஒரு ஈடுபாடு?''

''பயம்.''

''எது பயம்...?''

''தன் சாவு பத்தி. தான்செத்தபிறகு என்ன ஆவோம் என்கிறதுபத்தி.''

''இல்லை சார்... இது ஒரு நன்றிக்கடன். எங்க அப்பாவுக்கு நான் சொல்ற நன்றி.''

''தேங்க்யூன்னு ஒரு வார்த்தை போறாதா. மனசுல நினைச்சாபோய் சேராதா...பித்ருக்கள் கரையேறணும்னு மணி, விளக்கு, சொம்பு, ஜலம், பிண்டம்னு எதுக்கு செய்யணும்?''

''தெரியலையே?''

''போற வழில நிசப்தம் இருக்கும். அதனால மணி· சத்தம் கேட்டா நல்லதுன்னு மணி தானம். இருட்டா இருக்குமாம். அதுனால விளக்கு தானம். வைதரணின்னு ஒரு வெந்நீர் நதி தாண்டணும். தாண்ட நாக்கு வரளு மாம். அதனால சொம்பு ஜலம். பசிக்கும். அதனால பிண்டம்.''

''செத்த பிறகு இதெல்லாம் உண்டா சார். நம்ப முடியவையே?'' சந்தானம் ஆவலானான்.

''அதென்ன வெந்நீர் நதி? வெந்நீர் ஆறு...?'' நரசிம் மன் நடுவே புகுந்தான்.

''தெரியலை. செத்தா தெரியும். மண்ணாந்தை சட் டென்று பேச்சு முடித்துக்கொண்டு பஸ் போகும் திசையை பார்க்கத் துவங்கியது.''

உசுப்பி மறுபடி பேச சந்தானம் முயன்ற போது, நரசிம்மன் தடுத்துவிட்டான்.

''கொஞ்சம் கிறுக்கன். அழுத்திக் கேட்டா கேலி பண்ணுவான். உனக்கு கோபம் வரும். பேசாத இரு. அப்புறம் கேட்டுக்கலாம்.''

சந்தானம்சீட்டில் சாய்ந்து கொண்டான். வைதரணி நதி வெந்நீர் ஆறு மணக்கண் முன்னே ஓடியது.

அடுப்பில் கொதிக்கும் டேக்ஸா வெந்நீர் போல ப்ளக் ப்ளக் என்று கொட்டினார்கள் நீராவி கிளர்ந்து எழ பெரிய ஆறு முழுவதும் வெந்நீர். விரல் வைத்தால் வெத்து போகும். வெந்நீர் ஆறு ஓடியது. வைதரணி நதி அதை கடக்கும்போது நாக்கு வரளும் இப்போதே வரண்டது.



''பாவிகளா... இப்படி எதையாவது கதை சொல்லி மனசை குழப்பறீங்களேடா என்று கத்தவும்தோன்றியது,

உடலேஇல்லாதபோது சூடு எப்படி? ஆவி ரூபத்திற்கு உணர்வு எப்படி? கனம், இருப்பு, எழல், நிற்றல், வலி சோர்வு எல்லாம் உடம்புக்குத்தானே. உடம்பு உகுத்து மேலே போக, அங்கும் வெந்நீர் ஆறு என்றால், அது சுடும் என்றால், இருட்டு, ஒளி என்று பிரிவினை இருந்தால் பயம் பயமின்மை என்கிற தன்மை இருந்தால், கடவுளே என்ன சோதனை. சாவும் சந்தோஷமில்லையோ... அங்கே போனவனுக்கு இங்கே தானம் தருதல் எப்படி உதவும். இந்த மணி சப்தம் அங்கு எப்படி கேட்கும்;

பொய். பெரும் பொய் யாரோ சிலர் கதை கட்டி காசு பண்ணுகிற பொய்.

''எதுக்கு காசி, கயா எல்லாம்'' என்று அப்போதே சந்தானம் கேட்டான். நரசிம்மன்தான் பிடிவாதமாய் போக ஏற்பாடுகள் செய்தான்.

''சும்மா போய் இடம் இடமா பார்த்துட்டு வரலாம் வாடா'' என்று கூப்பிட்டான்.

செகண்ட் கிளாஸ் ட்ரெயினை விட பஸ் பயணம் அதுவும் இப்படி நாற்பத்தியோரு யாத்ரீகர்கள் கொண்ட பஸ் பயணம். காசு கம்மி. பஸ் சொகுசு பஸ்.

காலையில் உப்புமா அல்லது பொங்கலுடன் காபி.

பிற்பகல் சாம்பார், ரசம், மோர், கூட்டு, பொரிய லுடன் முழுச் சாப்பாடு.

மாலையில் பக்கோடா அல்லது பஜ்ஜியுடன் காபி.

இரவு பூரி, சாப்பாத்தி, இட்லி ஒரு டம்ளர் பால,

தங்கும் இடங்கள் கல்யாண சத்திரம் போல் இருக்கும் குளியல் வசதிகள் உண்டு. காசி இரண்டு நாட்கள். கயா இரண்டு நாட்கள், அலஹாபாத் இரண்டு நாட்கள்.

கோவில் டிக்கெட், பண்டா, படகு சவாரி, சிரார்த்த சாமான்கள், செலவு யாத்ரீகர்களுடையது.

இந்தி தெரியலையே என்கிற கவலை வேண்டாம். இந்தி, ஆங்கிலம், தமிழ், கன்னடம் தெரிந்த கைடு கூடவே வருவார்.

மூத்தோர்களுக்கு சிரார்த்தம் செய்ய ஆசைப்படும் தமிழ்நாட்டு மக்களுக்காகவே இந்த யாத்திரை ஏற்பாடு செய்யப்படுகிறது. இது எங்கள் நூற்று இருபத்தி ஏழாவது யாத்திரை.

தமிழ்நாடு தாண்டினா உங்க இங்கிலீஷ் வேவாது. இந்திதான். எல்லா இடத்துலயும் இந்திதான். ஆந்திராவுல ரிக்ஷாக்காரன் கூட இந்தி பேசுவான். கன்னடக்காரன் கஷ்டப்பட்டு கத்துக்கிட்டான். மலையாளி பாடமா வச்சு படிக்கிறான். நாமதான் வுட்டுட்டோம். இந்தி ஒழிகன்னு ஓச்சுட்டோம். இந்திய விட்டது தப்பு. பெரிய தப்பு. பாடமா வேணாம். பேசப் பழகியிருக்கலாம். பேசப் பழகற பாஷைக்கு பரீட்சை இல்லை, மார்க் இல்லைன்னு பள்ளிக்கூடத்துல வச்சிருக்கலாம், பசங்க ஜாலியா படிச்சுப் போயிருப்பாங்க.

ஸ்டேஷன்போய் இறங்கி வழி கேளுங்க. அப்ப தெரியும் இந்தி தெரியாத குறை. டிப்டாப்பா டிரஸ் போட்டிருப்பான். வில் யூ ஸ்பீக் இங்கிலீஷ்னு கேளுங்க. நைன்னுட்டு போயிடுவான். டிக்கெட் கலெக்டர், பட்டாளத்தான், போலீஸ் இன்ஸ்பெக்டர், டூரிஸ்ட் சென்டர் எங்கயும் இங்கிலீஷ் வேகாது. தெரியாது இந்தி மே போலோன்னுவான். வெறுத்துடும். நான் அவஸ்தை பட்டேன் ஒருமாசம். அப்புறம் மொள்ள மொள்ள கத்துக்கிட்டேன். இந்தி ஈஸீசார். நாலு வருஷத்துல நம்ம மாதிரி உள்ளவங்க கவிதை எழுதலாம். அத்தினி ஈஸி, பயணம் பற்றி எதிர்வீட்டு ஆளிடம் சொன்னபோது பயமுறுத்தினார்.



யாத்ரீகர் பஸ்ஸில் டிக்கெட்வாங்க மொழியும் ஒரு காரணம். தமிழர்களோடு போய் தமிழர்களோடு வரலாம் என்கிற பாதுகாப்பு எண்ணம்.

ஏய்க்கிறானா...ஏமாற்றுகிறானா என்று புரியாது. தடுமாற வேண்டாம் என்கிற கவலை. பஸ்சிரமம். முதுகு வலிக்கும். ஆயினும் பாதுகாப்பு. மொழி வளையம் போட்ட பாதுகாப்பு

காசியை விட, கயாவில் சிரார்த்தம் என்பதைவிட சந்தானத்துக்கு கங்கைமீது ஒரு ஆசை இருந்தது. சினிமா பாட்டிலிருந்து அவனுக்குத் தெரிந்த பாரதி பாட்டு வரை கங்கையைப் பற்றி நிறைய சொல்லியிருந்தார்கள் பொஹோய் என்றுஓடும் பெரிய நதி பார்க்க மனசு ஆசை பட்டது. கங்கை ஜீவநதி என்று தேர்ட்ஃபார்மில் படித்தது இன்னமும் ஞாபகத்தில் இருந்தது. கங்கை பொங்கினாள் என்கிற நியூஸ் ரீல் அழியாமல் மனசுள் இருந்தது. ஒரு கால்பந்து மைதானத்தைவிட அகலமான நதியைப் பார்க்க விருப்பம் இருந்தது.

''கயால இரண்டு நாளா? வேஸ்ட்'' எதிர் வீட்டுஆள் கத்தலாய் மறுத்தார்.

''அரை நாள்சார் தெவசத்துக்கு. அப்புறம் என்று புறப்பட்டு அப்படியே டெல்லி போய்ட்டு வாங்க. அங்க பார்க்க ஒன்னுமில்லை.''

''புத்தகயான்னு ஒரு இடம்...''

''நமக்கும் புத்தருக்கும் என்னா சார் சம்பந்தம்? ஒரே கும்பாச்சி, கும்பாச்சியா கட்டி வச்சிருப்பான். உள்ள புத்தர்சிலை. பின்னால ஒரு அரசமரம், அங்கியும் ஒன்னுமில்லை தூசு தூக்கும். சாப்பாடு சரியாயிருக்காது.''

''ஏன்?''

''கடுகெண்ணை சார். குமட்டும் நமக்கு.''

''ஐயே...?''

''கயா வேணாம் வுட்ருங்க.''

''விட முடியாது. எந்தக் காரணம் கொண்டும் பிரயாணத்தில் மாறுதல் இல்லை. மாறுதல் இருப்பின் கம்பெனியே முடிவுசெய்யும்.

காசி பார்க்கணுமா சார். ஆயிரத்து சொச்சம் கோயில் அங்க நதி பார்க்கணும். அப்புறம் அரிச்சந்திரா காட். பார்க்காத வராதீங்க.''

''என்ன அங்க?''

''சுடுகாடு.''

''சார்...''

''பொணம் எரிப்பான் சார். ராம் நாம் சத்ய ஹைன்னு பொணம் கொண்டாருவான். அப்படியே கங்கைல பாடையோட முக்கி எடுத்து நெருப்புல வச்சுடுவான். காசிக்குப் போனா அதைப் பார்த்துட்டு அதை மூந்தூட்டு வரணும்.''

''ஏன் அப்படி?''

''எல்லா ஆட்டமும் கடைசில முடியறது இந்த இடம் தான். அதைப் பார்த்தே ஆவணும்.''

''நம்மூர் சுடுகாட்ல தெரியாதா இது?''

''போ மாட்டீங்க. காசின்னா பார்ப்பீங்க. பார்கற மாதிரி இருக்கும். பாதி எரியறச்சே இழுத்துப் போட்ருவான்.''

''எதை?''

''பொணத்தை. வெந்ததும், வேகாததுமா நதில மிதந்து போவும்.''

''ஐயே...''

''நம்ம கர்வம், திமிரு, பொய், பித்தலாட்டம் எல்லாம் ஆத்தோட போவும். போவணும். எதிர் வீடு கொக்கரித்தது சந்தானம் ஆவல் அதிகமாகியது. இதுவும்



பார்க்க வேண்டும். மெட்ராஸல ஏதுநதி. பிணம் இழுத்துப் போட்டு மிதந்துகரைகிற நதி தெற்கே உண்டா?''

''நதி போற வேகத்துக்கு சத்தையோ, குப்பையோ அண்டாது. ஜிலீர்னு போகும்நதி. அதான் அதை ஜீவ நதின் வாங்க.''

''அப்படியா...?'' வியப்பு மண்டியது. ஆவல் பொங்கியது.

அப்பாவுக்கு சிரார்த்தம் என்று நரசிம்மன் திட்டம் போட சந்தானம் கங்கை பார்க்கும் ஆசையில் சரி என்று சம்மதித்தான்.

கிளம்பும் முன் திருமணம் செய்து கொள்ளாத பிள்ளை சிரார்த்தம் செய்யலாமா என்று கேள்வி வந்தது. செய்யலாம். என்கிற சமாதானம் கிடைத்தது.

நரசிம்மனுக்கு ஐம்பது வயது. சந்தானத்துக்கு நாற்பத்தி ஐந்து வயது. திருமணம் செய்யவில்லை. செய்யத் தோன்றவில்லை. முன் நின்று செய்ய யாருமில்லை. அப்பா, இரண்டு பிள்ளைகள் என்று இருக்க, பெண் கொடுக்க மிகவும் தயங்கினார்கள்.

பிள்ளைகளே சமையல் என்றதும் சிரித்தார்கள்.

பெண் இல்லாத வீட்டில் பெண் கொடுக்கறது எப்படி...?'' கஷ்டமில்லையா என்றார்கள்.

அம்மா நாற்பது வருடம் முன்பு செத்துப் போனாள். அப்பா போன வருடம் இறந்து போனார்·

''உங்கம்மாவை உங்கப்பா படுத்தின பாட்டுக்கு இந்த வீட்ல எந்தப் பெண் காலெடுத்து வைப்பா. உங்க வம்சம் இத்தோட முடியும். இத்தோட அழியும். உங்களுக்குக் கல்யாணம் ஆகாது. ஆனாலும் தங்காது.''

ஒரு சாபம் உண்டு. அம்மாவை அப்பா என்ன படுத்தினார் என்று சந்தானத்துக்குத் தெரியாது. நரசிம்மனுக்குத் தெரிந்திருக்கலாம். சொன்னதில்லை.

அப்பா என்றால் நரசிம்மனுக்கு உயிர். மரியாதை யான பயம். கடைசிவரை அப்பாவுக்கு நமஸ்காரம் செய்துவிட்டு ஆபீஸ் போகும் மரியாதையை அவன் விடவே இல்லை. இப்பவும் அப்பா படத்துக்கு அதைச் செய்யத் தவறியதில்லை.

எங்கப்பா எனக்கு குரு மாதிரி சார். ஒவ்வொரு அப்பாவும் தன் பிள்ளைகளுக்கு என்னென்னவோ சொல்லிக் கொடுப்பார். எனக்கு எங்கப்பா பிரம்மச் சரியம் சொல்லித் தந்தார். ஒழுக்கம் ரொம்ப முக்கியம்னு சொல்லித் தந்தார். தலை நரைச்சு போச்சே தவிர நான் ஐம்பது வயசுஆள் இல்லை சார். இருவது வயசு பையன் மாதிரி ஓடுவேன். ஏழு ஏழு பதினாலு கிலோ மீட்டர் தினம் நடப்பேன். லேடீஸ் தேவையில்லை சார். அது கோரம். ரொப்ப உண்மையா சொல்றதா இருந்தா அசிங்கம்.

சுத்தம் சோறு போடும்னா என்ன அர்த்தம் சார்? சுத்தமா இருந்தா சோறு கிடைக்கும்னா...இல்லை. அது தப்பு.

சுத்தமா இருந்தாதான் சோறு உள்ளே போகும். உள்ள எது போட்டாலும் ஜீரணம் பண்ற வலிவு கிடைக்கும். ஜீரண சக்தி எப்ப குறையுதோ அப்ப வியாதி நிச்சயம். வயசானா ஜீரண சக்தி குறையும். ஏன்? சுத்த மில்லை. அதனால் காமம் முதல்ல கெடுக்கற விஷயம், ஜீரண சக்தி அமிலமாற்றம் வயத்தில் நடக்கும். காமத்தில முதல்ல நடக்கற சேஞ்ஜ் வயித்துலதான் சார். வயிறு கெட்டால் வாழ்க்கை கெடும்.''

''தொந்தி சரிய வயிறே குழைய ஒரு தந்தம் அசைய முதுகே வளைய இதழ் தொங்க...''

தொந்தி சரிஞ்சு வயிறு குழைஞ்சு, பல்லு அசைஞ்சு இதழ், உதடு தொங்க ஒரு கைத்தடி மேல்...

''வயிறு கெட்டா குழைஞ்சு அமிலத்துல பல்லு கெட்டுப் போகும். முதுகு வலையும். உதடு தொங்கும். தடி ஊன்றிப் போகணும். எதனால...லேடீஸ் சகவாசத் தால...''

''அத்தோட போச்சா?''

''வர மகளீர் இவமாகி... இப்படி தடி ஊனி வந்தா இளம் பெண்கள் கேலிபண்ணுவார்களாம். பெண்ணால் கெட்டுப் பெண்ணால் கேலி செய்யப்படணுமா?''

''எப்படி கேலி தெரியுமா?''

தொண்டு கிழவன். இவன் யாரென இருமல் கிண்ணு கிண்ணு முறையே யமப்படர்கள் துஞ்சு குருடு படவே...

யார் இந்த மனுஷன்னு கேட்க மாட்டார்களாம். யார் இந்தக் கிழவன்னு எரிச்சலோட கேட்பார்களாம். பதில் சொல்ல முடியாது. கிண்ணு கிண்ணு இருமல் தான் வரும். யம தூதர்கள் பின்னால் வர சத்தம் கேட்கறது தவிர வேறு எதுவும் தெரியாதாம். கிழவனா றத்துக்கு பயமாயில்லை பாட்டு கேட்கறப்பவே.

வயிறு போச்கன்னா பல்லு போச்சு. நிமிரல் போச்சு. எச்சல் விழுங்க முடியாது. உதடு தொஞ்சு போய் பதில் சொல்ல முடியாத இளைப்பு, இருமல்.

வர மகளிர் கேலி பண்ணாத விடுவாங்களா? பெண் ணால் இழிவு படணுமா? பிரம்மச்சரியம் முக்கியம். எனக்குக் கல்யாணத்துல ஆசை இல்லை. பண்ண மாட்டேன்.

நரசிம்மன் செய்து கொள்ளவில்லை. அண்ணாவுக்கு ஆகவில்லை என்று சந்தானமும் செய்து கொள்ள வில்லை.

இதோ அதோ என்று நாற்பத்தி ஐந்து வயது ஓடி விட்டது.

ஏனோ அந்த ஆசை வரவில்லை. எல்லா ஆசைக்கும் அட்ஜஸ்ட் செய்து கொள்ள வேண்டும். இனி அட்ஜஸ்ட் செய்து செய்து கொள்ள முடியும் என்று தோன்றவில்லை.

இனி தேவையுமில்லை. அண்ணனோ, தம்பியோ மாறி மாறி பொங்கிச் சாப்பிட்டு ஆபீஸ் போய் டி. வி. நியூஸ் பார்த்து கிராஸ்வோர்ட் எழுதி பேப்பர் படித்து தூங்கி விடுவார்கள்.

இது சாபமா...இல்லை சன்யாசமா என்று தெரியவில்லை.

படுக்க ஒரு சத்திரம் வந்தபோது, மண்ணாந்தை சீனுவாசன் அவர்களுக்கு அருகே படுத்துக் கொண்டான்.

மண்ணாந்தை இரண்டு ஏர்பில்லோ ஊதினான். ஒன்று தலைக்கு...ஒன்று காலுக்கு என்று போட்டுக் கொண்டான். இவன் படுத்திருப்பதைப் பார்த்தால் பத்துக் கல்யாணம் பண்ணியிருப்பான் என்று தோன்றியது. பெண் இல்லாது தூங்காதவன் என்று மனசுக்குப் பட்டது.

தலையணையைக் கட்டிக்கொண்டு தூங்குபவர்கள் காமம் உள்ளவர்கள். பெண் வாசனை அதிகம் அனுபவித்தவர்கள்.

''இவன் எதுக்கு காசி கயாவுக்கு?''

ஒரு வேளை வெறுத்து வந்திருப்பானோ.

சட்டென்று முழிப்பு கொடுத்து கண் திரும்பிப் பார்த்த போது, மண்ணாந்தை விரைப்பாய் உட்கார்ந்து தியானம் செய்து கொண்டிருந்தது.

மணி என்ன...மூன்று.

எதுக்கு இந்தப் பைத்தியம் இப்போது தியானம் செய்கிறது?

சந்தானம் எழுந்து உட்கார்ந்து கொண்டான். சத்திரம் முழுவதும் நாற்பத்தி ஐந்து பயணிகளும் பிணம் போல கிடந்தார்கள்.

இந்த மண்ணாத்தை சீனுவாசனிடம் ஏதோ விஷயம் இருக்கிறது. ஆனால், அதே சமயம் கர்வியாய் தெரிகிறான். எல்லோரும் அடித்துப் போட்டது போல்



தூங்குகிறபோது இவனால் மட்டும் எப்படி இந்த நேரம் கண் மூடி உட்கார்ந்திருக்க முடிகிறது. கண் மூடி இவ்விதம் அமர சந்தானத்துக்கும் ஆசை வந்தது.

கங்கைக் கரையில் குளித்துவிட்டு கண்மூடி இப்படி தியானத்தில் அமர்ந்து ஒரு போட்டோ எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்னொரு முறை சீனுவாசன் முகத்தை எட்டிப் பார்த்தபோது சட்டென்று சீனுவாசன் கண் விழித்தான்.

''என்ன வேணும்?'' என்று கேட்டான்.

சந்தானத்துக்கு தூக்கி வாரிப்போட்டது.

''படவா...நீ தியானம் பண்ணலையா? அரைக் கண்ணால பார்க்கறயா?' உள்ளே கேள்வி வந்தது,

''தியானம் கத்துக்கணுமா? காசில கத்துத்தரேன்.. கங்கைக் கரைல குளிச்சுட்டு தியானம் பண்ணலாம்.''

சந்தானம் மறுபடி அதிர்ந்தான்.

''அப்போ அங்கேயே தியானம் பண்ற மாதிரி போட்டோ எடுத்துக்கலாம். இப்ப தூங்குங்கோ.''

சந்தானம் சட்டென்று சுருண்டு படுத்துக்கொண்டான். அந்த மண்ணாந்தையைத் தலை தூக்கிப் பார்க்கக் கூட பயமாய் இருந்தது.

# 3

பயணம். பயணம் என்று பறந்து நான்காம் நாள் மாலையில் வாரனாசிக்குள் வண்டி நுழைந்தது.

நாட்டுக்கோட்டை நகரத்தார் சத்திரத்தின் முன்பு வண்டி நிற்க, பயணிகள் அவசரமாய் இறங்கினார்கள். பாத்ரூம் தேடினார்கள். சிலர் அலுப்பாய் முற்றத்தில் அமர்ந்தார்கள்.

கண் மூடினால் பலருக்கு மரங்கள் ஓடின. வயல்கள் விரிந்தன. குலுங்கள் இன்னும் உடம்பு விட்டும் போகாமல் இருந்தது.

படுத்து வசதியாய் தூங்கிக் கொண்டு வந்த வயதான அம்மாளும் அவர் மகளும் முதலில் போய் குளித்துவிட்டு வந்தார்கள்.

''என்னங்க...குளிச்சிட்டீங்க...'' யாரோ பெண் பிள்ளை வியப்போடு கேட்டாள்.

''ஏன். என்ன தப்பு..?''
''கங்கைக்குப் போறேமே...''
''அங்கியும் குளிப்போம்.''
''அப்புறம் ஏன் இங்கு குளிச்சீங்க?''
''ஒரே கசகசப்பு. வியர்வை.''

அவர்கள் சீராய் உடுத்திக்கொண்டார்கள். பவுடர் போட்டு பாடி ஸ்ப்ரே போட்டுக்கொண்டார்கள். அவர்களின் சொகுசும், நறுவீசும் அங்கே பலருக்குப் பிடிக்கவில்லை. பொறாமை வந்தது. பொறாமையால் தூஷணை வந்தது.

''என்னடா இந்தம்மா மட்டும் டபுள்ஸீட்ல படுத்துக்கிட்டு வருதேன்னு நினைச்சேன். இரண்டு டிக்கெட் எடுத்துருக்காம். படுத்துண்டு போறதுக்குன்னே கூட ஒரு டிக்கெட் வாங்கியிருக்காம்.''

''அத்னி இருக்கறவங்க ட்ரெய்ன்ல போறது, ஏரோப்ளேன்ல போறது...''

''பத்திரமா போய் பத்திரமா வரணுமில்லையா, பாஷை தெரியாத ஊர்ல, அதான்...ஒரு ஜாக்கிரதைக்குத் தான் இப்படி வராங்க.''

''இந்த ஒரு டிக்கெட் வாங்கிறதுக்கு நான் பிச்சையெடுக்காத குறை...புள்ளைய கெஞ்சி...பொண்ணைக்



கெஞ்சி மாப்பிள்ளையக் கெஞ்சி அதுவும் பத்தாத வளையல் வித்து வந்துருக்கேன்...''

' வெளியே சொல்லாதீங்க?''

''ஏன்?''

''எல்லாரும் அப்படித்தான்.''

அங்கிருந்த பெண்கள் பேசியபடியே அந்த வயதான அம்மாவையும், அவளின் முதிர்ந்த மகளையும் கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

காலைக் கடன்கள் முடித்ததும் மறுபடி பஸ் ஏறினார்கள். கங்கைக்கரை வரை பஸ்ஸிலேயே போவதாகத் திட்டம்.

''ஏங்க, நான் உங்க ஸீட்ல உட்கார்ந்துக்கிட்டு வரட்டுமா?'' பஸ் ஏறியதும் கதவுப் பக்க ஸீட்டைக் காட்டி ஒரு பெண்மணி வயதான அம்மாளைக் கேட்டாள்.

''வேணாம்.''

''நீங்கதான் படுத்துட்டு வரலையே...படுக்கற போது பின்னால போயிடறேன். என் பக்க ஜன்னல் சரியா திறக்க முடியலை. இருளோன்னு இருக்கு.''

''வேணாம்.''

''நீங்க போன்னு சொல்றப்போ போயிடறேன்...''

''வேணாம்மா...நான் கால் நீட்டி உட்காருவேன். நீங்க பக்கத்துல இருந்தா முடியாது. உங்க ஸீட்டுக்குப் போங்க.''

''இதும் கர்வத்தைப் பாத்தியா...பத்து நிமிஷம் உட்காரவுடாத'' வெறுப்பும் கோபமுமாய் அந்த பெண்மணி

நொடிக்க அந்த அம்மாள் ஸீட்டில் சுருண்டு படுத்துக் கொண்டாள்.

''நான் வரலை. நீங்க ஏன் படுத்துக்கிட்டு வரணும் உட்கார்ந்து வேடிக்கைப் பாருங்க.''

அந்த அம்மாள் அதற்கும் பதில் சொல்லவில்லை. எழுந்திருக்கவும் இல்லை.

''இவங்க ஜாதியே இப்படித்தான்...அறுத்த கைக்கு சுண்ணாம்பு தராதுங்க...வேறு பெண் குரல் எழுந்தது.

''யாரது ஜாதி பத்தி பேசறது. நான் பேசினா நல்லா இருக்காது'' நரசிம்மன் சுள்ளென்று குரல் தர...

பல பேர் பல பேரை அடக்கினார்கள்.

கங்கைக் கரைக்கு ஐம்பது மீட்டர் தொலைவில் பஸ் நின்றது. பயணிகள் இறங்கி நடந்தார்கள்.

மார்க்கெட் வழியே கங்கைக்குபோக வேண்டியிருந்தது. ஒருவேளை இது கங்கைக்குப் போகும் வழி என்பதால் மார்க்கெட் வந்துவிட்டது போலும். குடமிளகாய், கத்திரிக்காய், காராமணி அவரை, தக்காளி என்று குவியல்கள் இருந்தன.

சொரசொரப்பான தோல் உள்ள சொரிப் பழங்கள் ஈரக்கூடையில் தொங்கின. தோல் சீவி வெள்ளரிகள் வைக்கப் பட்டிருந்தன.

டீக்கடைகளில் சமூசாவை அடுக்கி வைத்திருந்தார்கள். சட்டிகளில் டீ குடித்துவிட்டு உடைத்துப் போட்டார்கள். நூலில் கோர்த்த துலுக்க சாமந்தி மாலைகள், செம்பருத்தி பூக்கும் முன் மொட்டாய் பறித்து தொடுத்த மாலைகள், முகர்ந்தால் நாறும் பூக்களே அதிகம்இருந்தன பித்தளைப் பாத்திரக் கடைகள் அதிகம் காணப்பட்டன.



பாத்திரங்களை விட பித்தளை ஊதுவத்தி ஸ்டாண்டும் தூபதீப தட்டுகளும் அதிகம் இருந்தன

கடைகள் எதிரே பசேலென்று கங்கை தெரிந்தது. பயணிகள் மேல் படியில் தயங்கி நின்றார்கள். கண்கள் குளிர கங்கையைப் பார்த்தார்கள்.

இது பார்க்கத்தான் இத்தனை தொலைவு பயணமா?

காவிரி பாயும் கன்னித்தமிழ்நாடு...காவிரி பாயும் நதி. கங்கை விழுங்கும் நதி. மிகப் பெரிய அகலத்திற்கு கங்கை பூமியை விழுங்கி விழுங்கிப் போவதுபோல் சீனுவாசனுக்குத் தெரிந்தது.

எதிர்க்கரை எங்கோ இருந்தது. குறுக்கே நடந்த மனிதன் சிறு புள்ளியாய் மாறும் தொலைவில் எதிர்க் கரை இருந்தது.

கரை அகலம். ஆனால் நதிகுறுகல். வெய்யில் காலத்தில் நதி குறுக்கிக்கொண்டு ஓடுகிறது. நதி ஓட்டத்தில் ஒரு இழப்பு தெரிகிறது. பெரிய சுழிகள் இல்லை. அதனால் ஆழம் அதிகம் இருக்கும் என்று தோன்றியது. காக்கை பறக்கும் வேகத்தில் நதிபோய்க்கொண்டிருந்தது

காசியை அடையும் முன்பே வழிமுழுக்க பாசனத்திற்கு மாற்றிவிட்டு கங்கையை மெலிதாக்கியிருப்பார்கள் உத்திரபிரதேசம் முழுவதும் குளிரப் பண்ணிவிட்டு இன்னும் தடித்த பெண்ணாய், நாற்பதற்கு கீழ்பட்ட கட்டை தடிச்சியாய் கங்கை ஓடிக்கொண்டிருக்கிறாள். தண்ணீரைத் தொட பலபடிகள் இறங்க வேண்டியிருந்தது.

''அம்மா வாருங்கோ...'' எவனோ கொச்சையாய் தமிழில் கூப்பிட்டான். மொட்டையடித்து, மீசை வைத்து பின்பக்கம் சுண்டு விரல் அளவுமுடியை குடுமி மாதிரி தொங்கவிட்டிருந்தான்.

''இவனுங்கதான் முண்டா'' பயணிகளில் ஒரு பெண் தெரிந்தது போல பேசினாள்.

''என்னது?''

''இவனுங்களைத்தான் முண்டான்னு சொல்லுவாங்க.''

''முண்டா இல்லை. பண்டா.''

''ஏதோ ஒண்ணு...துட்டு புடுங்குவாறான்னு சொன்னாங்க.''

''பல்லைக் காட்டினாத்தான் புடுங்குவான். பேசாத வாங்க ''

பெண்கள்தான் முதலில் இறங்கினார்கள்.

பஸ் காண்ட்ராக்டர் அவனுக்குத் தெரிந்த பண்டாவைக் கூட்டி வந்தான்.

''ஆளுக்கு பதினோரு ரூபா. கரைல உட்கார்ந்து கங்கைக்கு பூஜை செய்துட்டு குளிக்கலாம். ஒத்தையாவும் குளிக்கலாம். புருஷன் பொண்டாட்டியாவும் கை கோர்த்து குளிக்கலாம். வீட்டுலேர்ந்து அஸ்தி கலசம் எடுத்தாந்து வுடறவங்க தனியா போட்ல போய் நடு கங்கைல வுடணும். உடனே இங்க கவுத்துறாதீங்க.''

''போட்ல போறமா?''

''குளிச்சிட்டு ஒவ்வொரு காட்டா பார்க்கறோம்.''

''அது என்னா காட்டு?''

''பல படித்துறை இருக்கு. ஒவ்வொரு துறைல குளிக்கறது ஒவ்வொரு மாதிரி புண்ணியம். இது தச அஸ்வமேதகாட்.''



''அப்படீன்னா...''

''பத்து அஸ்வமேத யாகம் பண்ண இடம்.''

''அஸ்வமேத யாகம்னா?'' மறுபடி அந்த நாற்பது வயதுப் பெண்மணி கேட்டாள்.

''எனக்குத் தெரியாதும்மா...ஆளை வுடு.''

''அஸ்வம்னா குதிரை. குதிரையை அலங்காரம் பண்ணி பல நாடுகளுக்கு அனுப்பி அது போற திசைல இருக்கற நாடுகளைப் போர் செய்து ஜெயிச்சு இனி ஜெயிக்க நாடு இல்லைன்னு திரும்பி வந்து அப்படி ஊர்வலமா வந்த குதிரை வெட்டி பலி கொடுத்து செய்யற யாகம்'' சீனுவாசன் பஸ் காண்ட்ராக்டர் திரும்பிப் போக விளக்கினான்.

''யார் அப்படி செய்தது?''

''நான் இல்லை.''

''அட சொல்லுங்களேன்.''

''பல ராஜாக்கள் பல நேரம்செய்திருக்கலாம். செய்த இடம் இதுவா இருக்கலாம்.''

''அப்பவும் காசி உண்டா?''

''காசிபழைய நகரம்.ரொம்ப பழைய நகரம்.புராண காலத்துலியே காசி உண்டு.''

''இந்தக் கோட்டையெல்லாம் யாருது?''

''உங்களை மாதிரி நானும் மெட்ராஸ்லேர்ந்துதான் வந்திருக்கேன். எல்லாத்தப்பத்தியும் எனக்குத் தெரியாது.

'காசில இருக்கறகங்கைல குளிச்சாபாவம் போவுமா?

''போவும்னு நம்பிக்கை. நம்புனா போவும்.''

''நீங்க நம்பறீங்களா?''

''ஏன் இந்தக் கேள்வி?''

''நீங்க நம்பினா நானும் நம்பலாமேனுட்டு தான்'''

''அடடா... நம்பி குளிங்கம்மா...'' நரசிம்மன் இடைபுகுந்து அதட்ட அந்த அம்மாள் மற்ற பெண்களின் கைபிடித்து கங்கையில் கால் வைத்தாள் முழுகி பூஜை செய்தார்கள். பூஜை செய்துவிட்டு முழுகினார்கள். காசியில் இருக்கும் முக்கிய தெய்வங்கள் பெயர் சொல்லி பண்டா மந்திரம் சொல்ல, கிளிப்பிள்ளை மாதிரி தொடர்ந்து சொல்லி முழுக்குப் போட்டார்கள்.

நரசிம்மன் 'ப்ளக் ப்ளக்' என்று இருவத்தோரு முழுக்குப் போட்டான். சந்தானத்தையும் போடச் சொன்னான். அப்பா, தாத்தா, கொள்ளுத் தாத்தா, அவர்கள் மனைவியர் வழிகள், ரிஷிகளின் பத்தினிகள் என்று பெயர் சொல்லி முழுகி முழுகி எழுந்தான்.

குளிர்ந்தது. வெளியே உள்ள வெய்யிலுக்கு சம்பந்தமின்றி சில்லென்று நீர் உடம்பை கௌவிக் கொண்டது. காலின் கீழ் கூழாங்கற்கள் மிதிபட்டன. கரைப்படிகள் பாசிப் போர்த்திக் கொண்டிருந்தன. தண்ணீர் பச்சையாய் தாவர வாசனையாய் இருந்தது.

நீச்சல் தெரியுமா...கரையில் உட்கார்ந்து நதியைப் பார்த்துக் கொண்டிருந்த சீனுவாசனை நரசிம்மன் கேட்டான்.

''அந்தம்மாவை ஜாக்கிரதையா பார்த்துக்கங்க, நரசிம்மன்'' பஸ்ஸில் சுருண்டபடி வந்த கிழவி முகமெல்லாம் சந்தோஷமாய் கங்கையில் இறங்கினாள். புதுப் புடவையுடன் முக்குளித்தாள். நதியின் இழுப்புதாங்காமல் தடுமாறினாள்.



''அப்படியே கரைல உட்கார்ந்து குளிங்கோ. ரொம்ப இழுப்பு.''

''தேங்ஸ்'' கிழவி மறுபடி முழுகினாள், தலை முடிச்சு பிரிந்து கொக்கின் சிறகென நரைத்தமுடி விரிந்து வழிந்தது.

''ரொம்பநாள் ஆசை...கங்கைல முங்கி முங்கி குளிக்கணும்னு. இருவது வயசுல வரணும்னு நினைச்சேன். முடியலை நாப்பதுல நினைச்சேன் முடியலை. அறுவதுல நினைச்சேன் முடியலை. எழுபத்தி நாலு இப்பதான் லபிச்சிருக்கு.''

''எனக்கு அடிச்சுண்டு போயிடுவேளோனுகவலையா இருக்கு.''

''போனா போட்டம். என் ஸீட்ல யாராவது உட்கார்ந்துப்பா.''

''போறது நம்மூர்ல போலாமே...''

''காசில போனா விசேஷம். காசியில் இறக்க முக்தி. இங்க அரிச்சந்திரா காட் எங்க இருக்கு?''

''தெரியாது. கேட்கணும்.''

''அது பார்த்தாதான் காசிப் பயணம் பூர்த்தியாறதாம்.''

''ஏன்?''

''இங்க செத்துப் போறவங்களை கங்கைல குளிப்பாட்டி இங்கேய எரிச்சு, சாம்பல் கரைச்சுடுவா. அப்புறம் பிறவியில்லையாம்.''

''நம்பிக்கை.''

வெறும் நம்பிக்கையா...ஆயிரக்கணக்கான வருஷத்து நம்பிக்கை. கோடானுகோடி ஜனங்களின் நம்பிக்கை. அப்போது அது உண்மைதானே...''

''இருக்கலாம். கரை ஏறிடுங்கோ.''

''பதினோரு முழுக்குதான். ஆச்சு இன்னும் பத்து முழுக்கு...''

''உடம்புக்கு கெடுதல். தண்ணி அழுக்கா இருக்கு.''

''பல பாவம் கழுவின நதி. கொஞ்சம் அழுக்காத்தான் இருக்கும்.''

''பொணத்தை பாதி எரிச்சுட்டு போட்டுறானாம்.''

இந்த வேகத்துக்கு பொணமாவது ஒன்னாவது...''

நீரிலிருந்து பார்க்க கரையின் அழகு மறுபடி மறுபடி பார்க்க வைத்தது. இரண்டு பர்லாங் தொலைவு படித்துறை, படிக்கட்டுகள், மாட மாளிகைகள், புதிய கட்டிடங்கள், படித்துறைகள் பிரிதது மணி கர்ணிக்கா, அரிச்சந்திரா, தச அஸ்வமேதா என்று பெயரிட்டிருந்தார்கள். முக்கியமான இடங்களின் பண்டாக்கள் மரப்பலகையில் வட்டமான தாழாங்குடையில் அமர்ந்து பூஜை செய்வித்துக் கொண்டிருந்தார்கள் கும்பாச்சியாய். கோயில் கோபுரங்கள். கோபுரங்களில் சிகப்புக் கோடுகள். கொடிகளில் ஜரிகை பாடர்கள். ராஜஸ்தானி கட்டிடம். ஆணும், பெண்ணுமாய் கூட்டம். உடையுடன் நீரில் இறங்கிற்று. மார் மறைக்கும் வழக்கமே இல்லாத நாட்டுப்புறப்பெண்கள் லஜ்ஜையின்றி நீராடினார்கள்.

''போலோ...கங்கா மாதா கி ஜெய் ..''

டிஸைன் ரவிக்கையை தலை வழியே கழட்டி விட்டு வெறும் மார்புடன் ஒருநடுத்தர வயதுப்பெண் சட்டென்று நீரில் அமிழ்ந்தாள் துள்ளி எழுந்து மறுபடி அமிழ்ந்தாள்.



அங்கே யாரும் அதற்கு அலட்டிக் கொள்ளவில்லை. நரசிம்மன் அரண்டு போனான்.

''அங்கே பார்டா'' என்று சந்தானம் சொல்ல வேகமாய் திரும்பினான். நதி இழுத்தது. கால் முன் வைக்க புரட்டிவிட்டது. உடம்பு படுக்கைவாட்டில் கிடக்க, சரட்டென்று ஓடும் நீர் கைத்தடியாய் பிடித்துக் கொண்டு ஓடிற்று ப்ளக்கென மூழ்கி உதைக்க காலுக்கு கரை தட்டுப்படவில்லை, அமிழ இன்னும் இழுத்துப் போயிற்று. வேகமாயிற்று.

''ஐயோ...ஐயோ...'' என்று யாரோ பெண்மணி கத்தினாள்.

சீனுவாசன் எழுந்து நிற்க, ஒரு பண்டா மீன் கொத்தி போல் நீரில் பாய்ந்தான். நடு நதிக்குப் போகும் நரசிம்மனை இரண்டு கை வீச்சில் எட்டினான். பின் முடி பிடித்துத் தூக்கி நீருக்கு மேல் நிறுத்தினான். கரையில் நீராடிய பலபேர் படிகளில் ஏறினார்கள். அந்தப் பண்டாவையே பார்த்தார்கள். பண்டா கரையில் இருப்பவனிடம் ஏதோ ஹிந்தியில் கத்த, கரை ஆள் கயிறு கட்டின பெரிய டின்னைத் தூக்கிப் போட்டான். கயிறை நரசிம்மன் தோளில் மாட்டி டின் தூக்க, நரசிம்மன் மிதந்தான். மிதந்தவனை கரைக்கு இழுப்பது எளிதாய் இருந்தது. கரையில் கால் தட்டி நின்ற நரசிம்மனை இழுத்து படியில் போட்டார்கள்.

இத்தினை பேரு நின்னு குளிக்கறமே...உனக்கு மட்டும் என்னா முங்கற ஆசை. இதுதான் பாப்பாரத்திமிருன்றது தெரியாதது தெரிஞ்ச மாதிரி காட்டறது. இந்நேரம் ஆத்தோட போயிருப்ப. தேவையா இது.''

அந்த பண்டா கரையேறி நரசிம்மனை ஒரு முறை பார்த்துவிட்டு நீர் பிழிந்தபடி படியேறிப் போனான்.

ஆளுக்கு ஆள் நரசிம்மனைச் சொற்களால் தாக்கினார்கள்.

அந்த அம்மாள் பதினெட்டு, பத்தொம்பது என்று முழுக்குப் போட்டுக் கொண்டிருந்தாள். சீனுவாசன் இறங்கி முக்குப்போட, ''யோவ்...யோவ்...'' என்று அதட்டினார்கள்.

சீனுவாசன் நிதானமாய் நீந்தி மறுகரை நோக்கிப் போனான். அவன் போன விதம் பார்த்தவருக்கு, திரும்பி வருவான் என்ற நம்பிக்கை கொடுத்தது.

# 4

நரசிம்மன் கண்கள் வானம் பார்த்தன. பயமும் அயர்ச்சியும் அவனை மல்லாந்து படுக்க வைத்தது. பிரம்புக் குடைக்குக் கீழ் மரப்பலகையில் வந்து அமர்ந்ததும் ஒரு சோர்வு பற்றிக் கொண்டது.

''இங்க சாகவா இவ்வளவு தூரம் வந்தோம்...''

''சாகலையே...''

''செத்துட்டேன். காலுக்குக் கீழ் நதி நீர் உடலை புரட்டியபோது சந்தோஷமாய் இருந்தது இழுத்தபோது பயம் வந்தது. எட்டிகரை நோக்கிப் போக உடம்பு முயற்சித்தபோது வா என்னிடம் என்று நதி வலுவாய் இழுக்க சடேரென்று ஒரு கிலி பற்றிக் கொண்டது. இழுத்தநதி அப்படியே உள்ளே அழுத்திக் கொண்ட போது மூச்சிலிருந்து புறப்பட்ட நீர் கொப்புளங்களுக்கு அப்பால் யாரோ நிறையபேர் இருந்தார்கள்.

மனிதர்களா... மனிதர்களின் நிழல்களைப் போன்ற மனிதர்களா? தெரிந்தவர்களா? தெரியாதவ'ர்களா?



திமிறி எழுந்த போது கைப்பற்றிக் கொண்டார்கள். வா என்றார்கள், எதுக்கு அங்கே...வந்துரு என்றார்கள். உதறி மேலே எழும்பி ஒரு கை காற்று சுவாசிப்பதற்குள் கால் பிடித்து இழுத்தார்கள். உள்ளே போனதும் அழுத்திக் கொண்டார்கள்,

நண்பர்களா? பகைவர்களா?

சட்டென்று காது அடைத்துக் கொண்டது. மூச்சு திணறியது.

''வேணாம்...வேணாம்...நான் வரலை...''

''வந்து தானே ஆகணும்...''

''இல்லை, இப்ப வரலை.''

''வந்துரேன், எம்புள்ளையில்லையா நீ''

அப்பா உருவம் தெரியவில்லை. உணர்வு சொல்லியது அது அப்பா. அந்த நொடிதான் பயங்கரமானது. குலை நடுங்க வைப்பது.

ச்சீ..,விடு கையை என்று உதறி கால் எட்டி அந்த உணர்வை உதைத்து மறுபடி தலை தூக்கி உடம்பு உயர்த்தி நீருக்கு மேல் கால் தேடிய போது அந்த பண்டா முகம் சடேரென்று எதிரே நின்றது. கொத்தாய் தலை மயிர் பிடித்து பத்து நொடிகள் நீருக்கு மேல் நிற்க வைத்தது.

நாலு தடவை மூச்சு இழுத்து விட, நுரையீரல் தொடர்ந்து செயல்பட உடம்பில் வலுவேறியது.

பண்டா தோளை இறுகப் பற்றியபோது பண்டா தண்ணீரில் முழுகி நகர்ந்து பின் பக்கம் வந்து உடம்பை மறுபடி தூக்கினான். நரசிம்மனை மல்லாக்கப் புரட்டி முதுகில் போட்டு கரை நோக்கி நீந்தினான். காப்பாற்றுகிறான் என்று தெரிந்தது. கண் மூடிக்கொள்ள தோன்றி

யது. கை, காலை அசைக்காது கிடக்கத் தெரிந்து விட்டது. அசைக்க பண்டாவுக்கு சிரமம். போடா போ என்றுவிட்டு விடுவான்.

உள்ளே வா... வந்துரு என்று அவர்களும் இழுப்பார்கள்.

போன போது விசுக்கென்று போனது போல் இருந்தது. வரும்போது பண்டா மாறி மாறி கை போட்டு நீந்தி கரையை அடையும் சிரமம் தெரிந்தது.

வெளியே போவது சுலபம். உள்ளே வருவது கடினம். தொடை உயர ஆழத்தில் கால்கள் கரை தொட, உடம்பு பாய்ந்துப் படியைப் பற்றிக் கொண்டது. குழந்தை போல் கைகளும், கால்களும் ஊன்றி ஏற வைத்தது.

புரண்டு சரிந்த போது எல்லோரும் அவன் பயத்துக்கு சிரித்தார்கள்.

நரசிம்மன் சிரிக்கவில்லை. பேசாது இருந்தான்.

அவரவர்கள் தனக்கு தோன்றியதைப் பேசினார்கள். நரசிம்மன் பேசவில்லை. இன்னும் நான்கு படிகள் ஏறி மரப்பலகையில் அமர்ந்து அப்படியே சாய்ந்தான். பிரம்புக்குடை நிழல் மேலே படிந்தது. வானம் தெரிந்தது.

வானத்தில் எல்லோரும் வரிசையாய் நின்றிருந்தார்கள்.

அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி உறவுகள், நண்பர்கள் எல்லோரும் நின்றிருந்தார்கள், அவர்களும் சிரித்தார்கள். அவர்களும் சிரித்தார்கள்,

''வந்து தானே ஆகணும்.''

''வர மாட்டேன்.''



''என்னிக்காவது ஒரு நாள் வந்து தானே ஆகணும்.''

''ஏன்?''

''இது சாசுவதமில்லையே.''

''அது... இப்படி நிழலா காத்தா நிக்கறேளே.. அது?''

''இதுவும் சாசுவதமில்லை.''

''அப்ப எது சாசுவதம்.''

''வா சொல்கிறேன் '' மேலே அழைத்தார்கள்.

அங்கு போய்தான் தெரிந்து கொள்ள வேண்டுமா? இங்கே இப்போதே தெரிந்து கொள்ள முடியாதா? எது சாசுவதம்? எது என் இயல்பு? எப்போது நான் அழியாதிருப்பேன். இப்போது இங்கே தெரிந்து முடியாதா?

''ஏன் தெரிந்து கொள்ளணும்?'' மனசு கேட்டது.

''தெரிந்தால் பயமின்றி இருக்கலாம். போகலாம் வரலாம். போகவோ, வரவோ, கலக்கமின்றி இருக்கலாம்.''

''இது பொய்யெனில் எது நிஜம்?''

தேவைக்கு அதிகமாய் பயந்து விட்டேனோ..,இது பண்டா காப்பாற்றிய பிறகு வரும் எண்ணம். பயந்தது நிஜம், எதற்கு பயம்? ஏன் பயம்? எனக்கு எந்த பயமுமில்லை. இது சாசுவதமில்லை. எனக்குத் தெரியும். ஒரு நாள் போகத்தான் வேண்டும். எனக்கு பயமில்லை. போகு முன் போகும் இடம் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். ஆமாம். எப்போ போவேன்.

எதிரே வானம் மட்டும் இருந்தது. அவர்களைக் காணோம். வா வா என்று கூப்பிட்ட வர்

களைக் காணோம். வானம்..,துல்லிய நீல வானம் மட்டும் இருந்தது. ஏன் போய் விட்டார்கள்...எப்போ போவேன் என்று கேட்டது தவறா. அது ரகசியமா? மறை பொருளா...தெரிந்து கொள்ளக் கூடாத விஷயமா? ஏய்... யாரங்கே...அப்பா...அம்மா...யார் நீங்கள்? எங்கே போனீர்கள்? பதில் சொல்லுங்கள்.

எனக்குத் தெரியும், இது சாசுவதமில்லை என்று சுத்தமாய் தெரிகிறது எப்போ எப்போ...எப்போ...நான் புறப்பட வேண்டும். எந்த தேதி, கிழமை என்ன நேரம்... எவ்விதம்?

எந்த பதிலும் இல்லை. மறுபடி நீரில் இறங்கினால் பதில் சொல்வார்களா? முழுங்கி பேசினால் விவரம் தெரியுமா?

நரசிம்மன் எழுந்து படியிறங்கி மறுபடி நீரில் இறங்கினான்.

''அந்த ஆளைப் பாரேன் மறுபடி குளிக்கப் போறான்...''

எவனோ கத்தினான்.

''எதுக்குடா?'' சந்தானம் தடுத்தான்.

சீனுவாசன் மண் கட்டியைக் குழம்பி உடம்பு முழுவதும் தேய்த்துக் கொண்டிருந்தான்.

நரசிம்மன் இடுப்பளவு ஜலத்தில் நின்று மறுபடி முழுக்கு போட்டான். கண்கள் திறந்து நீரில் தேடினான். அவன் விட்ட நீர் குமிழிகள் தவிர நீரில் வேறெதுவும் தெரியவில்லை. ஆனால் தெரிந்து கொள்ள வேண்டும். இது தெரிய நீரில் தேடக் கூடாது. வானத்தில் பார்க்கக் கூடாது. மண்ணுள் தெரியாது.



இது நெஞ்சுள் பார்க்கும்விஷயம். இது இல்லை. இது சாசுவதம் இல்லை என்று முடிவு கட்டியதுபோல அந்த எண்ணம் திடப்பட்டது போல மனது திடப்பட வேண்டும். இது இல்லை. இது இல்லை...இது இல்லை என்று தள்ளித் தள்ளி தேட வேண்டும்.

எது உண்மையோ, எது சாசுவதமோ, எதுவுவற்று எல்லாமுமாய் இருக்கிறதோ அதற்கு நமஸ்காரம். அது எனக்கு தன்னைக் காட்டட்டும். அதுவே முன் வந்து என்னை அறியச் செய்யட்டும். மனதின் நிழல்களைக் கண்டு பயப்படாமல் நான் என்னுள் தரிசனம் செய்ய உதவட்டும். மரணம் கண்டு பயப்படாமல் வைக்கட்டும். கைகூப்பி கண்மூடி நீருக்குள் நரசிம்மன் இறங்கினான். மூச்சு விட்டான். காற்று நுரையீரலிலிருந்து நீர் வழியே வெளியேறும் சப்தம் கேட்டது மறு மூச்சிக்குக் காத்திருந்தான். நான் வெறும் மூச்சு இல்லை தோற்பை இல்லை. நுரையீரல், இருதயம், குடல், உடம்பு, இல்லை, எது நான்? நான் யார்...காது அடைத்துக் கொண்டது. குப்பென்று ரீங்காரம்எழுந்தது. சங்கொலியாயிற்று. உடம்பு மேலேடு மறுபடி அமிழ்ந்தது. யாரோ அவனுள் மிகுந்த பிரியத்துடன் இறங்கினார்கள். நிரந்தரமான சந்தோஷம் போல் உள்ளே தங்கினார்கள்.

உடம்பற்ற உடம்புள் ஒன்று விழித்துக்கொண்டது.'' இதுவும் அதுவும் ஒன்றே. உள்ளதும் வந்ததும் ஒன்றே. அகமும், புறமும் ஒன்றே... எல்லாம் அதுவே. நீர்க் குமிழி... நதி இரண்டும் வெவ்வேறா? குமிழுக்கு பூண் போட்டு காப்பாற்ற முடியுமா? குமிழி உடைந்தால் நதி. குமிழி தனக்கு பெயரிட்டுக் கொண்டு தான் என குதித்துக் கொண்டு அலைகிறது.

பிறந்த இடத்திலிருந்து மேலுக்கு போவதற்குள் பெரும் பயணம். நெடுநாள் வாழ்வு என்று மயங்குகிறது. இது கால மயக்கம். குமிழியின் பார்வையிலிருந்து அதன் வாழ்வுவெகு நேரப் பயணம். வெளியே இருந்து உள்ளே

பார்க்க இது சில சொடுக்கு விநாடிகள். எதுவுமில்லா ஆட்டம். உடம்பு ப்ளேக் என்று மேலே வந்து நரசிம்மன் சிரித்தான்

''கொஞ்சம் மண் கட்டி கொடுங்க சீனுவாசன்...'' கை நீட்டினான்.

கங்கையில் அடிமண், நைஸ் களிமண் ஒரு கை வாங்கி உடம்பெல்லாம் தேய்த்தான். மண் சில்லென்று பற்றிக் கொண்டது.

ஆறு கடக்கும்வரை ஓடம் ஒழுங்காக இருக்க வேண்டும். ஆற்றைக் கடந்தபின் ஓடத்தைத் தூக்கிக் கொண்டு அலைவதுண்டா?

குமிழி மேலேற மேலேற வெடித்துபோகப்போகிறது. மூட்டிக்கொண்டு சாவானேன். குமிழியும் குமிழியும் இடித்துக்கொள்வானேன்.

மறுபடி முழுக்குப் போட சந்தோஷமாய் இருந்தது.

''சீனுவாசன்...''

''சொல்லுங்கோ...''

''அரிச்சந்திர॥ காட் போயிட்டு வரலாமா?''

''போகலாம்.''

நகரத்தார் சத்திரம் நடந்து வந்து சேர்வதாய் சொல்லிவிட்டுசந்தானம் உடன்வர மூவரும்போனார்கள்.

''எங்க போறானுங்க இந்த மூணு பார்பான்களும்.''

''சுடுகாட்டுக்கு.''

''என்னது?''

''அரிச்சத்திரா காட்னு ஒரு மயானம் இருக்கு. அங்க பொணம் எரியறத பார்க்கப் போறானுங்க.''



''அட கஷ்டகாலமே...இதுக்கா காசிக்கு வந்தோம்.''

''யோவ் இருங்கய்யா...நானும் ;வரேன்'' ஐம்பது வயது ஆள் அவர்கள் பின்னே ஓடினார்.

''என்னாங்க... என்னையும் கூட்டிக்கிட்டு போங்களேன்.''

''வேணாம் நீங்க பயந்துருவீங்க.''

''இல்லை நான் பயப்பட மாட்டேன். எனக்கு பார்க்கணும்.''

''ஏங்க நானும் வரேன்.'' அவர் மனைவி நாற்பத்தைந்து வயது பெண்மணி அவர்கள் பின்னே உலர்ந்த துணி அள்ளிக்கொண்டு ஈரத்துணி பின்னலிட ஓடினாள். அவர்கள் காத்திருந்து கூட்டிப் போனார்கள்.

''இவ அவரு பொஞ்ஜாதி இல்லை தெரியுமா உனக்கு ''

''அப்படியா...யாரு இந்தம்மா?''

''கூத்தியா... பொண்டாட்டிய ஊர்ல வுட்டுட்டு மெட்ராஸ்ல இவளோட இருக்காரு...''

''இங்கியுமா இதைக் கூட்டிக்கிட்டு வரணும்?''

''கங்கைக்குக் குளிக்கப்போய் சேத்தை பூசிக்கிட்டுவர கதைதான்.''

கரையில் உள்ளோர் பேச அவர்கள் பேசாமல் படியோரமாய் நடந்து போனார்கள்,

சிதை இப்படி எரிவதைப் பார்க்க வேண்டும் என்று அவளுக்கு வெகுநாள் ஆவல். அப்பா எரிந்தபோது அவளைப் பார்க்கக் கூடாது என்றார்கள். ஆனால் நூறு அடி தொலைவிலிருந்து அவள் பார்க்க நேரிட்டது.

''பொம்பளைங்க யாரும் காட்டுக்கு வரக்கூடாது. நம்மூருல வர பழக்கமில்லை. எல்லாம் வாசலோட சரி.''

''அப்ப அங்கித்து செலவுக்கு யாரு கொடுக்கறது?''

''கேட்டு வாங்கினு போ வேண்டியதுதான்.''

''அப்ப ரெண்டாயிரம் வாங்கிக்க. கணக்கு எழுதி பாக்கிக் கொடுத்துரலாம்.''

''ரெண்டாயிரம் எப்படிங்க போதும்.''

''மூவாயிரம வாங்கிக்க.''

''நாலு கேளுப்பா...மறுநா செலவு இருக்கும்ல.''

''ஆமமா...''

''எழுநூத்தி ஐம்பது போதும். சும்மா ரெண்டு, மூணு, நாலுன்னு வாய்க்கு வந்தது சொல்றானுங்க. ஆயிரம் கொடு. ஒழியட்டும்.''

''ஆயிரமா... நான் வரலை காட்டுக்கு. ஏதோ பழகிட்டமேன்னு இருக்கற வேலையை வுட்டுட்டு கிளம்பினா...''

''காட்டுக்கு வராதவங்க வாய்க்கரிசி போட்டுரலாம்.''

''நின்னு எதுனா பேசி வாங்கி வா. நைட்டுசெத்தவர் பேரு சொல்லி ஒரு பாட்டில் வாங்கிக்கலாம்.''

''ஆயிரத்துக்கு மேல அஞ்சுபைசாதர மாட்டாளாம்.''

''வுட்டுரு. அரிசி போட்டுட்டு போலாம்,''

''அப்ப பாட்லு?''

''எங்கனா பாக்கெட் வாங்கிக்கலாம்.?''



நாலு பேரே மிஞ்சினார்கள். அப்பா முன்னால்போக சைக்கிள் ரிக்ஷாவில் அம்மாவும், மனோன்மணியும் பின் தொடர்ந்தார்கள்.

''ரொம்ப வருத்தமா இருக்குதாம்மா?''

''இல்லடி. நல்லபடியா வாழ்ந்தோம். ஒரு கதை முடிஞ்சுது. இப்படி எல்லாம் ஒதுங்கிப் போறாங்களே. அதுதான் வேதனை. உறவே இல்லாத போச்சே... ஏன்னு புரியலை...''

''வாழ்ந்த போது ஒட்டலை. செத்த போது மட்டும் எப்படி ஒட்டும். கடனுக்கு வந்தான். காசு தேறாதுன்னு போயிட்டான்.''

''எத்தினி வச்சுரக்கே...''

''இரண்டாயிரம்''

''அத்தினி ஆவுமா?''

எண்ணூறு ஆயிற்று. மறு நாள் நூறு தேவைப்பட்டது. அப்பாவின் நண்பர்கள் நின்று செய்தார்கள். அண்ணனின் பிள்ளை எரியூட்டினான். அண்ணன் எரிந்து எட்டு வருட மாயிற்று. அதுதான் அப்பாவுக்கு மரணமும் ஆனது.

''அப்புறம் செய்யறது உண்டா? கல்லுநட்டு பதினாறாம் நாள் படையல் வச்சு...''

''ஒண்ணும் வேணாம் போ...''

''ஏம்மா?''

''உறவே இல்லை. யாருக்கு சோறு இப்ப'''

''செத்தவங்களுக்கு சமாதானமாகணுமே.''

''அது பொய். நான் நம்பலை, செத்தவன் பேரு சொல்லி இருக்கிறவன் திங்கறதுக்கு வழி.''

''நிச்சயமா வேணாமா?''

''எப்பன்னா காசி, கயான்னு போனீன்னா சொம்புல அடைச்சுக் கொண்டு போய் கரைச்சுடு.''

உறவு காரியம் செய்யாததற்கு தூற்றியது. அப்பாவின் நண்பர்கள் அப்போதும் துணை நின்றார்கள்.

''நல்ல யோசனை. ஒரு தடவை கயால பண்ணிட்டா போதும். மாச சிரார்த்தம், வருஷ சிரார்த்தம், எதுவும் வேணாம். மனசுக்கும் நிம்மதி ஆனா புள்ளைதான் பண்ணனும்.''

''புள்ளை இல்லையே... பேரனை மருமவ அவ அம்மா வூட்டுக்கு கூட்டிட்டுப் போயிட்டா...'' அம்மா வருந்தினாள்.

''பொண்ணு பண்ணலாம். ஆனா கல்யாணம் ஆகணும்.',

''அது எப்ப ஆகி, இது எப்ப கரைஞ்சு...''

''சவலைப்பட வேண்டாம். அவர் தெய்வமா நின்னு நடத்தி வைப்பார்.''

இனிமையான வார்த்தைகளால் நட்பு தேறி நிமிர வைத்தது. ஒரு நட்பு அவளை மலர வைத்தது.

அன்றைக்கு படையல் போட்டிருக்க வேண்டும். போடதது தப்போ...அப்பா ஆவியாய் தவிப்பாரோ என்று அம்மாவும்,மகளும் கலங்கிக்கொண்டிருந்த நேரத்தில் வாசலில் நிழலாடியது.

''முனுசாமி நாயக்கர் வீடு...?''

''வாங்க. இந்த வீடு தான்.'' தடிமனாய் உயரமாய், வழுக்கைத் தலையாய், கொஞ்சம் பல் தூக்கலாய் பார்த்ததுமே வியாபாரி என்கிற கோலமாய்...



''நீங்க மரகதம்மாளா. இது மனோன் மணியா... ஐயோ...ஐயோ'' வந்தது அலறிற்று. அம்மா அழுதாள். சட்டென்று சரியாகி ''யாரு... தெரியலையே'' என்றாள்.

''நெருப்புப் பெட்டி புக் பண்ணிட்டு பஸ் டிக்கெட் போட்டாரு. திரும்பி வருவேன்னு தோணலை. இத்தோட போதும். பிஸினஸ்னாரு. என்ன திடீர்னு தப்பா பேசறேன்னு கேட்டேன். பதில் சொல்லலை. பஸ் ஏறினப்போ மொத்தமா கணக்குப் பார்த்து எதுனா மிஞ்சினா மனோன்மணிகிட்ட கொடுத்துறன்னாரு. எனக்கு கோவம் இறங்குப்பா பஸ்ஸ வுட்டு. பைத்தியம் மாதிரி பேசிட்டு போவாதேன்னேன்.''

எல்லாரும் போறவங்கதானப்பா. ஏன் கத்தற. நல்லா இருன்னாரு. கிறுக்கு பிடிச்ச மனுஷன்னு நினைச்சேன். நிசமா நெஞ்சுல ஏதோ பட்டு இப்படி பேசிட்டு போயிருக்குன்னு இப்ப புரியுது.

அழுது ஓய்ந்த பின் வந்தது, கணக்கு நோட்டு பிரித்துக் காட்டியது. லட்சத்து நாற்பதாயிரம் அப்பா காசு வரவில் இருந்தது. பேனா பிரித்து செக் எழுதி அம்மா காலடியில் வைத்து மறுபடியும் அழுகை. பிளிறல் அழுகை.

அம்மாவுக்கு துக்கத்தை விட ஆச்சர்யம் அதிகமாயிற்று.

இப்படியும் மனிதர்கள் உண்டா. கொடுத்த கடனுக்கு துணி வழித்து காட்டும் ஆட்களுக்கு நடுவே இப்படியும் ஒரு வியாபாரி உண்டா?

எனக்கு இரண்டு பையனுங்கம்மா நான்ஏமாத்திட்டு போயிடலாம். ஆனா, இந்த பாவம் அவனுங்க தலைல்ல ஏறும்.

''இருந்து சாப்பிட்டு போப்பா... நியாயத்துக்கு இன்னிக்கு படையல் போடணும். போடலை. மனோன் மணி...''

அப்பா சாப்பிடுவது போலவே அமைந்து விட்டது. படையலாய் போட்டால் என்ன... விருந்தாய் போட்டால் என்ன?

''முடிஞ்சு நல்ல விஷயம் பேசணும். மனோன்மணிக்கு எப்ப கல்யாணம்? என்ன ஏற்பாடு? நான் பார்க்கட்டுமா? உன்னைப் பத்தியே ஒன்னும் தெரியாது. எங்க வூட்டு பொண்ணுக்கு எப்படி மாப்பிள்ளை பாக்க சொல்றது?''

''நெருப்பு பொட்டி கமிஷன் ஏஜெண்ட், தயாரிப்பு கம்பெனி காட்டி விடுகிற ஆள், சிவகாசி பஸ் இறங்க பார்ட்டியைக் கூட்டி போய் ஹோட்டல்ல ரூம் போட்டு சரக்கு எத்தனை என்று கேட்டு பத்து ரூபாய்க்க நாலணா என்று கமிஷன் பேசி... ஏகப்பட்ட நெளிவு சுளுவு உண்டு கடன் வசதி, உடனே பணம் புரட்டும் வசதி என பலஆட்கள் தெரியும். நல்ல பார்ட்டி, அப்பா மாதிரி உண்டான பார்ட்டி தானே ரூம் போட்டு விட்டு தானே தேடிவரும். சில சமயம் மஞ்சள் மிளகாய் கூட வாங்கியது உண்டு. அப்போது கெட்டிப்பட்ட நட்பு. ரூம் போட்டு விட்டு நம்ம வீட்ல தான் சாப்பிடும். சண்முகக்கனி பொய் சொல்ல மாட்டான்னு தெரியும்.

சண்முகக்கனிக்கு உறவில் கல்யாணம். இரண்டு பையன்கள் படிக்கிறார்கள். நாற்பது வயது. ஒரு கூத்து என்னவென்றால், மனைவிக்கு நாற்பத்தி நாலு வயது. உறவு விட்டுப் போகக்கூடாதென்று பொய் சொல்லி கட்டி விட்டார்கள்.

''ஐயோ சரியா வராதே...''

''வரலை... உடம்பு பெருத்துப் போச்சு. தனியா உட்கார்ந்து வட்டி வியாபாரம் பண்ணது.''

''குடித்தனம்...''

''வந்தமா...சாப்பிட்டமா...போனமான்னு...''

''ஐயோ பாவமே.''

''வுடுங்க. போன ஜென்மத்துல பண்ண பாவம். மனோன்மணிக்கு நான் மாப்பிள்ளை பாக்கறேன். என்ன வயசு...''



''முப்பது...''

அங்கே தான் அதற்கும் பற்றிக் கொண்டிருக்க வேண்டும். நாப்பதும், முப்பதும் எத்தினி நல்ல பொருத்தம். ஆறு மாதம் வந்து போய்க் கொண்டிருந்த நட்பு ஒரு முறை வாய் விட்டு கேட்டது.

''அசிங்கம்தான் கண்ல வச்சு காப்பாத்தறேன். கூட்டிட்டு மறைக்கப் போறதில்லை. கூட்டிட்டுப் போய் காட்டறேன் கத்துவா. என்ன சொல்றே...''

''அம்மா...ஒத்துக்காது.''

''நீ என்ன சொல்ற?''

''சரி.''

தெரியாத பிசாசை விட தெரிந்த பூதம் மேல்.

ஒரு வருட காலம் ஊர் தூற்றியது. உறவுகள் எகிறி விழுந்தன. தெரு முகம் திருப்பிக் கொண்டது.

''நாடானை நம்பி கழுத்து நீட்டறியே...காப்பாத்துவான்னு நினைக்கறியா?''

''நாடாரோ...நாயக்கரோ, நம்பூதிரியோ, பிள்ளைமாரோ...நல்லவர், கெட்டவர் எதில் இல்லை. கெட்டது நடந்தால் ஜாதி இழுபடும். நல்லதெனில் பெயர் மட்டும் நிற்கும்.

மனோன்மணி சண்முகக்கனி பெயர் நின்றது.

ஒரு வாரம் சிவகாசி. ஒரு வாரம் சென்னை. கமிஷன் ஏஜெண்ட் சரக்கு வியாபாரி ஆகி போகும் போது சென்னை பொருட்கள், வரும் போது சிவகாசி பொருட்கள். அலையலுக்குக்காரணம் மனோன்மணி. அலைச்சலின்

விளைவு காசு. சென்னையில் கடை போடும் அளவு செல்வாக்கு. நாலு வருஷத்தில அம்மாவைத் தாங்கியது அதிகம். அவளுக்கு உள்ளே இன்னும் உறுத்துமோ தான் செய்த திருமணம் என்கிற பயம் காரணம்.

அம்மா மரணத் தருவாயில் அருகில் அழைத்து ''ரொம்ப சந்தோஷம். நீயும் இல்லைன்னா ரொம்ப பாழ்பட்டு போயிருப்போம்,எனக்கு வருத்தமேயில்லை'' என்று சொல்ல அம்மாவின் காலைப் பற்றி அழுதது. அழுத நேரத்தில் அம்மாவின் மரணம் நிகழ்ந்தது.

அவளையும் எரித்து இன்னொரு சொம்பில்அடைத்து வைக்கும்போது கயா போக வேண்டும் என்று தோன்றியது.

கூத்திதான். வைப்புதான். ஆனால் வாழ்க்கை சுகம். ஞாயிறு வீட்டில் தங்குவதில்லை. திருப்பதி, திருத்தணி, திருநீர்மலை, சோளிங்கபுரம், ஆவுடையார் கோவில்... கோயில் கோயிலாய் ரவுண்டடிப்பார்கள்.

''உனக்கு குழந்தையே பிறக்கலையே...வருத்தமில்லையா?''

''உங்களுக்குத்தான் ரெண்டு குழந்தைங்க இருக்கில்ல...? அது போதும்.உங்க பிள்ளைங்க என் பிள்ளைங்க தானே?''

''ஒட்டலையே.''

''ஒட்டும்.''

''உனக்குன்னு வேணுமா?''

''குழந்தை வேணும்னா கல்யாணம் பண்ணிக்கிட்டோம்...இல்லையே...உங்களுக்கு பொம்பளை சுகம் வேணும். எனக்கு ஆம்பளை துணை வேணும்''

''எதுனா செஞ்சுக்கிட்டியா?''



''பெருமாள் சத்தியமா இல்லை.''

''நான் செத்துட்டேன்னு வச்சுக்கோ...யார் காப்பாத்துவா...?''

''நாளைக்கா சாகப் போறீங்க...'' அவள் பதறவேயில்லை. ''அப்ப எனக்கு நாப்பது வயசு. அரைக் கிழவி. பத்துப் பதினைஞ்சு வருஷம் இருக்க மாட்டீங்களா? அப்ப செத்தா தனியா எங்கனா மடத்துல ஆசிரமத்துல இருப்பேன்.''

அந்த திடம் சண்முகக்கனிக்குப் பிடிக்கும். சண்முகக் கனியின் குழைவில் அவளுக்கு விருப்பம்.

பாட்டு தெரியாது. மந்திரம் புரியாது. சடங்கு கிடையாது. சம்பிரதாயம் தெரியாது,கண்மூடி கோவிலில் உருகி நிற்கும். பிரசங்கம் கேட்கப் பிடிக்கும். பிரசங்கம் என்றால் அந்தக்கிழவரின் கரகரத்த குரல்தான் காதுக்குள்ஒலிக்கும்.

காசியிலே...எங்கே...காசியிலே...எம்பெருமான்சிவன் நடனம் ஆடுகிறான். எப்படி? தழலாய் ஆடுகிறான். தழல்னா நெருப்பு. நெருப்பு டான்ஸ். என்ன மாதிரி நெருப்பு. சுடுகாட்டு நெருப்பு. மனிதர்களுடைய கர்வத்தைத் தின்றவனாய், எப்போதும் எரிகிறவனாய் அணையாத தழலாய் ஆடுகிறான்.''

''காசியிலே உள்ள சுடுகாட்டுநெருப்பு அணையாது''

''திருவண்ணாமலை பார்த்தா முக்தி. காசிலஇறந்தா முக்தி. அண்ணாமலை தீபம் பார்க்கணும். காசில எரியணும்,''

''ஏன்...அது சிவரூபம்... ''வாய் பிளந்து கேட்டார்கள். திருமுருகக் கிருபானந்த வாரியார் பேச்சு இருவருக்கும் அத்தனை விருப்பம். சடங்கு சம்பிரதாயம் தெரியாத அவர்கள் வாழ்க்கையில் பக்தியும், தேடலும் வர அவரே

காரணம். அவர் மறைந்தது தெரிய இருவரும் ஓடினார்கள். புருஷனும் அவர் மனைவியும் விம்மி, விம்மி அழுதார்கள். அவருக்கும் சேர்த்து கங்கையில் முழுகிக் கடன் தீர்க்க எண்ணினார்கள். குருவுக்கும் சிரார்த்தம் செய்ய வேண்டும் என்பது சம்பிரதாயம்.

ஒரு வாரம் கடை இல்லை என்று எழுதிவிட்டுகிளம்பினார்கள்.

சிவன் எதிரே தழல் ரூபமாய் நடனமாடிக் கொண்டிருந்தான். நல்லவேளை இந்த ஆண்கள் விவரம் தெரிந்து வழி காட்டினார்கள். இல்லையேல் இது பார்க்க மறந்தே போயிருக்கும்.

''அரிச்சந்திரா காட்னு பேரு...அரிச்சந்திரன் காவல் காத்த மயானம் இது. தினம் எட்டு பத்து பிணங்கள் எரியும். இதுவரைக்கும் அணைஞ்சதில்லை. எத்தினி மழை கொட்டினாலும் தினம் ஒன்னு எரியும். சாவித்துணி போர்த்தி பிணம் வந்தது. ராம் நாம் சத்யஹை. ராமனின் நாமமே சத்யம். பாடையோடு கங்கையில் மூன்று முறை முக்கினார்கள். சிதையில் வைத்தார்கள். நிறைய பேர் காசு கொடுத்து கட்டை வாங்கித் தந்தார்கள். யாரோ பிணம். யாரோ கட்டை தானம். எவரோ கொள்ளி. காசியில் மரிக்க வேண்டுமென்றே வயதான பிறகு இங்கே தங்கி விடுவார்களாம். சுத்துபத்து கிராமத்தில் இறக்கும் தருவாயில் இருக்கும் ஆட்களை எடுத்துக் கொண்டு வந்து விடுவார்களாம்.

பிணம் வந்து கொண்டே இருந்தது. இரண்டுருபாய் கொடுத்து ஒரு விறகு கட்டை. எண்பது ரூபாய் கொடுத்தால் சந்தனக்கட்டை. காசு கொடுத்து கட்டை வாங்கினவர்களே சிதையில் போடலாம்.

சண்முகக்கனி சந்தனக் கட்டை வாங்கி வர கணவனும், மனைவியும் சிதையில் வைத்தார்கள்.



யாரோ எவரோ என்ன மொழியோ...என்ன தேசமோ...என்ன பெயரோ தெரியாது...

அக்னியே...இந்த உடலை நன்கு பஸ்மம் செய்து இந்த உயிரை சொர்க்கத்திற்கு வழி நடத்துவாயாக.

ஏனோ மனோன்மணிக்கு பொங்கும் அழுகை வந்தது சண்முகக்கனி அவளை மெல்ல அணைத்துத் தேற்றினான்.

பொண்டாட்டியாவது ... வைப்பாட்டியாவது... புரிந்து கொண்டவர்கள் பாக்கியவான்கள். சொர்க்கம் அவர்களுக்கு அருகே இருக்கிறது.

## 5

இந்தக் கோயில் பார்க்காத போயிடக் கூடாது. அந்தக் கோயில் பார்க்காத போயிடக் கூடாது என்று பலரும் பலதும் பேசி காசியில் தெருத் தெருவாய் அந்த பஸ் பயணிகள் சுற்றினார்கள்.

அந்த ஆட்டோவுக்கு நான் கொடுத்தேனே...இந்த ஆட்டோவுக்கு நீ கொடுத்தியா... அதுல நாலு ரூபா நாப்பது பைசாமிஞ்சிடுச்சு...இப்ப அர்ச்சனை தட்டு ஆறு அம்பது மீதி ரெண்டு பத்து இப்ப இதுல கழிச்சுக்க கும்பல் கும்பலாய் கணக்குப் பேசினார்கள்.

இபபோது மன்னாந்தை சீனுவாசன், நரசிம்மன், சந்தானம், சண்முகக்கனி, மனோன்மணி என்று ஐவர் கூட்டம் ஆயிற்று.

''இன்னொரு ஆள் இருந்தா ஆறு பேர். இந்தப் பக்கம் ஆட்டோல ஆறு பேர் ஏத்தறான்.''

''அஞ்சு பேர் போறும். சௌகர்யமா இருக்கு. நெரிபட்டுக்கிட்டு போவானேன்.''

''அது சரி, செலவு அஞ்சால வகுத்துப் பிரிச்சுக்கு வோம்.''

''வேணாம்.''

''ஏங்க சீனுவாசன்?''

''இங்க வந்து என்ன கணக்கு. செலவு பண்ண வந்துருக்கோம்... பண்ணினா என்ன? காசில சுத்தற வரைக்கும் செலவு என்னது...''

''கயா நான் எடுத்துக்கறேன்...'' நரசிம்மன் பேசினான்.

''அப்ப அலஹாபாத் நாங்க...சரியா...'' மனோன் மணி சகஜமாய் புன்னகை செய்தாள்.

அவர்கள் காசு மறந்தார்கள், நட்பை முதலாக்கி னார்கள்.

''பூரி குமட்டுதுங்க'' சண்முகக்கனி வயிறு தடவி னான்.

''கடுகெண்ணை...''

''என்னாது?''

''அடில ஒரு காரம் தெரியும் பாருங்க. எல்லா பண்ட மும் கடுகெண்ணை.''

''ஐயே...ஏன் சொன்னீங்க?,'

''ஒன்னும் ஆவாது. முதல்ல புரட்டும் அப்புறம் சரியாயிடும்.''

நாற்பதடி நீள பஸ்ஸில் எல்லோரும் எல்லோரிடமும் சிநேகமாகி விடவில்லை. தானாய் குழுக்கள் பிரிந்தன இரவு நகரத்தார் சத்திரத்தில் வந்து தங்கின.



''உங்களுக்கு காசில என்ன சம்பிரதாயம்? என்ன செய்யணும்? ஏதும் தெரியுமா?'' மனோன்மணி சீனுவாசனைக் கேட்டாள்.

''எதுனா செய்யாது விட்டுறப் போறேன்னு கேட்க றேன்.''

''தெரியாதம்மா எந்த சம்பிரதாயமும் முக்கிய மில்லை. இது பழைய ஊர். புராண காலத்து இடம், கோடி கோடியா ஜனங்களைப் பார்த்த பூமி. பெரிய பெரிய முனிவர்கள், சாதுக்கள் மிதிச்ச மண். யுத்தம் பார்த்த தேசம். இது வயசுக்கு என்ன நாம ஒன்னுமே இல்லை. இந்த நினைப்போட பார்த்தா போதும். இதுக் குள்ள எல்லா சம்பிரதாயமும் நிக்கும்.''

''அப்பா, அம்மா அஸ்தி வச்சிருக்கோம். எங்க கரைக்கிறது...சிலர் காசின்றாங்க... சிலர் கயான்றாங்க...

''கயால செய்யலாம்'' நரசிம்மன் வழி காட்டினான்.

''ஏங்க?''

''இது அதைவிட அமைதியான இடம் அதனால சொல்றாரு.'' சீனுவாசன் விளக்கம் சொன்னான்.

''அப்படீங்களா?''

''அதுவும் சரி. சிரார்த்தம் செய்ய நல்ல இடம் கயா. இப்படி ஒரு பழக்கம்.''

''அங்கயே பண்ணிடலாம்.''

விசுவநாதர் கோயில் கால பைரவர் கோயில். ராமர் கோயில்,பாரதமாதாகோயில் என்று பலஇடம் அலைந்து விட்டு மூன்றாம் நாள் பஸ் கயாவை நோக்கி கிளம்பியது.

பீஹாரின் நடு மய்யத்தில் கயா இருந்தது. ஒரு சிறிய தெருவில் பஸ் நுழைந்தது.

இங்கும் நகரத்தார் சத்திரம் சம்பிரதாயத்தில் பற்று உள்ள நாட்டுக் கோட்டைச் செட்டிமார்கள் அங்கங்கே நிலம் வாங்கி சத்திரம் கட்டி ஒரு அறைக்கு ஏழு ரூபாய் என்று வசூலித்தார்கள். திறமையான ஆட்களை வைத்து நிர்வகித்துக் கொண்டிருந்தார்கள்.

எங்கு திரும்பியும் ஹிந்தியில் எழுதப்பட்ட போர்டுகள் பார்த்து அலுத்த கண்களுக்கு நகரத்தார் சத்திரம் என்று தமிழ்ப் பலகை பார்க்க பலருக்கு தமிழை உரக்கப் படிக்கத்தோன்றியது.

முதல் ஆட்களாய். அந்த ஐவர் குழு பஸ் விட்டு இறங்கி குளியல் அறை தேடியது. கடன்களை முடித்து வெளியே வந்தது.

எட்டு மணிக்கே எரிக்கும் வெயில்.

'ஒரு பாக்கெட் க்ளுகோஸ் வாங்கி வந்துடறேன்'' சீனுவாசன் படியிறங்க நரசிம்மன் தடுத்தான்.

''சாமி...இது எங்க செலவு... நானும் வரேன்.''

''ஏங்க குளிச்சுட்டு சிரார்த்தம் பண்றதா? இல்லை... யாரோ ஒரு பெண்மணி கேட்டாள்.

''எதுவும் குளிச்சிட்டுதான் செய்யணும்.'' சந்தானம் பதில் சொன்னான்.

''தப்பா கேட்டுட்டேன். குளிச்சு ஈரத்தோட செய்யறதா இல்லை...வேற துணி உடுத்தி...''

''தெரியாதும்மா...'' சந்தானம் பட்டுக்கொள்ளவில்லை.

''குடுமி வச்ச ஒரு ஐயரு இருக்காரு அவரைக் கேட்கலாம் வா...'' கேட்டவர்கள் நகர்ந்து போனார்கள்.

''ஏங்க குளிச்சிட்டு ஈரத்தோட செய்யறதா...''



''ஈரத்தோட தான் செய்யணும்.''

உடனே தடலடியாய் பதில் கேட்டது. சந்தானம் தலையில் அடித்துக் கொண்டான்.

''உள்ள பொணமா கிடக்கு...ஈரத்தோட செய்ய...'' கத்தினான் ''ஏங்க தவறா?''மனோன்மணி கேட்டாள்.

ஈரத் துணியோட அங்கபிரதட்சணம் செய்யலாம். கொள்ளி போடலாம். மத்தது செய்யறது இல்லை.''

''சொல்லுங்களேன்.''

''வேணாம். எதுக்கு வம்பு. ஏதோ செய்யட்டும்''

ஒரு ஆளுக்கு நாப்பது ரூபா. எத்தினிபேரு சிரார்த்தம் செய்யறீங்க பேர் கொடுத்தார்கள். காசு கொடுத்தார்கள். கயா நகரத்தார் சத்திர நிர்வாகி வள்ளியப்பன் பண்டா காட்டி விட்டார்.

வட இந்திய பண்டா இல்லை. கன்னட தேசத்து சாஸ்த்திரி. தமிழ் நன்றாய் பேசினார். தம்பியைக் கும்பலுக்கு அனுப்பி வைத்தார்.

நரசிம்மனும் சந்தானமும் அவரிடம் பேசினார்கள். விலாவாரியாய் தகப்பனுக்கும், தாய்க்கும் செய்ய வேண்டும் என்றார்கள்.

நானூறு ரூபாய் பேசப்பட்டது. ஹோமம் வளர்த்து உணவு போட்டு என்று விவரிக்கப்பட்டது.

''விஷ்ணுபாதம்னு ஒரு இடம். அங்க சிரார்த்தம். எங்க வீட்ல ஹோமம். பிறகு பிராம்மண போஜனம். அதுக்குப் பிறகு பிண்டதானம் வட விருட்சத்துல.''

''வட விருட்சம்னா...வடம் வடமா தொங்கற மரமா...எதுலயோ படிச்சேன்''

''தப்பு. வடம்னா ஆலம். வட விருட்சம்னா ஆல மரம்.''

கும்பல் விஷ்ணு பாத கோயிலில் வரிசையாய் உட்கார்ந்து உரக்கக் கத்தி மந்திரத்தைத் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தது. சந்தானமும், நரசிம்மனும் பஞ்சகச்சம் அணிந்து தனியே உட்கார்ந்து, உடுப்பி சாஸ்திரி மந்திரம் சொல்ல திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்,

''ஏங்க?''

''என்னம்மா...?'' சீனிவாசன் திரும்பினான்.

''அஸ்தி கரைக்க தண்ணியே இல்லையே...''

''இந்த ஊர்ல இது சிரார்த்தம் பண்ற இடம்''

''நாங்க அது பண்றதில்லை. அஸ்தி கரைக்கணும்''

''இங்க ஒரு நதி இருக்கு. அதுல தண்ணி இப்ப இருக்காது.''

''காசில கரைச்சிருக்கலாமே...''

'அலஹாபாத்தில கரைக்கலாம். கவலைப்படாதீங்க'

''அங்கியும் தண்ணி இல்லைன்னா''

''அலஹாபாத்ல நிச்சயம் கங்கை, யமுனை உண்டு. கண்ணுக்கு தெரியாத சரஸ்வதி போகும். கரைக்கலாம்''

''ஏம்பா இங்க வா?''வேறு பெண்மணி அழைத்தாள்

''என்னம்மா?'' சீனுவாசன் எழுந்தான்.

''ஈரத்துணியோட சிரார்த்தம் செய்யலாமா?''

''கூடாது''

''ஏன்''



''சாவு நடந்த வீட்லதான்...சடலம் இருக்கறபோது தான் ஈரந்துணி.''

''சோம்பேறி?''

''என்ன?''

''உன்னைய சொல்லல. ஒரு குடுமி வச்ச பாப்பான் தப்பா சொல்லிட்டான். இப்ப இந்த ஐயரு திட்றாரு. எழுந்து வேற உடுத்திக்கிட்டு வாங்கன்றாரு.''

''பாதி உலர்ந்து போச்சே.''

''எனக்கு மனசே ஆவலை. வேணாம் போய்யான்னுட்டேன்.' பேசியவள் கண்களில் கண்ணீர் முட்டியது.

''இவ்வளவு தொலைவு வந்துட்டு சிரார்த்தம்பண்ண முடியலை பாரு...''

''அம்மா... சிரார்த்தம்றது பெரிய விஷயம் இல்லை. சிரத்தையோட பண்றது சிரார்த்தம். மனசு நிறைந்து செத்துப் போனவர் நல்லபடியா மேலே இருக்கணும்னு பரிவா நினைச்சு பத்து பைசா தானம் கொடுத்தா போதும்...

''தம்பி...தப்பா நினைச்சுக்க மாட்டியே.''

''சொல்லுங்க.''

''எனக்கு மனசு ஆவலை. உனக்கு இந்த நாப்பது ரூபாய தரேன். மனசு நிலைஞ்சு என் புருஷனை நினைச்சு தரேன்...வாங்கிக்கறியா...?''

சீனுவாசன் சிரித்தான். சண்முகக்கனியும், மனோன்மணியும் திகைத்தார்கள்.

''சரிம்மா.''

''நீங்க எதும் செய்யலை. அப்பா, அம்மா இருக்காங்களா?''

''அப்பா இல்லை. ஆனா, நான் காசில செஞ்சிட்டேன். இரண்டு வேளை நாலு பேருக்கு டிபன், காபி வாங்கிக் கொடுத்து ஆட்டோல கூட்டிட்டுப் போய் மனசுக்கு தோணின பலது செஞ்சுட்டேன்.''

''அப்ப நான் செய்யறது தப்பில்லையே.''

''இல்லை ''

''என் புருஷன் கோபக்காரன். திட்டுவான். அடிப்பான். ஆனாலும் புருஷன்தானே. அவன் போன இடத்துலயாவது கோவம் குறைஞ்சு சும்மா இருக்கணும்.'' கை நடுங்க நாற்பது ரூபாய் கொடுத்தாள். கொடுக்கும்போது அழுதாள். எவரும் எதிர்பாராத வண்ணம் சீனுவாசன் காலில் விழுந்தாள்.

''பாவி... பாவி... அடிச்சியே என்னை... தொட்டதுக்கெல்லாம் போட்டு அடிச்சியே... நாலு பொண்ணு பெத்தேன்னு அடிச்சியே...உன்கிட்ட நாய்பட்டபாடு பட்டேனே. பாவி... போறும்டா...யப்பா... இந்த நாப்பது ரூபாயோட போட்டம். உனக்கும் எனக்கும் உள்ள எல்லா சம்பந்தமும் போட்டும். தப்பா நினைச்சுக்காத தம்பி. நான் என்னவோ துக்கத்துல பேசறேன் ''

''புரியுதும்மா.''

சீனுவாசன் கைகளில் நாற்பது ரூபாய்கள் கசங்கின. மனோன்மணிக்கு சீனுவாசன் மீது மிகுந்த பாசம்பொங்கியது. இவன் சாதாரணம் அல்லன் என்று தோன்றியது.

ஈரத்துணியோட செய்யலாம்னியே வெளிய போன்னுட்டாங்க...''

''யாரு...?''



''ஆங்...ஊரு விவரம் தெரியாத பாப்பான்கிட்ட கேட்டேம்பார்... செருப்பால அடிக்கணும்...

''ஏய்...என்ன சொல்ற...?''

''என் புத்திய சொன்னேன். உனக்கு குடுமி ஒரு கேடு...''

''யாரு தப்புன்னா?''

''அதோ அவரு...''

''சிகரெட் புடிக்கிற பாப்பானைக் கேட்டியா?''

''ஓய்...வாய அடக்கும்'' சிரார்த்தம் முடித்த சந்தானம் சீறினான்.

''நீர் என்ன வக்காலத்து?''

''முட்டாள். பொணம் இருக்கற இடத்துக்குதான் ஈரத்துணி...இங்க மடி வேஷ்டி...''

''மடி வேஷ்டி உண்டா இவங்கக்கிட்ட, அதான் ஈரவேஷ்டின்னேன்.''

''ஈரத்துணி பாவம்யா, அசிங்கம். எவன் சொன்னான் உனக்கு.''

''நான் சொன்னேன். என்ன தப்பு...''

''தப்புதான். தெரிஞ்சா சொல்லும் தெரியலைன்னா விடும்.''

''சரிதான் போடா''

''பல்லு பேந்துடும்...''

சந்தானத்தைத் தடுத்தார்கள். அவருக்கு எழுபது வயசு இருக்கும். தடித்த கண்ணாடி. சிறிய நரைக்குடுமி. கழுத்தில் உத்திராட்சம்.

அவர் கத்த அவன் கத்த பெரிய ரகளையே நடந்தது.

''நான் சொல்லித் தரேன். நான் சொல்லித்தரேன்னு பஸ்ல சொல்லியாந்தாரு. பொண்டாட்டிக்கு முடியலை. அல புடவைய தோச்சு போடுன்னாரு. ஐயோ பாவம். வயசான கிழமாச்சேன்னு நெனைச்சேன் தப்பு தப்பா சொல்லி அசிங்கபட வச்சுட்டாரு.''

'அவரு தோய்க்க சொன்னா உனக்கு எங்க போச்சு புத்தி. என்னை எதுக்கு இழுக்கறே? கிழவருடைய மனைவி சண்டைக்கு வந்தாள்.

''அவர் பேச்சுக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று நின்றாள்.

சீனுவாசன் தூணில் சாய்ந்தபடி கையில் சுருண்ட நாற்பது ரூபாய்களை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''எவருக்கேனும் எதற்கேனும் உதவியா இரு. எல்லா நிமிடமும் உதவி செய்யவே இரு. இதுவே உன் கர்மா. இதுவே உன் வேலை. உள்ளேயே இரு. உன்னால்செய்யப் பட்ட தர்மங்களின் பலன்கள் என்னைச் சேரட்டும். நீ அசைவில்லாதவனாய் இரு. என்னையே நினை. எதுவு மற்றுக் கிட,''

உள்ளே குரல் எழுந்தது.

கயா அவனை கவிழ்க்கப் போகிறது என்று சீனுவாசனுக்குத் தெரிந்து விட்டது.

வட விருட்சத்துக்கு வரீங்களா...நாங்க ஹோமம் பண்ணிட்டு ஜாயின் பண்ணிக்கறோம்...'' சந்தானம் பேசினான்.

சண்முகக்கனியும், மனோன்மணியும் சீனுவாசனும் வட விருட்சம் போனார்கள்.

# 6

வயதான ஆலமரம். உயரமும், அகலமுமாய் பரந்து கிடக்கிற மரம். மரத்தைச் சுற்றி கட்டிடம். படியேற மேல் மாடி இருபதடி உயரத்தில் இருக்கும். அந்த உயரத்திற்கும் மேல் மரத்தின் கிளைகள் பிரிந்து நின்றன. மேல் மாடி முழுவதும் பரந்து வெளியே போய் விழுதுகள் இறங்கின. மரத்தின் நடுப்பகுதியிலும் விழுதுகள் முறுக்கிக்கொண்டு ஒட்டிக் கொண்டிருந்தன. பசுமையான முரட்டு இலைகள் தரையெல்லாம் மிதிப்பட்ட ஆலம்பழம். மரத்தின் நடுப் பகுதி ஒட்டி சிறிய பிறையில் சிவந்த அனுமார். மாடிக் கைப்பிடிச் சுவர் ஒட்டி சிமெண்ட் மேடை. ஒரு மூலையில் குழாய். தொலைவில் மலைத் தொடர் சுற்றிலும் மழை காணாது வறண்ட பூமி. தகிக்கும் வெய்யில்.

காலையிலிருந்து உணவு உண்ணாது நரசிம்மனும், சந்தானமும் சோர்ந்து போயிருந்தார்கள்.

ஒரு சொம்பு நிறைய நீர் பிடித்து நிறைய க்ளுகோஸ் கலந்து சீனுவாசன் அவர்களிடம் கொடுத்தான்.

''தண்ணி குடிக்கலாம். தோஷமில்லை'' சாஸ்திரி சொன்னார்.

மடக்மடக்கென்று இருவரும் குடித்தார்கள். சீனுவாசனை நன்றியோடு பார்த்தார்கள்.

''மயக்கம் வந்துருமோன்னு பயமா இருந்தது. நல்ல வேளை...ரொம்ப தேங்க்ஸ். சண்முகக்கனிக்கும்கொடுங்க. பாவம் அவரும் சாப்பிடலை.''

''இன்னொரு சொம்பு கலந்து மற்ற மூவரும் குடித்தார்கள். ஜாதியை ஒட்டிய சம்பிரதாயத்தின் போதே ஜாதி மறந்து நட்பு காட்டினார்கள்.

''ஏங்க சீனுவாசன் உங்களுக்கு சம்ஸ்கிருதம் தெரியுமா?''

''தெரியாது.''

''நரசிம்மனுக்கு...?''

''தெரியாதுன்னு தோணுது.''

''அப்ப புரியாத பாஷைல ஏன் செய்யணும் இதெல்லாம்?''

''நல்ல கேள்வி. பாஷை தெரியாததுக்கு நாமதான் காரணம். தெரிஞ்சுக்கணும்னா இப்பக்கூட தெரிஞ்சுக்கலாம்.''

''தெரிஞ்சு செஞ்சா மனசுக்கு தெம்பா இருக்குங்க'' சண்முகக்கனி, மனோன்மணியைப் புரிந்து பேசினான்.

''நிச்சயமா...தெரிஞ்சுக்கலாம்...''

''எப்படி?''

''சாஸ்திரிகளை அர்த்தம் கேட்போம்.'

''அவரு சொல்வாரா?''

''பேஷா சொல்றேன். சொல்றது என் வேலை. சொல்றதுதான் தர்மம், புரிஞ்சு நீங்க செஞ்சாதான் நீங்க கொடுக்கற காசு எனக்கு ஒட்டும், சும்மா சொல்லுய்யா... பேசாதேன்னு ரெண்டு பேர் அதட்டினா யார்கிட்டயும் பேசத்தேணாது. கேட்டாலொழிய பேசக் கூடாது. கேட்கறேள், அதனால சொல்றேன்.''

அந்த ஐவரும் சிரார்த்தம் செய்து தர லந்த சாஸ்திரியையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.



ஒருவன் பிறப்புக்கு தந்தை மட்டும் காரணமல்ல. தந்தையின் வீர்யத்திலிருந்து மட்டுமே ஒருவன் உதித்து விட முடியாது. வீர்யம் வெளிப்படுவதில் மன வேதனையோ, உடல் வலியோ இல்லை. மாறாய் மனசுக்கும், உடம்புக்கும் மிகுந்த சந்தோஷமுள்ள விஷயம் இது. இது இயற்கை. இந்த வீர்யம் தாங்கும் உடலுக்கு அதாவதுபெண்ணுக்கு ஆண் வீர்யம் வந்து சேர்ந்த நாளிலிருந்து அது கருவாகி, உருவாகி, வெளியே வரும் வரை மன, உடல் வேதனை தரும். அம்மா இல்லாது பிள்ளை இல்லை. ஒரு பிள்ளை உருப்பெற ஒரு தாய் மிகுந்த சிரமப்பட வேண்டியிருக்கும். இன்று கையும். காலும் திடத்தோட நாமெல்லாம் உட்காரக் காரணம் அம்மா. நாம் முடமாகாது வெளியே வர காரணம் மாதா

இங்கே கயாவில் மாதாவுக்குஎன்று இதுவடவிருட்சத்தில் தனியே ஒரு சடங்கு உண்டு. மற்ற இடத்தில் செய்வதில்லை.

எவரின் வித்தாக நான் இருக்கிறேனா...அவருக்கு என்று பிண்டம் போடுவது மட்டுமில்லை இங்கே மாதாவுக்கு போடுகிறோம். அவள் பட்ட ஒவ்வொரு அவஸ்தையையும் அதாவது குணத்தையும் சொல்லிச் சொல்லி போடுகிறோம்.

''ஐயா'' மனோன்மணி குரல் கொடுத்தாள்

''இப்படி பிண்டம் போடறது செத்தவங்களுக்கு போய் சேருங்களா?''

சட்டென்று ஒரு மௌனம் அங்கு நிலவியது. எல்லோருக்கும் மனசில் உள்ள கேள்வி மனோன்மணி கேட்டாள். கேட்பது தவறோ என்று எல்லோரையும் பார்த்தாள். என்னாது என்பதாய் சண்முகக்கனி மனோன்மணியை நோக்கினான்.

''கேட்டா தப்புல்லை. எனக்குத் தெரிஞ்சதைச் சொல்றேன்.

சிரார்த்தம் என்பது நன்றிக் கடன் ஆத்துலயோ, குளத்துலயோ ஒருத்தனுக்கு கால் சறுக்கி விட்டுடுத்து. ஐயோ அம்மான்னு முழுகப் போற நேரம். எவனோ பாஞ்சு தலைமயிரைக் கொத்தா புடிச்சு கரைல தூக்கிப் போட்டுட்டான்னு வச்சுப்போம். தூக்கிப் போட்டுட்டு பேசாத துடைச்சுண்டு போய் சேர்ந்துட்டான்.

அவன் காப்பாத்தினதுக்கு ஆயிரம் காரணம் இருக்கலாம், அடடா எம் புருஷன் எவ்வளோ வீரன்னு கரைல இருக்கற பொண்டாட்டிக்கு காட்டறதுக்காக இருக்கலாம். இல்லை காப்பாத்தினா பத்து ரூபா தருவான்னு செய்துருக்கலாம் காரணம் முக்கியமில்லை, காரியம் முக்கியம். காப்பத்திட்டான். உயிரோட இருக்க வச்சுட்டான். வெச்சு நகர்ந்து போயிட்டான். நம்மால சும்ம இருக்க முடியுமா? கை கூப்பி நன்றி சொல்லாத முடியுமா? சொல்லாத மனசு நிறையுமா?

அவனுக்கு கேட்கறது... கேட்கலை. நாம அவன் போன திக்கு பார்த்து கை கூப்புவோம்.

அப்பா... நீ நன்னா இருக்கணும்னு மனசார சொல்வோம். அப்படி மனசார சொல்றது தான் சிரார்த்தம். இந்த உடை. உணவு, உறைவிடம் எல்லாம் முன்னோர்கள் தந்த விஷயம். திடீர்னு முளைக்கலை. உருளைன்னு ஒன்று கண்டுபிடிச்சது ஒரு முன்னோன். அந்த உருளை இன்னிக்கு ரயிலா, காரா, விமானமா இருக்கு. இத்தனை கண்டுபிடிச்ச மனுஷன் தவிச்ச தவிப்புக்கு நன்றி சிரார்த்தம். அந்த விஷயத்தை ஜெனரலைஸ் பண்ணாத பர்டிகுலரா அப்பான்னு ஒரு பர்ஸனாலிடியா சொல்றது சிரார்த்தம்.

அப்பா மட்டுமில்லை. அப்பாவுக்கு அப்பா... அப்பாக்கு அப்பா பெரிசா போறது.

ஏன்...பிண்டம்? ஏன் சோறு? மண்ணு உருட்டி போட்டா என்ன?



நன்றின்னா கைகூப்பறோம். அப்படி ஒரு செயல்... கெஸ்ச்சர். அதே மாதிரி பிண்டம் ஒரு செயல். கெஸ்ச்சர்... ஏன் இந்த கெஸ்ச்சர்?

அப்பா உணவு உண்டு விந்து வந்தது. அம்மா உணவு உண்டு விந்து தாங்கும் சக்தி வந்தது. நாம் உருவாகி வந்த பிறகு அம்மா தந்த உணவு முலைப்பால். அப்பா தந்த உணவு சோறு, குழம்பு, ரசம். உணவால் நம்மை உருவாக்கி, உணவால் நம்மை வளர்த்து பிறருக்கு உணவு தரும் நிலையில் வைத்திருக்கிறவர்களுக்கு உணவே உருண்டையாய் உருட்டி தரோம். எதனால் உருவாக்கினாயோ... அதையே உனக்கு உணவாய் நன்றியாய் தரோம்னு சொல்றோம். இது கெஸ்ச்சர். ஒரு சைகை.

பித்ருக்கள் வாங்கினா தானே...நின்று வாங்குவாளா மாட்டாளான்னு சந்தேகம் வந்தா நிறைவில்லையே...

இங்க விளைஞ்சது இந்த பூமில விளைஞ்சது எதுவும் வேஸ்டா போகாது. ஒரு பருக்கைக்கூட உபயோகமில்லாது போகாது.

உருட்டிப் போட்டதை காக்கை, குருவி சாப்பிடும். மிச்சத்தை எறும்பு சாப்பிடும். இன்னும் மிச்சத்தை கண்ணுக்குத் தெரியாத பாக்டீரியாக்கள் சாப்பிடும்.

எனவே நம்மால் விளைந்த உணவு எல்லா உயிருக்கும் போகிறது. தானம். இப்படி உழுது, விதைச்சு, அறுத்து அரிசியாக்கி, சமைச்சு உருட்டி நாம சாப்பிட்டது போக, நமக்குப் போக காக்கைக்கு.

காக்கை எச்சம் மரத்துக்கு. மரத்து எச்சம் ஆடு மாட்டுக்கு. ஆடு, மாடு சக்தி நமக்கு. பெரிய சைக்கிள் வளையம். வட்டம் இடையறாத சுழலும் வட்டம். நாம் கொடுத்து காக்கை. காக்கை கொடுத்து மரம். மரம் கொடுத்து ஆடு. மாடு... ஆடு, மாடு பால் கொடுத்து

நாம் இன்னும் விளக்கி பெரிசாவும் சொல்லலாம் இதை.

இது ஒரு பக்கம். மனசு சக்தி, மனோ சத்தி. உடம்பு சக்தி அரிசியாச்சு. மனோசக்தி என்னவாகும். வேஸ்டாகுமா...? உலகத்துல எந்த சக்தியும் வேஸ்ட் இல்லை. இந்த நினைப்பு நல்ல சூழலை ஏற்படுத்தும். நல்ல நினைப்பு நல்ல சூழல். கெட்ட நினைப்பு, கெட்ட சூழல்.

ஒரு ஆசிரமத்துல எத்தனை கூட்டம் இருந்தாலும் அமைதியா இருக்கு. ஒரு சாராய கடைல நாலு பேர் இருந்தாலும் சண்டை வருது. ஏன்...? நினைப்பு சக்தி. மனசு ஒரு முகப்பட்டு அமைதியானா அமைதியாய் உலகம் இருக்கும். ஆரவாரம் ஆனா ஆராவாரம் ஆகும். இவ்வளவுதான் விஷயம்...''

''அப்போ, ஆவி ரூபமா வாங்க மாட்டார்களா?''

''நம்பினா வாங்குவாங்க. நம்பலைன்னா வாங்க மாட்டாங்க.''

''புரியலையே.''

''புரியும். சொல்லாத மனசுக்குப் புரியும்.''

''அந்த அம்மாவுக்கு உண்டான மந்திரம் அர்த்தம் சொல்லணும்.''

''சொல்றேன்.''

எள்ளும், தண்ணியும் கலந்து பிண்டங்கள்மீது ஊற்றி நரசிம்மனும், சந்தானமும் மந்திரம் சொன்னார்கள்.

''கேட்கறேளா... சட்டென்று மந்திரம் நிறுத்தி உடுப்பு சாஸ்திரி தலை நிமிர்த்தினார்.



''மாதா, முதல் மாதம் என்னைக் கருவுரும் போது உனக்கு ஏற்பட்ட மனக்கிலேசம் என்கிற ருணம் தீர இப்பிண்டம் போடுகிறேன்.

மாதா, இரண்டாம் மாதம் ஜீரணக் கோளாறும் மயக்கமும் ஏற்பட்ட ருணம் தீர இப்பிண்டம் போடுகிறேன்.

மாதா, மூன்றாம் மாதம் இடுப்பிலும், வயிற்றிலும் ஏற்பட்ட கனம் தாங்காது ஏற்பட்ட வலி தீர இப்பிண்டம் போடுகிறேன்.

மாதா, நான்காம் மாதம் உணவு செல்லாமல் சோகையாய் கிடந்தாயே அந்த வேதனை தீர இப்பிண்டம் போடுகிறேன். மாதா, ஐந்தாம் மாதம் நடக்க சிரமப்பட்டு, மல ஜல உபாதைகள் எற்பட்டிருக்குமே அந்த சிரமம் தீர இப்பிண்டம் போடுகிறேன்.

மாதா...

மனோன்மணி அழுதாள். நரசிம்மன் கண் கலங்கினான். சந்தானம் விசும்பினான். சண்முகக்கனி கை கூப்பினான். சீனுவாசன் திகைத்துப்போய் கிடந்தான்.

அன்பு...அன்பு... அன்பு. இத்தனை அன்பா. இத்தனை நட்பா. இத்தனை கவலையா... இத்தனை கரிசனமா... அம்மா என்பவள் சாவதற்கு முன்பே இத்தனை அன்பு இருந்துவிட்டால்... அம்மா என்பவள் பெற்றவள் மட்டுமா, எல்லா பெண்களும்தானே... எல்லா கர்ப்பிணிகளும்தானே... எல்லா பெண் பிறவிகளும் தானே.

மாதா. நான் முலை உண்ணும்போது வலித்திருக்குமே... அதைப் பொறுத்துக் கொண்டாயே. அந்த வலி தாங்கும் பொறுமைக்கு இந்தப் பிண்டம்.

நான் நடுநிசியில் அழுதேனே...அழுதபோது தூக்கம் கலைந்து வந்தாயே... அந்த சிரமத்திற்கு இந்தப் பிண்டம்...

விக்கித்துப் போயிற்று.

மனசு விண்டு போயிற்று.

எல்லா பெண்களையும் பார்த்து கை கூப்பத் தோன்றியது. பிண்டங்களைத் திரட்டி மாடி மூலையில் உள்ள மேடையில் வைக்க காக்கைகள் பறந்து வந்து கூடித் தின்றன.

இது ஒரு சங்கேதம். ஒரு சாட்சி. மனசார பண்ணினா காக்கா உடனே தின்னுடும். வெறுமன போட்டா திங்காதான்னு கேள்வி வரும். போட்டு பாருங்கோ. பதில் நீங்களே கேட்டுக்கோங்கோ. அப்ப தான் வரேன். உங்க கயா யாத்திரை பூர்த்தி ஆச்சு. உங்க பித்ருக்கள் உங்க மனசு பலத்தால் சொர்க்கம் போயிட்டா. பரம சந்தோஷமா உங்களை அவா ஆசீர்வாதம் பண்றா...''

முதுகில் பட்பட் என்று அடித்து சாஸ்திரி பாராட்டினார்

நரசிம்மன் அசையாது உட்கார்ந்திருந்தான்.

அன்பு செய்ய இன்னமும் அன்பு தோன்றும். மிகுந்த அன்பு அசைய முடியாதபடி செய்துவிடும்.

''இப்போ போய் தூங்கிட்டு நாளைக்கு புத்தகயா போலாமா?'' சீனு பேசினான்

''எங்க இருக்கு?''

''பதினாறு கிலோ மீட்டர், ஆட்டோல போயிடலாம்.''

''என்னாங்க அங்க...?''

''புத்தர் ஞானம் பெற்ற இடம்...''

''புத்தர் இந்து மதத்துக்க எதிரியா?''

''இந்தப் பக்கத்துல இருக்கிற போலியான சடங்குக்கு எதிரி, சடங்குல போலி இல்லை. செய்யற மனசுல போலி



இருக்கு. போலியா செய்தா போலி சடங்கு. மனசார செய்தா அதுக்கு சடங்குன்னே பேர் இல்லை.''

அயர்ந்து நகரத்தார் சத்திரத்தில் தூங்கினார்கள்.

நரசிம்மன் நீருக்குள் மூழ்கினான். மூழ்கி குத்திட்டு உட்கார்ந்து எள்ளும் தண்ணியும் இறைத்தான். மாதா, உன்ருணம் தீர...இது, என்றான். நிறைய பேர் சூழ்ந்து கொண்டார்கள். அம்மா நீர் வாங்கிக் கொண்டாள். அம்மாவா இது... இல்லை மனோன்மணி. போங்க எல்லாரும். எம் புள்ளைய தொந்தரவு பண்ணாதீங்க. அவர்கள் கை கூப்பியபடியே நீருக்கு மேல் போனார்கள், அம்மா தழுவி முத்தமிட்டாள். ரொம் சந்தோஷம் என்றாள். நீருக்கு மேல் போனாள். அப்படியே நரசிம்மன் மிதந்து கரணம் அடித்து மேலே வந்தான். வெளிச்சமாய் இருந்தது.

''அஞ்சு மணிக்கே வெயில் வந்துருச்சய்யா. எழுந்துரு' சண்முகக்கனி உலுக்க கண் திறந்தான்.

''நானும் சந்தானமும் அப்படியே ஒரு வாக் போய் பேஸ்ட், சோப்பு, க்ளூகோஸ் பழங்கள் வாங்கியாந்துடறோம். நீங்க குளிச்சுட்டு ரெடியா இருங்க...''

''அவங்க எங்க, உங்க வெய்ஃப்?''

''பின்பக்கம் போயிருக்கு.''

''சரி, சீக்கிரம் வாங்க.'' நரசிம்மன் உட்கார்ந்து கனவை நினைத்துக் கொண்டிருந்தான். பயணிகள் தூங்கிக் கொண்டிருந்தார்கள். பின்பக்கம் யாரோ வாந்தி எடுக்கும் சப்தம் கேட்டது.

''யாரு...?'' பின்பக்கம் போனான்.

மனோன்மணி குத்திட்டு அமர்ந்து வாந்தி எடுத்துக் கொண்டிருந்தாள்.

''என்னாங்க?''

''முடியலை...பிரட்டுது.''

' கடுகெண்ணை சிலருக்கு ஒத்துக்காது.''

''ஐயோ... நெஞ்சு எரியுது. எங்க அவரு?''

' க்டைக்கு போயிருக்காரே.''

''தலை சுத்துது.''

''இருங்க லேடீஸ் எழுப்பறேன்.''

''வேணாம்.''

''நிக்கமுடியலையாம்மா?''

''இப்படியே படுத்துகிறேன்.'' சுவர் பிடித்து தள்ளாடி ஈரமில்லாத பகுதிக்கு போனாள். தலைக்குப்புற சரிய சடாரென்று நரசிம்மன் பிடித்துக் கொண்டான் அம்மா... அம்மா...மனசு கூவியது. இந்த ருணம் தீர வேண்டுமே என்று மனசு நீர் இறைத்தது.

மறுபடி வாயிலெடுக்க அவள் மடியில் வாந்தி விழா திருக்க கை நீட்டினான். கை நிறைய வாங்கி சாக்கடையில் ஊற்றினான். சொம்பு நீர் எடுத்து கையலம்பி நீர் கொண்டு வந்தான். தலை நிமிர்த்தி வாயில் வாயில் ஊற்றி, ''கொப்பளிங்க. இப்படி நகர்ந்து வந்து தொப் ளீங்க...'' என்றான்.

' ஐயோ... முடியலையே... பிரட்டுதே... நெஞ்சு அடைக்குதே...''

''ஏங்க...வள்ளியப்பன் இஞ்சி இருக்கா...?'' எங்கி ருந்தோ இஞ்சித் துண்டு கொண்டு வந்து ஆட்டுக்கல்லில் நசுக்கி நீர் விட்டு சாறு எடுத்தான். பை துழாவி



எலுமிச்சை எடுத்து அறுந்துப் பிழிந்து கலந்தான். ''அரை டம்ளர்... கொஞ்சம் காரமா இருக்கும். மடக்குன்னு குடிங்க...''

''முதுகு பிடிச்சுக்கிச்சு. நிமிர முடியலை. இவரு வரலையா?''

''இல்லீங்க. இப்பத்தான் போனாரு. நான் லேடீஸை எழுப்பறேன்.''

''ஐயோ...இழுக்குதே...''

''அப்படியே குனிங்க'' அவள் முதுகில் துண்டு போட்டு அந்தத் துண்டில் கை வைத்து அழுத்தி நீவினான்.

அழுத்தி நீவ உள்ளே சுருண்ட காற்று பிரிந்தது. வேதனை தணித்தது.

''இப்ப எப்படி இருக்கு?''

''பரவாயில்லை. ஆனா உடம்பு நடுங்குது.

''சக்தி இல்லை. குளிச்சு டீ சாப்பிட்டா சரியாயிடும்.

''பச்சத் தண்ணில் முடியாது.''

''வெந்நீர் போடச் சொல்லவா?''

''கிடைக்குமா?''

''டீக்கடைல கேட்கறேன்.'' பக்கெட் தேடி வாசலுக்கு ஓடினான் ஒரு ரூபாய் கொடுத்து வெந்நீர் எடுத்து வந்தான். விளாவி வைத்தான்.

''யாரும் எழுந்துக்கறதுக்கு முன்னாடி ஒரு சொம்பு குளிச்சுடுங்க, எழுந்துக்க முடியுமா?''

''எழுந்தாள், உடை கலைந்து நின்றாள். கூனி தள்ளாடி பாத்ரூம் பக்கம் போனாள். நரசிம்மன் குளியல றைக் கதவு சார்த்தினான், தள்ளிப் போய் நின்று கொண்டான்.

''ஏங்க?''

''சொல்லுங்கம்மா.''

''துண்டு...மாத்துப் புடவை எடுக்காதவந்துட்டேன்,'

''எங்க இருக்கு?''

''சூட்கேஸ்ல, இந்தாங்க சாவி...''

''எந்தப் புடவை?''

''செட்டு செட்டா இருக்கும். எதுனா ஒரு செட்டு. உங்களை தொந்தரவு பண்றேன்.''

''அதனால என்ன?'' நரசிம்மன் சந்தோஷமாய் புடவை எடுத்து வந்தான். மனோன்மணி அம்மா, அம்மா தான் மனோன்மணி. கதவு மீது துணி போட்டு ஹாலுக்கு வந்தான்

''ஒரு கூடை பழம் வாங்கிட்டுவந்துட்டம். இன்னிக்கு முழுக்கப் பழம்தான்.'' சண்முகக்கனி உள்ளே வர பாத் ரூம் விட்டு மாற்றுப் புடவை உடுத்தி மனோன்மணி வந்தாள்.

''ரொம்ப நன்றி முதுகு தேச்சுவுட்டதும் சரியா புடிச்சு.''

''என்ன மனோன்மணி?''

''செத்துட்டேன் போங்க...''

''புடிப்பா...மறுபடி வந்துடுச்சா?''

''ஏன், அடிக்கடி வருமா?''



''எப்பனா வரும். கத்துவோ. பரபரன்னு முதுகுதேச்சு வுட்டா நிமிர்ந்துருவா. ரொம்ப படுத்திட்டாளா?''

''டீக்கடைலேர்ந்து வெந்நீர் வாங்கிக் கொடுத்தாரு. எவ்வளவுன்னு கேட்டு கொடுத்துடுங்க.''

''இல்லை. கயால எல்லாம் எங்க செலவு.'' நரசிம்மன் மறுத்தான்.

''வெளிய ஓடி வெந்நீர் வாங்கியாறதுமா?''

''ஆமாம். எங்கம்மாவுக்கு செய்த மாதிரி செய்தேன். போங்களேன்...''

''சிரத்தையோட செய்யறதுக்கு பெயர் சிரார்த்தம். இதுதான் பெரிய சிரார்த்தம்.'' சீனு சொல்ல எல்லார் மனசிலும் அமைதி நின்றது.

அலஹாபாத்ல நல்ல ஹோட்டலா போய் நல்லபடியா செய்யணும் இவங்களுக்கு...சண்முகக்கனிக்குத் தோன் றியது. புத்தன் கோவிலுக்குப் புறப்பட்டார்கள்.

வயல் தாண்டி ஊர்...ஊர் தண்டி மார்க்கெட். ஆட்டோ ஸ்டாண்ட் வளைவு திரும்பி சட்டென்றுஎதிரே கோபுரம். இரண்டாயிரத்து ஐநூறு வருட கட்டிடம். அசோகர் எழுப்பின தூண்கள். அதற்குப் பிறகு பல மன்னர்கள் பல காலங்களில் கட்டி நிமிர்த்திய கோபுரம்.

''பழசு...மிகப் பழசு...''

''எங்க சீனுவ காணம்?''

''வரேன். இருங்கன்னாரு...''

''ஐயா, வணக்கம். நான் தமிழ்நாட்டுலேர்ந்து வரேன்.''

''நல்லது வாருங்கள். என்ன வேண்டும்?''

''கயா ஸிடி மாஜிஸ்ட்ரேரா...''

''நான்தான்...''

''புத்தர் அமர்ந்து ஞானம் பெற்ற வஜ்ராசனம் தொட்டு உணர வேண்டும். உங்கள் அனுமதி வேண்டும்.''

''தருவதற்கில்லை. பிட்சுகள் மட்டுமே வஜ்ராசனம் தொட உரிமை உண்டு.'' அவர் மறுத்தார். சீனுவாசன் மறுபடி பேசினான்.

''ஐயா மறுக்க வேண்டாம். புத்தரை என் நாற்பத்தெட்டு வயது காலத்தில் பலமுறை யோசித்து அனுபவித்திருக்கிறேன். இதுதான் கயாவுக்கு நான் வரும் காரணம். இதுவே முதல் முறை. புத்தரை உணர ஆவலாய் இருக்கிறேன்.''

''புத்தரை உணர புத்தரைப் படித்தால் போதும்.''

''படித்திருக்கிறேன். படிப்பு தாண்டி அந்த சக்தியை ஆலிங்கனம் செய்து கொள்ள விரும்புகிறேன்.''

''பெரிய வார்த்தைகள். புத்தரைப் பற்றி என்ன தெரியும் உங்களுக்கு?''

''ஆசையே வியாதிக்கு காரணம் என்றார் புத்தர்.''

''பள்ளிப் பிள்ளைகளுக்கும் தெரியும் இது. இந்தியாவில் எட்டாம் வகுப்பு பாடம்.''

''புத்தர் ஆசையை அறுக்கச் சொல்லவில்லை. அனுபவிக்கச் சொல்லவில்லை. நடுநிலையில் இருக்கச் சொன்னார் என்பது பலருக்குத் தெரியாத விஷயம்.''



''புரியவில்லை.''

''ஆசை அனுபவிக்கப்படாமலும் அதே சமயம் அகற்றப்படாமலும் இருக்க வேண்டும். தஹிப்பான நிலையில் இருப்பது முக்கியம்.''

''என்ன சொல்கிறீர்கள்?''

''ஆசை தோன்றியதும் அனுபவம் துவங்கி விடுகிறது அடைவதே குறிக்கோள் என்று பறக்கத் துவங்கி விடுகிறது. அடைவதை நோக்கி நகர்வதே பெரிதாகி விடுகிறது. அடைய அடைந்ததின் அனுபவம் சிறுத்து விடுகிறது. உச்சியில் இருக்கும் பழம் தின்பதை விட உச்சிக்கு ஏறின உடம்பெரிச்சலே அனுபவமாகிறது. பழம்தின்னும் போதும் எரிச்சலே ஆக்கிரமித்துக் கொள்கிறது. ஆகவே, ஆசை அகற்றினால் போகாது. மறுபடி வேற வழியில வேற ரூபத்தில ஆசை வரும். வன்முறையுடன் உள்ளே வளரும். வலிந்து வலிந்து மறைத்துக் கொண்டது. ஒரு நேரத்தில் விஸ்வரூபம் எடுக்கும். மரத்தை வெட்டிப் பழம் எடுக்கும் வெறிக்குப் போகும். எனவே''

''எனவே?'' ஸிடி மாஜிஸ்ட்ரேட் நிமிர்ந்தார்.

''ஆசை அகற்றப்பட கூடாது.''

''பிறகு...?''

''ஆசை தோன்றும் போதே உற்றுப் பார்க்க வேண்டும். எண்ணங்கள் தோன்றும் போதே அதை ஸ்பிரிச்சுவலைஸ் செய்துவிட வேண்டும். ஆன்மீகமடையச்செய்தல் முக்கியம் தரையில் கிடைக்கும் பழம் போதும். பழுத்தது தரைக்கு வந்தே ஆகவேண்டும்...''

''அதாவது...''

''அனுபவங்களை நோக்கிப் போகாது, வந்தது அனைத்தும் அனுபவமாகவே மனம் ஏற்பின் சிக்கல் இல்லை ஒவ்வொரு நிமிடமும் அனுபவம். நம்மைத் தாண்டித் தாண்டி அனுபவம் போகும் போது நாம்போக வேண்டியது எதற்கு?''

''போனால் என்ன ஆகும்?''

''வியாதி.மனோ வியாதி. மனதால் உடல் வியாதி.'

''வியாதியையும் அனுபவமாக்கினால்?''

''தேடிப் போனவன் வியாதி கண்டு புலம்புவான். பழம் நோக்கி போனவன் எரிச்சல் வந்தால் கத்துவான், நின்றவன் வியாதியையும் அனுபவமாக்குவான். வியாதியையும், அனுபவம் என்று இருந்தவர் தமிழ்நாட்டில் வாழ்ந்திருக்கிறார். அவர் பெயர் பகவான் ரமணர். ரமணமகரிஷி.''

''கேள்விப்பட்டிருக்கிறேன். பகவான் ரமண மஹரிஷிக்கு என் வந்தனங்கள். யாத்ரீகர்களால் ப்ாழடைந்து விடக்கூடாது என்று கவனமாய் வஜ்ராசனத்தைக் காப்பாற்றி வருகிறோம். உங்களைப் போன்றவர் தொடலாம். வாருங்கள் நானே வருகிறேன்.''

''மிக்க நன்றி. மிக்க நன்றி.''

'இது புத்தனின் விருப்பம் அவர் கட்டளை.''

பெரிய அரச மரம்.சுற்றி பித்தளை அலங்கார வேலி. உள்ளே பொன் இழை கூடிய பட்டு விரிப்புக்கு அடியே வஜ்ராசனம். புத்தன் அமர்ந்து ஞானம் பெற்ற பெரும் கல்மேடை. சமதளமான கற்பாறை.

மாஜிஸ்ரேட் கதவு திறந்தார்.அவனை உள்ளேபோக விட்டார் சீனுவாசன் அரசமரம் சுற்றினான்.



''அதோ சீனு...'' சண்முகக்கனி கைகாட்ட, நரசிம்மனும் சந்தானமும் மனோன்மணியும் வந்தார்கள்.

''உங்களவர்களா?'

''ஆமாம்.'' சீனு அவர்களை அழைக்கவுமில்லை தடுக்கவுமில்லை.

''உள்ளே வாருங்கள்.'' மாஜிஸ்ரேட் அழைத்தார். அவர்களும் உள்ளே வந்தனர். அரசமரம் சுற்றி மேடையை தொட்டு நமஸ்கரித்தார்கள். நின்று பார்த்து வெளியே நகர்ந்தார்கள்.

சீனுவாசன் காலம் நழுவி நின்றான். அது அமர்ந்த காலம் தொட்டான். எது இது? மனிதமா? எது உயர்ந்து நின்றது இங்கே? மனுஷ்யனா...மனுஷ்யனா...மனுஷனுக்கு தோன்றுமா ஆசையை வியாதி என்று சொல்ல? இன்றும் உண்டே ஆசை மனிதர்களிடம். எவர் சொன்னார் ஆசை வியாதி என்று. எவருக்குப் புரிந்தது அனுபவிக்கவும் துடிக்காது அகற்றவும் செய்யாது சமநிலையில் நிற்றல்'' எது நின்றது? மானுடமா? இல்லை...மானுடம் என்று மறந்த நிலையில் உள்ளதெய்வம். பெரும் சக்தி உணர்ந்த ஆத்மாதானே அது...அதுவேதான் என்று இருக்க, அப்பரவசம் தந்த வாக்கியம், அந்த பரவச உணர்வே தெய்வம். தெய்வம் மனிதனாய் பரவசமடைந்தது. நடந்தது. கிடந்தது. வெறுமே கிடந்தது. உள்ளே கிடந்தது. அனுபவிக்காமலும், அகற்றாமலும் ஆசையை நியானித்து சும்மா இருந்தது. தன்னைத் தானே பார்த்துச் சிரித்தது. தன்னுள்ளேயே கிடந்தது. செயலற்று, செயலில் ஒட்டுதல் அற்று செய்தலுக்கும் தனக்கும் சம்பந்தமில்லை சாசுவதமாய் கிடந்தது. இப்படி கிடத்தல் தான் யோகம். பக்தி பரவசம். கடவுள் நிலை ஞானம்.

கிடந்தது.

கிடந்தவாறு எழுந்து நின்று பேசியது.

கிடந்தவாறு எழுந்து நின்று பேசு வாழிகேசனே... உள்ளே பாசுரம் ஓடிற்று. எந்த கேசன். கடந்த கால் பரந்த காவிரிக்கரை குடந்தையுள் கிடந்தவாறு எழுந்து நின்று பேசுவாழி கேசனே...

கடந்த கால்பரந்து...கால் என்றால் மூச்சு...மேலும், கீழும் கடக்கும் மூச்சு பரந்து விரிந்து விட்டது. மூச்சு உணர விரிவாகியது. எல்லா இடமும் மூச்சு நிரம்பியிருப்பது தெரிந்தது உடம்பின் உள்ளே புறத்தே எல்லாமும் கால் அதாவது மூச்சு. மூச்சு உணர உணர உள்ளே ஓடும் எண்ண நதி, காவிரி, குடந்தைக்கு உள்ளே போயிற்று. குகைக்குள், குடத்துக்குள் போயிற்று. எண்ணம் குகையில் போக கிடப்பது முடிந்தது. எண்ணம் தோன்றாது ஒளிய எண்ணம் தோன்றிய இடத்திலேயே இருக்க, கிடத்தல் எளிதாயிற்று. கிடந்தபிறகு பேசியதும் நின்றதும் நடந்ததும் கிடத்தலிலிருந்தே வந்தன அங்கே உத்தேசம் இல்லை. கால்குலேஷன் இல்லை. முன் விளைவு, பின் விளவு இல்லை. வேறு எவருக்கும் இருக்கலாம். பேசியவருக்கு இல்லை.

மனசுக்கும், மூச்சுக்கும் நெருங்கின சம்பந்தம். மனம் அசைய மூச்சு. மூச்சு அசைய மனம். மூச்சு வசப்படுத்த மனம் அடங்கும். மனதை அடக்க மூச்சு வசப்படும். மனதை உணர்ந்து, மூச்சு புரிந்துகொண்டது. இதோ இது விட்டமூச்சு இங்கே. இந்த மூச்சு என்னுள் எல்லார் மூச்சும், சுவாசமும் என்னுள். என் சுவாசம் எல்லாரிலும் மூச்சு உணர்ந்து உள்ளே கிடக்க நானும் புத்தன் புத்தனே நான். இரண்டல்ல ஒன்று. கிடகிடகிட...

கிடந்தான். உள்ளே கிடந்தான். எதுவுமற்று கிடந்தான் எண்ணம் தோன்றின இடத்தில் கிடக்க எண்ணம் இல்லை. எண்ணம் இல்லாதபோது மூச்சு இல்லை. சுவாசித்தல் இல்லை. எண்ணம் அசைய சுவாசம். சுவாசம் அசைய எண்ணம்.



சுவாசம் நின்றது. உடம்பு தவித்தது. நுரையீரல் சுருங்கியது. ரத்தம் தலைக்கேறியது. கண்கள்சொருகின உடம்பு செத்தது. செத்த போதும் அவன் உண்டு. சாகாத ஒன்று உண்டு. அது ஒளி. ஒளிக்கு ஒளி. கடைசியாக உள்ளது இதுவே. இதுவே...இதுவே இது உடம்பெடுத்து நிற்கிறது. உடம்பல்லநான். இது இதுவே. நாக்கு தள்ளியது. எச்சில் ஒழுகியது. கண்கள் எதிர்எதிர் திசை மாறின. காது அடைத்து ரீங்காரம் ஏறி சங்கொலியாகி ஜாலர்தாள ஓசை பலத்துபலத்து அதிர்ந்தது.

இது மரணம். உயிர் வெளியேறும் நிலை. ஒளி வெளியேறிவிட்டது. உடம்பின் சாவு.

புத்த நீ பகவான் தன்னைப் பார்த்து கூவல் உள்ளே எழுந்தது.

தசை முறுக்கி தோலில் பொரபொரப்பு ஏற்பட்டது. கண்களிலிருந்து தடுப்பாரற்று நீர் வழிந்தது. எஞ்சின மூச்சும் வெளியேற ஹார்ர்ர்...என்று தொண்டையிலிருந்து எதோ பெரிய பிளிறல் எழுந்தது. கை உயர்ந்தது விழுந்தது. கிடந்தான். முழுமையாய் உள்ளே கிடந்தான் மூச்சு மறுபடி உள்ளே வேகமாய் நுழைந்து உடம்பு நாடிகள் முழுவதும் பரவ அதை உணர்ந்து அனுபவித்துச் சிரித்தான். தானாய் உள்ளே வந்த காற்று வெற்றிடம் நோக்கி உள்ளே வந்தகாற்று, கால்விரல் நுனிவரை புகுந்தது. சிரித்தான்.

வலது கை தூக்கி இடது கையை நெஞ்சுக்கு நேரே தாமரையாக்கி பேய்போல சிரித்தான். அவன் செயல் அவன் இல்லாமல் நடந்தது.

சிரி...சிரி...சிரி...இங்கு ஒன்றுமில்லை. சிரி. ஆனந்த கூத்தாடு, எல்லாம் இருக்கிறது, இல்லை. அற்றது பற்றெனில் உற்றது வீடு.

கரும்புகை சுருள்கள் கடந்து போயின. வண்ணங்கள் தோன்றி வீசின. உடம்பிலிருந்து கதிர்கள்கிளம்பிபரவின

உலகெல்லாம் உணர்ந்தான்.

விழுந்தான். உடம்பு சிரித்தது. உலகை அனுபவித்தது. உள்ளும், புறமும் ஒரே உலகு.

''ஐயோ...'' மனோன்மணி கூவினாள்.

''மாஜிஸ்ரேட் அவனை நோக்கி வந்து மெல்ல உலுக்கினார். மெல்ல தூக்கி அணைத்தபடி வெளியே கொண்டு வந்தார். சண்முகக்கனியும், சந்தானமும் தாங்கிக் கொண்டார்கள்.

பிறர் கை படப்பட உலகாயாத உணர்வு வந்தது. சட்டை பேண்ட் தெரிந்தது சீனுவாசன் விலகி மாஜிஸ்ட்ரேட்டைப் பார்த்து கைகூப்பினான்.

''ஏதோ நிகழ்ந்துவிட்டது இல்லையா?'' மாஜிஸ்ட்ரேட் முகத்தில் வியப்பிருந்தது.

''ஆமாம்.''

''நல்லது. புத்தன் கருணை, உங்களுக்கு இது நடக்கபட வேண்டும் என்று கட்டளை. இக்கதவு, உங்கள் மனசு அவரால் திறக்கப்பட்டிருக்கிறது. இதுவரை இதை யாத்ரீகர் தொட்டதில்லை. என் வந்தனம்,''

விடை பெற்று போனார்,

மெல்ல அலர்கள் அவனை வெளியே கூட்டிப் போனார்கள். மனோன்மணி டீயை ஆற்றி அவனிடம் நீட்டினாள். அதில் அன்பு இருந்தது.

''காரணம் இல்லாம கடவுள் சிலரை ஒன்னா சேர்க்க மாட்டாருங்க. நாம அஞ்ச பேரும் உடன் பொறப்பா இப்ப நிக்கறதுக்குக் காரணம் கடவுள்தான்.''

''என்னாங்க ஆச்சு'' சண்முகக்கனி கேட்டான்.



''தன்னை மறந்துட்டாரு. தரிசனம் கிடைச்சுடுச்சு'' சந்தானம் பேசினான்.

''புத்தர் வந்தாரா...?'' சண்முகக்கனிக்கு ஆர்வம்.

''வுட்ருங்க இவரு பேசற நிலைல இல்லை.''

''எனக்கு ஆசையா இருக்குது புள்ளே. சம்பாரிச்சு சம்பாரிச்சு என்னாத்த கண்டோம், போறதுக்கு முன்ன கடவுள பார்த்துட்டுப் போக வேணாம்...வெறுமயா சாவறது...''

சண்முகக்கனி குரல் குழைந்து உடைந்து கம்மியது.

இது போதும். இந்த தாபம் போதும். இந்ததாபம் கடவுளை உள்ளே காட்டும் சீனுவாசனுக்கு சண்முகக்கனி மனசு கண்ணில் தெரிந்தது.

''சண்முகக்கனி, உனக்கும் கிடைக்கும்'' மிகுந்த அன்போடு அவன் தலையைத் தடவினான்,

சண்முகக்கனிக்கு ஏன் அழுகிறோம் என்றே தெரியவில்லை. எல்லார் மனசுள்ளும் சுகமான சுமை இருந்தது. அதன் பெயர் இறை உணர்வு.''

''ஏங்க இன்னும் எதுனா பார்க்கணுமா இந்த ஊர்ல?''

''பால்கூ நதி.''

''என்ன அங்க?''

''புத்தர் குளிச்சுட்டு நிமிர்ந்த போது வானத்துல கொக்கு வரிசை பார்த்தாரு. அப்ப பளிச்சுன்னு ஏதோ பொறிதட்டிச்சுன்னு சொல்வாங்க'' சீனுவாசன் பதில் சொன்னான்.

''போய் பார்த்துடலாம்'' சண்முகக்கனி உற்சாகப் படுத்தினார்.

பால்கூ நதி வழி கேட்டார்கள்.

மண் சாலை காட்டப்பட்டது. இரு பக்கமும் வேலி காத்தான். நடந்து போக பெரிய மணல் திட்டு தெரிந்தது "என்னாங்க பாதை முடிஞ்சு போச்சு...நதியக்காணம்..'

"எவனோ வரான்...கேட்போம்..."

"ஹிந்தி தெரியாதே" மனோன்மணி கவலைப் பட்டாள்.

"பால்கூ நதி கஹாங் ஹை?"

"இதுவே."

"இல்லை சார். நதி, நதி,வாட்டர்.நதி கே கினாரே" சந்தானம் முயற்சி செய்தான்.

"இதுவே."

"யோவ், நதியா...மணல் இல்லை."

"இருங்க. அவர் என்ன தெரியுமா சொல்றார்...நாம நதியில நிக்கறமாம். இந்த இடம் மார் ஆழமாம்" சண்முகக்கனிக்கு கொஞ்சம் ஹிந்தி புரிந்தது.

"தண்ணி?"

"இல்லையாம். மூணு மாசம் தானாம்."

"அடப்பாவி...இந்த ஊர்லயும் இப்படியா?"

"அப்ப இதுதான் பால்கூ நதி."

"இல்லீங்க.'

"மணல் நதி." பால்கூ நதி."

"நதி இருந்த இடம். இனி இருக்கப் போற இடம். இப்ப இல்லை..."

நதியைத் தேடிய கண்களுக்கு மணல் சோகமாய் பட்டது.



"வாங்க போகலாம்" திரும்பினார்கள்,

சீனுவாசன் திரும்பி நின்று நதியைப் பார்த்தான். சிரித்தான்.

"எங்க போறீங்க?" மனோன்மணி சீனுவாசனைக் கேட்டாள்.

"சிகரெட்."

"அலஹாபாத்ல எலலாம் எங்க செலவுன்னுசொன்ன மில்லை?"

"அட சிகரெட்டுக்கு வேணாம்மா."

"அப்ப நாங்க எப்ப சாப்பாட்டுக்கு வேணாம்னு சொல்லியிருப்போம் "

"இது வேணாமே."

"எத்தினி வேணும்...ஒரு பாக்கெட்?"

"அட நீங்க போய் கடைல நின்னு..."

"கேட்டா என்ன...மூணு பாக்கெட் கோல்ட்ஃப்ளேக் ஃபில்டர் கிங், சரீங்களா? தீன் பாக்கெட். தீன் பாக்கெட். நெருப்புப் பெட்டி...மேட்சி பாக்ஸ் கொடு..."

"எதுக்கு கஷ்டம்?"

அவள் சிகரெட் பாக்கெட்களை அவன் தோள் பையில் போட்டாள்.

இரண்டு நாள் சத்திரத்துல தங்காத நாம மட்டும்ஒரு ஹோட்டல் பார்த்தா என்னா...?சத்திரம்கிட்ட ஒரு நல்ல ஹோட்டல் பார்த்தேன். ரெண்டு ரூம், ஒன்னுல நாம தங்கி புருஷன் பொண்டாட்டிய ஒரு ரூம்லவுட்ருவோம்."

"நம்ம செலவுன்னு வாங்க நரசிம்மன்.'?

'கிடையாது. ராத்திரியும் அனல் பறக்குது. ஏஸில தூங்கினா உடம்பு நல்லாயிருக்குமேன்னு பார்க்கறேன்.''

''நல்லதான் இருக்கும். கூட வந்தவங்க எதுனா சொல்வாங்களா?'' சண்முகக்கனி இழுத்தார்.

''நீங்க நான்தான் செலவுன்னு இழுக்காம இருந்தா சரி.''

''சரி...உங்க ஏஸி உங்க செலவு...என் ஏஸி என்ன செலவு...மத்தது கைங்கர்யம்.''

''போடு சக்கை. பெரிய வார்த்தை சொல்றீரு.''

''சேர்மானம் அப்படி.''

''அஸ்தி கரைக்கணும்'' மனொன்மணி இடைமறித்தாள்.

''கரைக்கலாம்மா. வழில பார்த்தமே...நதி பெரிசா போறதை.''

''நடு ஆழம் போய் கரைக்கணும், கால்படாத.''

''செய்யலாம்''

இரவு முன்னூறு ரூபாய் ஹோட்டலில் தங்கினார்கள் குளித்துப் புத்தம் புது பொலிவோடு காலையில் கூட்டத்துடன் சேர்ந்து கொண்டார்கள்.

''பண்டாவுக்கு இருபது ரூபாயா? எவன் சொன்னது பகல் கொள்ளையாக இருக்கு. பனிரெண்டு ரூபாதான்'' குடுமி வைத்தவர் சீறிக் கொண்டிருந்தார்.

''அது அஸ்தி கரைக்க. வேணி தானம் இருக்கே.''

''நான் தானம் பண்ண அவனுக்கு ஏன்யா காசு?''

''அது என்ன வேணி தானம்?''



''நடு நதில நின்னு பொண்டாட்டியும் புருஷனுமா இருக்கறவா கைகோர்த்து குளிச்சுட்டு பொண்டாட்டித் தலைமுடி நுனில கத்தரிச்சு கங்கைல விட்டுருணும். அடுத்த ஜென்மமும் நாங்களே புருஷன் மனைவியா வரணும் வேண்டிக்கணும்.''

''ஏங்க நாம இதும் செய்வமா?'' மனோன்மணி கேட்டாள்.

''செய்''

''பண்டா வேணாம்? பண்டா இல்லாத செய்யக் கூடாதாமே''

''சீனுவாசன் செய்தா போதும்.''

''அவரு ஒன்றும் தெரியாதுங்கறாரே...''

''தெரியும். சும்மா சொல்றாரு. போய் கேளு.''

''நான் ஐயரே இல்லம்மா. என்கிட்ட வந்து கேக்கறீங்களே... எனக்கு ஜாதியே கிடையாது.''

''எதுனா நல்ல வார்த்தை சொல்லி கரைங்களேன் தமிழ்ல சொல்லுங்க போதும்.''

''தமிழ்லதான் என்ன தெரியும். தமிழ் கடல். துளி தெரியும்.''

''அது போதும்.''

''யாரோ ஒரு அம்மா நாப்பது ரூபா கொடுத்துட்டாங்க. நீங்களும் கொடுக்கணும்னு நினைக்கிறீங்க காசு வாங்க மாட்டேன்...''

''சரி...காசு தரலை. பக்தியா மனசு ஒப்பி எதுனா செய்யணும். வேணிதானம் கூட பண்ணணும்னு எண்ணம்.''

''செய்யுங்க.''

பண்டா யாரும் வைக்கலை குடுமி வச்சவரே பனி ரெண்டு ரூபா ஆளுக்கு வசூல் பண்ணிஅவரேசெய்யாரு.''

பண்டா அடிக்கப் போறான். அந்த ஐயரை.''

''அதான் துட்டு இங்க வாங்கிட்டாரு.''

''மந்திரம் சொல்றபோது நதிலதள்ளி விட்ருவான்.'' பொழப்புல மண்ணு போட்டா விட்டுறுவானா?''

''இத்தினி பேர் இருக்கமே தள்ள வுட்ருவோமா?''

''நாமும் அவர் கிட்டபோய் செய்துக்குவமா?''

''வேணாம். ஒரு பக்கமா இரு. நமக்கு சீனுவாசன் போதும்,''

அலஹாபாத் சந்தடியான நகரமாய் இருந்தது. எல்லாமான கடைகளும் இருந்தன. மிட்டாய் கடைகள் அதிகம் தென்பட்டன. வெய்யில் தாக்கியது. காற்று உலர்ந்துபோய் கிடந்தது. தண்ணீர் குடித்து; வயிறு உப்பியது வியர்வை அதிகமில்லை. வெப்பம். நெஞ்சுக் கூட்டைத் தாக்கி சுருள வைக்கும் வெப்பம்.

இங்கேயும் கங்கை அகலம் அதிகமில்லை. அக்பர் கோட்டையை ஒட்டி நதிப்படுக்கை. ஏகப்பட்ட படகு கள். படகுகள் மீது பாய் விரித்து கூடாய் கட்டியிருந் தார்கள்.

படகில் ஏறித்தான் திரிவேணிசங்கமம் போகமுடியும்.

''இங்க எவ்வளவு ஆழம் இருக்கும்?''

''அது இருக்கும் நாப்பது அம்பது அடி ஆழம்.''

எதிர் திசையில் படகு மெல்ல நகர்ந்தது. பச்சை யாய் கங்கை, சற்று பழுப்பாய் யமுனை, சரஸ்வதி நீல மாய், நீருக்கடியே தெரியுமாம். வேறு நிறம் சிலிர்ப்பில் உணர முடியுமாம்.'



''இரண்டு நதிதான்...சும்மாங்காட்டியும் மூணுன் றாங்க.''

''அடில ஒரு நதி ஓடுதாம்.''

''புடிச்சு தள்ளி விடறேன்...முங்கிப் பாரு.''

''ஐயோ ஆடாதீங்கப்பா. படகு கவுந்துரும்போல இருக்கு.''

''பெரிசுங்க பண்ற ரகளைதான் தாங்கலை. இப்ப தான் வயசுக்கு வந்தா மாதிரி சிரிக்கறதும் கொள்றதும்.''

நதிகள் கலக்குமிடம் ஆழமில்லை படகை தடுப்பு மாதிரி நிறுத்ல் அங்கங்கே கட்டப்பட்ட படகோடு உரசி நிற்க வைத்து, படகு விட்டு படகு ம்ாறி ஆழமில்லாத இடத்தில் இறங்கினார்கள்.

இடுப்பளவு நீர் பயணிகள் பயமின்றி குளித்தார்கள்,

பண்டாக்கள் சூழ்ந்து கொண்டார்கள். சன்யாசிகள் பிச்சை கேட்டார்கள். சீனுவாசன் திருவாசகம் சொல்ல சண்முகக்கனியும், மனோன்மணியும் அஸ்தி கரைத்தார் கள். மனமும் கரைந்தது.

''வேணி தானம் எப்படி பண்றது ஐயரே?''

கிழவரைக் கூட்டம் கேட்டது.

''இரு. நான் பண்ணிட்டு வரேன். ஏண்டி இறங் கலையா?''

''இறங்கறேன்'' கிழவி நதியில் இறங்கினாள்.

''வேணி தானம் பண்றியா?'' கிழவர் கேட்டார்.

''எதுக்கு?''

''அடுத்த ஜென்மாலயும் என்கூட இருக்கத்தான்.''

''வேண்டாம்.''

''ஆங்...''

''இருக்கறதே நாலு முடி இதைக் கத்திரிப்பானேன்''
கிழவி மறுத்தலுக்கு பொய் காரணம் காட்டினாள்.

''பண்றவா பண்ணுங்கோ'' கிழவர் நகர்ந்து கொண்டார்.

''எப்படி பண்றது?''

''பண்டாவக் கேட்டா சொம்றான்...''

''நீங்க செய்து வைக்கறேன்னீங்களே.''

''இல்லை நான் செய்யக்கூடாது.''

''ஏன்?''

''எனக்கு உடம்பு சரியில்லை. கிறுகிறுன்னு வருது''

''கிழவி கிழவரின் கைப்பிடித்து குளித்தாள். படகேறினாள்.''

கிழவர் தனியாகவும் முங்கி முங்கி குளித்தார்.

ஆதித்யம் ஹிருதயம் புண்யம். என்னவோ சொல்லியது.

''நாம கத்தரிச்சு நாம போட வேண்டியதுதான். இதுக்கு ஐயரு எதுக்கு?''

சீனுவாசன் கிழவியையே பார்த்துக் கொண்டிருந்தான்.

அந்த அம்மா அடுத்த ஜென்மத்துல இந்த புருஷன் வேணாம்னுடுச்சே ... பாத்தீங்களா?'' மனோன்மணி முணுமுணுத்தாள்.

''முடி குறைச்சலுனுச்சே'' நரசிம்மன் பதில் சொன்னான்.



''மனசு ஒப்பினா முடி ஒரு விஷயமா?'' சீனு பதில் சொன்னான்.

''நீ என்ன பண்ணப் போற மனோன்மணி?''

''என்ன செய்யணும்னு சொல்லுங்க.'' மனோன்மணி புருஷனைக் கேட்டாள்.

''உன் இஷ்டம், வெட்டறதும், வெட்டாததும்.''

மனோன்மணி இறங்கினாள். புருஷனுடன் கை கோர்த்து பலமுறை முங்கினாள்.

''என்னாங்க சீனுவாசன்...?''

''சொல்லுங்கம்மா.''

''பண்டாகிட்ட கத்திரிக்கோல் வாங்கித்தாங்களேன்...''

பண்டாவிடம் கேட்டு கத்திரிக்கோல் வாங்கித் தந்தான். சண்முகக்கனி கத்தரி பிரித்தார்.

''கழுத்து வரைக்கும் வெட்டுங்க.''

''ஏய்...என்னாது...?''

''வெட்டுங்க சொல்றேன்.''

''எதுக்கு மனோன்மணி?''

''ஏழேழு ஜென்மமும் நீங்கதான் வரணும்.''

''கோரப்படுத்திக்கணுமா?''

''மனசு ஒப்பின பிறகு முடி ஒரு விஷயமா?'' மனோன்மணி சீனுவாசன் சொன்னதைத் திருப்பிச் சொன்னாள்.

''எனக்கு ஒப்பலை.''

''என்னை வேணாங்கறீங்களா?''

''அப்படியில்லை மனோன்மணி. எதுக்கு ஒட்ட வெட்டிக்கிட்டு...'

''கழுத்துல முடிபட்டு கசகசங்குது பாப் பண்ணிக்க றேன் தப்பா...?''

விலகலுக்கும் பொய். ஒட்ட வெட்டிக் கொள்ளவும் ஒரு பொய். ஒன்று கசப்பும் பொய். மற்றொன்று இனிப்பும் பொய். சீனுவாசனுக்கு சிரிப்பு வந்தது

கழுத்து வரை ஒட்ட வெட்டி சண்முகக்கனி முடியை ஆற்றில் போட நதி வேகம் முடியை இழுத்துக் கொண்டு போயிற்று

''போ...நல்லாவே இல்லை.'' சண்முகக்கனி சிணுங்கினான்.

''முடிதானா நானு?''

''அப்படியில்லை.''

''அப்புறம் என்ன...எனக்கு நிறைவா இருக்கு''

''எப்படி?''

''உங்களுக்கு முன்ன...உங்களுக்குப் பின்ன பத்து ஆம்பளைய யாருக்கும் தெரியாத நாள் மனசுல நினைச்சுருக்கலாம். . அந்த நினைப்பு எல்லாம் வெட்டின மயிரா போகட்டும். எனக்கு எல்லா ஜென்மமும் நீங்க வரணும்.

புருஷனும், மனைவியும் கைகோர்த்து முங்கினார்கள்.

சீனுவாசன் நீராடினான். சந்தானமும், நரசிம்மனும் மூத்தோர் பெயர் சொல்லிமுழுக்குப்போட்டார்கள்.

கூட்டம் படகேறியது.

''எல்லா ஆம்படையான், பொண்டாட்டியும் முடி வெட்டிக்கிட்டாங்க. நீங்கதான் செய்யலை.''



''என்ன இப்ப?'' கிழவி சிடுசிடுத்தாள்.

''இந்த அம்மா கழுத்து மட்டும் வெட்டிக்கிச்சு. பதறவேயில்லை.''

''நீதான் அவளைக்கூத்தியான்னு கேலி பண்ணின...'' கிழவிக் காட்டிக் கொடுத்தது.

பேசியவள் புறம் திரும்பினாள்.

''அந்த மாதிரி பேசறதெல்லாம் தவறு. யாரோ எப்படியோ வாழ்ந்துட்டுப் போறாங்க. நமக்கு என்னா...?'' பேசியவளை அவள் புருஷன் கண்டித்தான்.

''நானும் இவளும் முப்பத்தி நாலு வருஷம் குடித்தனம் பண்ணிட்டோம். இங்க வந்தும் உன் காசு, என் காசுன்னு தனித்தனியா கணக்கு எழுதறா.''

''சும்மா பேசாதீங்க. என் தம்பி சொம்பு வாங்க காசு கொடுத்தான். அதுல இவங்கம்மாவுக்கும் வாங்கணுமாம். ரூபா கங்கை சொம்பை இருபது ரூபாய்னு பொய் கணக்கு எழுதணுமாம். இது' தப்பா இல்லையா? அதான் சொன்னேன். வேணும்னா நீங்க தனியா உங்கம்மாவுக்கு வாங்குங்க. என் தம்பி காசுல கை வைக்காதீங்கன்னேன். அந்த கோபத்துலஎன்னை விட்டுட்டு தான் மட்டும்போய் நாலு ஜிலேபி வாங்கி தின்னாரு. நிக்குமா... கழியுது. வேட்டி பூரா நாத்தம்.''

''அட சும்மா இருங்கம்மா. இங்க வந்து சண்டை தானா... இதுக்கா முடி வெட்டிப் போட்டீங்க.''

''இது வேணாம்னுதான் வெட்டிப் போட்டேன், போயேன்...''

சடேன்று ரபடகில் மௌனம் சூழ்ந்தது.

எல்லா மனிதர் வாழ்விலும் வேதனைகள். விதம்வித மாய் கோபங்கள். ஏன் இது? எதனால் உறவுக் கசப்பு. கசக்கிறதே என்று கத்தினாலும் விடமுடியவில்லையே எதனால்?

''சீனுவாசன், நீங்க மட்டும் தனியா வந்தீங்களே... ஏன்? வீட்ல கூட்டிட்டு வந்திருக்கலாமே...'' திடுமென்று நரசிம்மன் கேட்டான்.

''முடி வெட்டி போடவா? இந்தப் பயணத் திட்டம் நாலு மாசம் முன்னாடி போட்டது அவளுக்கும் சேர்த்து டிக்கெட் வாங்கியிருந்தேன். அவங்க வீட்ல கல்யாணம் திடீர்னு ஏற்பாடாச்சு. நான் வரலை. வேலையிருக்குன் னுட்டா. எனக்கு இந்த ட்ரிப் விட மனசில்லை வந்துட் டேன். என் மனைவி டிக்கெட்லதான் அந்த அம்மா படுத்துட்டு வராங்க...''

''தனியா வரது கஷ்டமாயில்லை.''

'தனியாதான் வரணும்...'

''ஏன்?''

''இல்லைன்னா இப்படி புத்தகயா பார்க்க முடிஞ் சிருக்காது. பொண்டாட்டி பின்னால வராளா இல்லை கூட்டத்துல காணாம போயிட்டாள்னு புத்தி போகும்.''

''அவங்க தனியா வரமுடியாதே''

''ஆமாம். அதுக்கும் ஒரு தடவை வரணும்.''

''அப்பவும் சயால ஆன மாதிரி ஆயிடுச்சுன்னா... கத்தி சுருண்டு விழுந்துட்டீங்கன்னா...''

''ஆகாது. அப்ப வேலைக்காரன் மாதிரி பெட்டி தூக்கிட்டு அலைவேன். பெட்டியிலதான் கவனம் இருக் கும். பசங்களை வேற கூட்டிட்டு வருவோமா...அதுங் களுக்கு பொம்மை, துணி மணின்னு மனசு போகும். அது ஜாலி டிரிப்பா இருக்கும்.''

''உங்களை மாதிரி ஆளுக்கு அது கஷ்டம்தான்...''



''என்ன கஷ்டம்? எப்படி அமையுதோ அப்படி எடுத்துக்க வேண்டியதுதான். இப்படி ஒத்துமையா நாலு பேர் கிடைப்பாங்கன்னு நினைச்சமா? அடுத்த முறை இப்படி துணை கிடைக்குமா? நாமளே மறுபடி போலாம்னு திடடம் போட்டாலும் கிடைக்காது, நடக்காது.''

''ஆமாங்க. நரசிம்மன் இல்லாட்டி மனோன்மணி செத்துருக்கும்'' சண்முகக்கனிபேசினான்.

''இல்லீங்க. வேற யாராவது உதவி செஞ்சிருப் பாங்க.'' நரசிம்மன் அடக்கமாய் மறித்தான்.

''இன்னமும் நீங்க யாரு என்னான்னு தெரியாது, இருந்தாலும்ஒரு நட்பு, பாசம் வந்துருச்சு'' மனோன்மணி பேசினாள்.

''இது வீட்லயும் வரணும்'' சீனு சொன்னான்.

''அங்க உரிமையாயிடுதுங்க. அதனாலதான் சண்டை.'' மனோன்மணி இடைமறித்தாள்.

''கரெக்டா சொன்னீங்கம்மா. உரிமை அதிகம் வர கசப்பு வருகிறது. கசப்பு உரிமையை எதிர்ப்பு சண்டை தருகிறது.''

''அப்ப எப்படி வாழறது?''

''உரிமை மீறாமலும், உரிமை இல்லை என்று போகாமலும்.''

''புரியலையே...''

''ஆசையை தீர்க்காமலும் அது இல்லை என்று வன் முறையுடன் அப்புறப்படுத்தாமலும்.''

''எப்படி?''

''ஆசையை உற்றுப் பார்த்தல். உரிமை தரப்பட்டா லும் இது எதற்கு என்று உரிமையை உற்றுப் பார்த்தல்...

ஆசை அல்லது உரிமை தோன்றும் போதே தெளிவோடு இருந்தல் இருக்க, அத்துமீற மாட்டோம்.''

''இந்த உத்துப் பார்க்கறதுன்னா என்னா?'? சந்தானம் கேட்டான். ''எப்படி பாக்கறது?''

''மௌனமாய் இருக்கும் போது முடியும்.''

''வாய் பேசாதயா?''

''வாய் மட்டுமல்ல, புத்தியும் பேசக் கூடாது.''

''இது எப்படி?''

''தியானம்.''

''தியானம்னா...''

''மனம், மனசைப் பார்த்துக் கொண்டேயிருப்பது. அப்படி பார்க்கப் பார்க்க மனம் சுருங்கும். மறையும். எண்ணமே இல்லாத விநாடி மனசே இல்லாத நேரம் வரும்.''

''மனசு அலையுதே...'' மனோன்மணி தாபத்துடன் பேசினாள்.

''மூச்சு ஒழுங்குபடுத்த மனம் அலையல் குறையும்.''

''எப்படி?''

''மனசுக்கும், மூச்சுக்கும் சம்பந்தம் உண்டு. மனம் அசைய மூச்சு, மூச்சு பறக்க மனம் அசையும். கோபத்தில் காமத்தில் மூச்சு மாறும். மூச்சு தாளம் பிறழ கோபம், காமம் அதிகமாகும்.''

''அடேயப்பா. உங்களுக்கு தியானம் தெரியுமா???

சீனுவாசன் மௌனமாய் இருந்தான்.

''எனக்கு கத்துக் கொடுங்களேன்.''



''சரி.''

''இவருக்கும்'' மனோன்மணி சண்முகக்கனியைக் காட்டினாள்.

''அவர் கேட்கணும்?''

''எனக்கு வரும்களா?'' சண்முகக்கனி கேட்டான்.

''எவருக்கும் வரும்...எவரிலும் இந்தத் திறன் உண்டு

''கரைக்குப் போனதும் கத்துக்கலாமா?''

''ஏங்க நானும் கத்துக்கறேனே... யம்மா...அவர் கிட்ட கொஞ்சம் சொல்லுங்கம்மா, மனோன்மணியைக் கூத்தி என்று பேசினவன் கேட்டாள். பலர் விருப்பம் தெரிவித்தனர்

நகரத்தார் சத்திரம் போவதென்று முடிவாயிற்று. ஆறு, ஏழு, எட்டு, பதினாறு என்று முப்பது பேர் சேர்ந்தார்கள்,

''என்ன பெரிசாயிடுச்சேன்னு பாக்கறீங்களா?''

''இல்லை சந்தோஷமா இருக்கு.''

''எல்லார்க்கும் தியானம் வருமா?''

''கத்துக்கறதில இல்லை, இடை விடாது பயிற்சி செய்யறதுல இருக்கு.''

''ஓம்...'' நகரத்தார் சத்திரம் முப்பது குரலில் அதிர்ந்து அமைதியாயிற்று. நாடி சுத்தி என்கிற மூச்சுப் பயிற்சி. உட்காரும் விதம், மனசு தேடும் சொல், அதில் வரும் சிரமம், விடாது மனம் தேடி பின்னால் போகும் முறை ஆரம்ப சிரமம், திகைப்பு, வலி, மயக்கம் எல்லாம் சொன்னான்.

அந்தக் கூட்டம் கண் மூடி உட்கார்ந்திருந்தது.

''இருபது நிமிஷம் அப்படியே இருங்க. உங்களுக்குள்ளேயே இருங்க. பழகப் பழக சுலபமாயிடும். இருக்கறது சந்தோஷமாயிடும்.''

அவர்கள் கண் மூடி அசையாது உட்கார்ந்திருந்தார்கள்

சீனுவாசன் நோட் புக்கிலிருந்து பேப்பர் கிழித்து எழுதினான்.

''நண்பர்களுக்கு.

சிரத்தையுடன் எதுசெய்தாலும் சிரார்த்தம். மூத்தோருக்கு செய்யும் நன்றி நான் சிரார்த்தம் செய்யவில்லை, மாறாய் நம் மூத்தோர்கள் நமக்குத் தந்த ஒரு பயிற்சியை சிரத்தையுடன் உங்களுக்குத் தந்து விட்டேன். இது இறையருள். புத்தன் கருணை. என் காசி, கயா அலஹாபாத் யாத்திரை பூர்த்தியாயிற்று என் முன்னோர்கள் சொர்க்கம் போனார்கள்.

இனி எனக்காய் போக வேண்டும். நான் ஹரித்வார், ரிஷிகேசம் போகிறேன். சில நாட்கள் அங்கு தனிமையில் இருப்பேன். உள்ளே மனசு. உட்கார்ந்து விட்டால் போதும். உட்கார்ந்த இடமே காசி, கயா. மனசு செயலை விட்டால் போதும், விட்ட இடமே வைகுந்தம். மனம் உற்றுப் பார்க்க மனம் சுடுவது தெரியும் நம் தஹிப்பு புரியும். சட்டி சுட்டது. கை விட்டது.

இது பூடகமே இல்லை. நான் தித்திப்பு என்பதை நீங்கள் தின்றாலொழிய தெரியாது. தெரிந்த பிறகு கேள்வி வராது.

நான் வருகிறேன். நீங்கள் செய்த உதவிகள் அனைத்தும் நெஞ்சில். இருக்கும். மணலை நதியென்று பார்த்தோம். திகைத்தோம், அது நதியா? மணலா? இரண்டும் தான். நதியெனில் நதி. மணலெனில்மணல். வாழ்க்கையும் அப்படித்தான். துக்கமெனில் துக்கம். சந்தோஷமெனில் சந்தோஷம். நாம் கூட்டமா, தனியா? நம்மிடையே கேள்வி வந்தது. நாம் கூட்டம் தான்.

ஆனால், கூட்டத்திலும் தனிதான். மணல் தனி. அது நதியாய் வெறும் கூட்டமாய் பரவிக் கிடக்கிறது. நீரில் குளிர்ந்தும் புரண்டும்-வெப்பக் காற்றில ஆவித்தும் அலைக்கழிந்தும் இடம் மாறுகிறது. வாழ்க்கை ஒரு மணல் நதி.யோசிக்க உங்களுக்கும் இது புரியும். உலகம் சிறியது.எங்கேனும் சந்திப்போம்.



என்றென்றும் அன்புடன்,
**சீனுவாசன்**

அவர்கள் கண் விழித்தார்கள்.

''அந்தப் பையன் மை வேலை தெரிஞ்சவன். பில்லி, சூன்யக்காரன்.அவன்கூட பழகக்கூடாது.நீங்க பாட்டுக்கு கண் மூடி உட்கார்ந்துட்டேள். பைய யாராவது எடுத்துண்டு போயிட்டா என்ன ஆகும்? 'அதான் நான் கலந்துக்கலை.'' குடுமி வைத்தவர் பேச அவருக்கு பதில் சொல்லவில்லை.

''கண்ணெதிரே புத்தர் பார்த்தானாம்.புத்தர் பார்த்தவன் ஏன் ஹரித்வார், ரிஷிகேசம் போகணும்? கயாலயே இருக்க வேண்டியதுதானே ...?''

அதற்கும் பதில் இல்லை.

''அவன் பேரு என்ன?'' குடுமிக் கிழவர் கேட்டார்.

''புத்தன்...'' மனோன்மணி மட்டும் பதில் சொன்னாள்.

அந்தக் கிழவி பொக்கை வாய் திறந்து புருஷனைப் பார்த்துப் பெரிதாய் சிரித்தது

# நேற்று வரை ஏமாற்றினாள்

கணேசன் ஏழுபவுன் தாலிக் கொடியை நிதசனமாய் நீலா யதாட்சி கழுத்தில் போட்டு கைகூப்பி, எல்லாதேவர் களையும் வேண்டிக்கொண்ட போது நீலாவின் அண்ணா வாய்விட்டு அழுதான்.

கனத்த மந்திர சப்தங்களுக்கும் கெட்டி மேளமுழக்கத் திற்கும் நடுவே அழுகை சப்தம் நீலாவுக்கு எட்டவில்லை, அதுவும் தவிர அவள் மனசு முழுவதும் தாலி கட்டும் கணேசன் கால் விரல்களிலேயே லயித்திருந்தது, இனி வாழ்க்கைப் பூராவும் இந்த கால்கள்தான் என்று தோன் றியது, இன்னும் எத்தனை லட்சமுறை இந்த கால்களில் பணிய வேண்டுமோ என்ற எண்ணம் எழுந்தது, அதே சமயம் அந்த கால் விரல் பளிச்சென்று சுத்தமாய் ரோஜா இதழ் சிவப்பாய் ஒட்ட வெட்டிய நகமும் செருப்பு வார் அழுந்திய வெள்ளைக்கோடுமாய் இருந்தது பிடித்தது,

''ச்சு...என்ன இது?'' என்று கணேசன் அதட்டிய போதுதான் அழுதது அண்ணா என்று புரிந்தது, திரும்பி அண்ணாவை பார்த்தாள், நாலைந்து பேர் அண்ணாவை தேற்றி சமாதானப் படுத்திக் கொண்டிருந்தார்கள்,

''பெரிய பாரம் இறங்கிடுத்து இல்லையா? இந்த நிம்மதில அழுகை வந்துடுத்து'' யாரோ பேசினார்கள்,



பூ பாரம். பூமியளவு பாரம். தான்தான் எல்லாம் தாங்குகிறோமென்கிற கர்வபாரம். கர்வத்தை இறக்க இவன் என்றைக்கு கற்று கொள்ளப் போகிறான். நீலா வுக்கு கேள்வி வந்தது. முகத்தை நேராக்கி தலை குனிந்து கொண்டாள்...

''ரொம்ப அழக்கூடாது அச்சான்யமாய்... அடக் கிகோ'' வேற யாரோ உபதேசித்தார்கள்.

அழுகை அடக்கச் சொல்லித் தருபவர்கள் கோபத்தை அடக்கச் சொல்லி தருவதில்லை...அழுகை பெண்குணம். கோபம் ஆண்குணம். ஆண் பெண்ணைப் போல் அழக் கூடாது. பெண் ஆணைப்போல் கோபப்படக் கூடாது, என்ற ஏகப்பட்ட விதிகள் இருக்கின்றன. ஆனால் பசி பொது–வலி பொது. அதைப் போல் அழுகையும் கோப மும் உண்டு. இதில் ஆண், பெண், மனிதர், மிருகம்என்ற பிரிவே இல்லை.

கணேசன் கல்யாண மாப்பிள்ளை, அவன் அதட்டி யது அண்ணாவை உறுத்தியிருக்க வேண்டும். ஸாரிஎன்று சொல்லிவிட்டு இடது பக்க அறையினுள் விருவிரு என்று போனான். அங்கிருந்தும் விசும்பல் சத்தம் கேட்டது.

பலபேர் உள்ளே அண்ணாவை சமாதானப் படுத்த வேகப்படுவது தெரிந்தது.

நீலா அலுப்பானாள். இது என்ன டிராமா என்று வெறுப்பானாள். ஒரு சூழ்நிலையை அனுசரித்து போக முடியாதவன் எப்படி பெரியவனாவான்? வீடு முழுக்க சந்தோஷப்பட்டால் அண்ணா சோபப்படுவான் வீடு துக்கப்பட்டால் அண்ணா தத்துவம் பேசுவான். ''இடுக் கண் வருங்கால் நகுக'' என்று திருக்குறள் சொல்வான்.

துன்பம் வரும்போது சிரிக்க வேண்டும் என்று தெரிந் தவனுக்கு சிரிப்பான நேரத்தில் எதைச் செய்ய வேண்டும் என்பதும் தெரிந்திருக்க வேண்டும். சந்தோஷத்தை எப்படி அனுபவிப்பது என்கிற ஞானமும் வந்திருக்க வேண்டும், அண்ணா எதிர்மறை இரண்டுங்கெட்டான்.

''சரி...எல்லாம் நல்லபடி முடிஞ்சுது. அட்சதை தட்டு எடுத்துண்டு சபைல இருக்கிற பெரியவாளுக்கு நமஸ்காரம் பண்ணப் போலாம். முதல்ல மாப்பிள்ளையோட தாயார், தகப்பனார், அப்புறம் உங்க அண்ணா...''

அதற்குள் பல நூறு கரங்கள் நீண்டன. கங்கிராட்ஸ் கங்கிராட்ஸ்...என்று கை குலுக்கின. கணேசனை பல பேர் மொய்த்துக் கொண்டார்கள். கணேசனுக்கு இருக்கும் செல்வாக்கு அவன் நண்பர்களைப் பார்க்கும்போது தெரிந்தது. அவர்கள் பேசும்போது புரிந்தது.

' தலைவா... பொண்டாட்டி வந்தாச்சு...எங்களை வுட்றாதப்பா...அப்பப்ப சபைக்கு வந்து போய்கிட்டு இரு...''

''அதென்ன அப்பப்ப...தினம் வருவேன்...''

''வொய்ப் திட்டப் போறாங்கப்பா...''

''அவளையும் கூட்டிகிட்டு வருவேன்.''

''ஹோ...'' என்று நண்பர் வட்டாரம் சிரித்தது.

''இதுமாலி...இது வெங்கடேஷ், இது சலீம், இது வீராச்சாமி, இது வனஜா, இது மிஸஸ் ஜெயராம், இது சுற்பகம். இவங்களைத்தான் நான் கல்யாணம் பண்ணிக்கணும்னு இருந்தேன். இவங்க அப்பாச்சீ...போடான்னார். விட்டுட்டு வந்துட்டேன்.''

''கணேசா வம்பு பண்றே...அதெல்லாம் ஒண்ணுமில்லை நீலா. பொய் சொல்றாரு'' கற்பகம் பரபரத்து முகம்மாறி விளக்கம் சொன்னாள். ''தெரியும். உங்களைப் பத்தி சொல்லியிருக்கார். இருந்து சாப்பிட்டுப் போகணும்'' நீலா கற்பகம் கைபற்றி குலுக்கினாள்.

கற்பகம் கை இறுக்கி நன்றி என்று...சொல்லாமற் சொன்னது.



கூட்டத்தில் கணேசன் தாய்-தந்தையைத் தேடி நமஸ்கரித்தார்கள். வணங்கி நிமிர்ந்த கணேசனை அம்மா முகம் ஏந்தி, நெற்றியில் கன்னத்தில் முத்தமிட்டாள்.

' பள்ளிக் கூடத்துக்கு போமாட்டேன்னு தரையில புரண்டு அழுத புள்ளை இவன்...நேத்து நடந்தது போல இருக்கு. இந்த புள்ளைய உன்கிட்ட ஒப்படைச்சுட்டேன். இனி உம்பாடு அவன் பாடு. பாங்க் வேலை கிடைச்சி மூணுநாள் போய்வேலை பிடிக்கலைன்னு ரிசைன் பண்ணினவன், இன்னொருத்தனாத்தான் இருப்பான். ரொம்பக் கவலைப்பட்டோம். இன்னிக்கி நிமிர்ந்து நின்னு கல்யாணம்னு பண்ணிக்கிறோம் பார்.கனா மாதிரி இருக்கு.

கணேசன் அப்பா பேசினார்.

''பயமுறுத்தாதேப்பா...'' கணேசன் நீலாவைப் பார்த்து சிரித்தான்.

''எல்லா கார்டையும் காட்டிறது பெட்டர். அவ தானே கேம் ஆடப் போறா...''

''சுயமா சிந்திச்சி சுயமா தேடியவன் கணேசன். முதல்ல மிரட்சியா இருக்கும் அநேகமா முடிவு சரியா இருக்கும். சில விஷயத்துல சில நேரத்துல கணேசன் என்னைவிட பெட்டர் ஆசாமி. இதை வெட்கமில்லாம சொல்றேன்.''

'உடனே பாராட்டா?' அவளா புரிஞ்சுக்கட்டும் விடு.

என்ன பேசுவது என்றே தெரியவில்லை ஆனால் மனசு சந்தோஷமாய் இருந்தது.

அண்ணா சமாதானமாகியிருந்தான். மனைவியுடன் நின்று அட்சதைப் போட்டான்.

நிமிர்ந்தபோது கணேசனின் கைகளை பிடித்துக் கொண்டு பார்த்தான். ஏதோ பேச வாயெடுத்தான். கணேசன் கை உயர்த்த முகம் மாறினான்.

''என் உயிரையே உன்கிட்ட ஒப்படைக்கிறேன். இவளை பத்திரமா பார்த்துக்க வேண்டியது உன் பொறுப்பு. அந்த மாதிரி ஏதாவது சொல்லப் போறீங்களா...வேண்டாம். என் வீடு அநாதை இல்லமோ பள்ளிகூடமோ இல்லை. வார்த்தைகளை வீணா செலவு பண்றது தவறு. என்னை அவளும் அவளை நானும்அட்ஜஸ்ட் பண்ணிக்குவோம். பண்ணித்தான் ஆகணும் இல்லையா போய் மத்தவேலைய கவனிக்கலாம்.''

''அழுததுக்கு மன்னிப்பு கேட்டுக்கறேன். மனசு தாங்கலை.'' அண்ணா பவ்யம் பொய்யாய் இருந்தது.

அழுததுல ஒரு சௌகர்யம். இப்ப மன்னிப்பு கேட்கற பணிவு காட்டற சான்ஸ் கிடைச்சாச்சு—ரொம்ப பழசா இருக்கிங்க நண்பரே...சாதாரணமா இருங்க.'' கணேசன் பேச்சு நீலா குடும்பத்தில் யாருக்கும் புரியவில்லை என்பது தெரிந்தது.

''ரொம்ப கர்வியா இருப்பான் போலிருக்கே.''

''லூஸுன்னு நினைக்கிறேன்.''

''படிப்பாளி போலிருக்கு தத்துவமா பேசுகிறான்.''

'என்ன படிப்பு? ப்ளஸ் டூ தான், காலேஜ் போகலை'

''நான் அதைச் சொல்லலை. புஸ்தகம் நிறைய படிச்சிட்டு ஒப்பிக்கிற ஜாதி.''

''ஏட்டு சொரைக்காய் கறிக்குதவாது.'' அவள் வீடு அவன் நகர்ந்ததும் என்ன பேசும் என்று அவளுக்குள் ஓடிற்று. நகர்ந்த பின் வேகமாய் அறைக்குள் பேச்சுக் குரல்கள் கேட்டன. ஒரு குரல்மட்டும் காதில் விழுந்தது.

''இந்த இடம் உனக்கு சரியா வராது. மாப்பிளை ராயன் முறைப்பா இருக்கான்.'

நீலா, அவள்வீடு பற்றி கவலைப்பட்டாள். கணேசன் கையை இறுக்கிகொண்டான். சாப்பிடும்போதும் நலங்கின்



போதும் அவள் வீட்டு மனிதர்கள் யாரும் கண்களில் தென்படவில்லை. கணேசன் வீடு ஆவலாய் சூழ்ந்து கொண்டது.

''கல்யாணம் வேண்டாம் கல்யாணம் வேண்டாம்னு சொல்லிண்டுதான் இருந்தான். திடீர்னு இந்த அழகிய பிடிச்சுட்டான். என்ன சமாச்சாரம் லவ்வா?''

''ஆமாம்...'' கணேசன் முகமாறி பதில் சொன்னான். நீலாவுக்கு தூக்கி வாரிப்போட்டது.

''எப்பத்திலிருந்து...?''

''இரண்டேகால் மணி நேரமா...?''

''புரியலையே...''

''தாலி கட்டி இரண்டே கால் மணி நேரம் ஆச்சு.''

''அடி சக்கை... அதுக்கு முன்னாடி ஒண்ணுமே யில்லையாக்கும்.''

''இல்லை...''

தாலி கட்டினவுடனே பொத்துண்டு வந்துடுத்தாக்கும்...?''

''யெஸ்.''

''பொங்கி வழியறதோ?''

''ஆமாம்.''

''ஆசை அறுபது. மோகம் முப்பது. அறுவது ப்ளஸ் முப்பது தொண்ணூறு நாள்.''

''நாள் ...இல்லை...வருஷம்''

''என்ன அது வருஷம்?''

''நீலா மேலே மோகம் முப்பது வருஷம். ஆசை அறுபது வருஷம்''

''இப்ப என்ன வயசு...உனக்கு, கணேசன்?''

வேறு ஆள் மடக்கினான்.

''முப்பது''

''அடேயப்பா அறுபது வயசு வரைக்கும் மோகம்?''

''என்ன தப்பு?''

''அதுக்கப்புறம் தொண்ணூறு வயசு வரைக்கும் பொண்டாட்டி மேலே ஆசையா?'' மற்றொருவர் விசாரித்தார்.

''உனக்கென்ன கஷ்டம்?'' கணேசன் புருவம் உயர்த்தினான்.

''எனக்கொன்றும் இல்லை.'' ''நீலா, உன் பாடு கஷ்டம்தான். இவன்கிட்ட மாட்டிண்டுட்டே. உன்னை கந்தைத் துணியா பண்ணிடப் போறான்.''

சிரிப்பு, கூரை இடித்துச் சிதறியது.

ஒரு கவளம் சாப்பிட விடாமல் கணேசன் வீடு கோட்டா செய்தது. இருபதும் முப்பதும் நாற்பது வயதான பெண்கள் வாலிப வயோதிக ஆண்கள் பட்டவர்த்தனமாய் பேசினார்கள். பரிபாஷையாய் பேசினார்கள்.

''சாப்பிட விடுங்கோடி...''யாரோ கடிந்துகொள்ள இரண்டு கவளம் விழுங்கினாள்.

புரைக்கேறியது. இருமி பருக்கை சிதறியது.

''யாரோ நினைச்சுக்கறா உன்னை...''

''வேற யாரு...கணேசன் தான்.''

''கணேசன் தான் பக்கத்துலேயே இருக்கானே...''



''பக்கத்துல இருந்தா நினைச்சுக்கக் கூடாதா? நீலாவை தூக்கி டம்ளர் ஜலம் குடிக்கறச்ச பார்த்துட்டான். அடடா...இத்தனை அழகோ'?ன்னுநினைச்சான். உடனே புரைக்கேறிடுத்து.

மேஜை குலுங்கச் சிரித்தார்கள்.

''இப்பமே இப்படீன்னா...ராத்திரி என்ன கதி ஆவாளோ...புரைக்கேறி...புரைக்கேறி...''

அவர்கள் சிரிப்பு அவர்களுக்கே தாங்காமல் கலைந்தார்கள்.

கடைசிக் கவளம் மோர்சாதம் சாப்பிடுகிறபோது மறுபடி புரைக்கேறியது. கொஞ்சம் அதிகமாகவே நிறைறியது.

''எனிதிங் ராங்'' கணேசன் கேட்டான்.

நீர் குடித்து சமனப்படுத்திக் கொண்டாள்.

''நத்திங்'' என்றாள். மனசு அலறியது. 'சந்துரு... சந்துரு' என்று குத்திக் காட்டியது. சந்துரு நினைத்துக் கொள்கிறான் என்று நினைவுகளைப் புரட்டிப்போட்டது

'அவனுக்கு பத்திரிகை அனுப்பிச்சே... ரொம்ப கெட்டவனா ஆயிடுவேன்... அவன் வரக்கூடாது. வந்தா எனக்கு பிடிக்காது'' அண்ணா கத்தினான்.

யாருக்கும் தெரியாமல் அவள் சந்திரசேகரனுக்கு பத்திரிகை அனுப்பினாள்.

'என் மேல் அன்பு செலுத்திய சந்துரு, ஆசிர்வதிக்கவும் வா? என்று பத்திரிகையில் எழுதியனுப்பினாள்.

சந்துரு காலையில் வந்தானா என்பது தெரியவில்லை தெரிந்தவர்கள் யாரும் சொல்லவில்லை. கேட்கவும் பயமாய் இருந்தது.

நலங்குக்கு புது நைலக்ஸ் புடவை கட்டிக் கொண்டு கணேசனை அழைக்கப் போனபோது கணேசன் ஒரு

பெண்ணோடு கை பிடித்து பேசிக் கொண்டிருந்தான். அருகே கணேசனின் அக்காவும் அத்திம்பேரும் இருந்தார்கள்.

''சரி...சரி...வா, போறும்'' அத்திம்பேர் அவசரப்படுத்தினார்.

''ஏன் அவசரம்?''

''நீலா வந்திருக்கா''

''வரச் சொல்லுங்கோ''

''வேண்டாம். இவ போகட்டும்.''

''நோ...நீலா, வா''

நீலா கதவிடுக்கிலிருந்து உள்ளே போனாள்.

''இது தமயந்தி''

''ஹலோ''

''நீலா, தமயந்தியும் நானும் லவ் பண்ணோம்.''

''ப்ளீஸ் கணேசன்.''

''என்ன இப்ப. எதுக்கு ஒளிவு மறைவு. அது முடிஞ்சு போச்சு. இவங்க வீட்ல ஒத்துக்கலை. எனக்கு சொத்து பத்து இல்லை. போடான்னுட்டாங்க. அந்த வெறில தான் உழைச்சு இன்னிக்கு பிஸினஸ் ஜெயிச்சுடுச்சு. லவ்ஃபெயிலியர். அதனால தமயந்தியே இல்லைன்னு நினைச்சுக்க முடியுமா? கல்யாணத்துக்கு கூப்பிட்டேன். வந்துருக்கா. பேசிப் பழகிப்பார். பிடிச்சிருந்தா நட்பை கன்டினியூ பண்ணு. பிடிக்கலைன்னா விட்டுரு.''

நீலா மிரண்டாள். கற்பகம்னு யாரையோ லவ் பண்ணதா சொன்னேனே. மனசுக்குள் கேட்டாள்



''டேய்...என்னடா இது.'' அக்கா அதட்டினாள் அந்தப் பெண் தொண்டையைச் செருமிற்று.

''பயப்படாத நீலா. எனக்கு கல்யாணம் சீக்கிரம் நடந்துரும். ரொம்ப மும்முரமா பார்த்துண்டிருக்கா. கணேஷ் ரொம்ப சியர்ஃபுல் மனுஷன். நூத்துக்கு நூறு நம்பலாம். ரொம்ப ஃப்ராங்க்-ப்ளெயின் அதுதான் கணேசின் பலம்- பல வீனம். என்னால தொந்தரவு வராது. நெல் முனை கூடபயம் வேணாம், நீ என்னபடிச்சிருக்கே?'

பத்து நிமிடம் தமயந்தியோடு பேசிவிட்டு வந்த பிறகு தன் காதலையும் யாரிடமாவது சொல்ல வேண்டும் என்று ஒரு தாபம் எழுந்தது. சொல்லிப்பட்ட அவமானம் ஞாபகம் வந்தது.

வெகு சிலரால்தான் வெளிப்படையாய் இருக்க முடியும் வெளிப்படையாய் இருக்க ஒரு சுற்றுச் சூழல் அவசியம் ஒரு மனிதருடைய சுற்றுச் சூழல் மற்ற மனிதர்களைப் பொறுத்தது,

எதற்குப் பதட்டப்படும் அண்ணாவிடம் வெளிப்படையாய் பேசினது தவறு. அந்தத் தவறுக்குத்தான் இந்தத் திருமணம் தண்டனையாய் கிடைத்தது

இது தண்டனையா. பரிசா என்பது போகப் போகத் தெரியும். தெரிந்தபின் பேசுவதே உத்தமம்.

நலங்கு முடிந்த பிறகு பாலும் பழமும் சாப்பிட நீலாவின் வீட்டுக்கு கும்பலாய் பத்து பேர் கிளம்பினார்கள். காரில் சொருகியிருந்த தினத்தந்தி பேப்பரை மிக ஆவலாய் கேட்டுகணேசன் வாங்கிப் படித்தான்.

''நீ என்ன பேப்பர் படிப்பே...?'' கணேசன் சட்டென்று திரும்பி நீலாவைப் பார்த்தான்.

''ஹிண்டு.''

''எனக்கு அவ்வளவு இங்கிலீஷ் எல்லாம் வராதுப்பா என் பேப்பர் தினத்தந்திதான்.''

'நீலா இங்கிலீஷ்ல கவிதையெல்லாம் எழுதுவா.' தேவையில்லாத நேரத்தில் தேவையில்லாததை அண்ணா சொன்னான்.

'அப்படியா...? வெரிகுட்''

அந்தப் பாராட்டு கணேசனுக்கு கவிதையில் அக்கறையில்லை என்பதைக் காட்டியது,

வீட்டில் பத்து பேர் இருக்க வெளியிலிருந்து பத்து பேர் வர நீலாவின் வீடு புளி திணித்த ஜாடி போல நெடி வீசியது

''இது சின்ன வீடு. ஏழையோட குடிசை. எயிட்டிடுலே எண்பதாயிர ரூபாய்க்கு வாங்கினேன். இது வரைக்கும் அப்படியும் இப்படியும் ஒரு லட்ச ரூபா செலவு பண்ணினேன். இன்னைக்கு எட்டு லட்ச ரூபாய்க்கு கேட்கறா இதை பாங்க்ல வச்சுதான் நீலா கல்யாணமே நடந்தது.''

உள்ளே நுழைந்ததும் அண்ணா புலம்பத் துவங்கினான்.

'மிடில் கிளாஸுக்கு கல்யாணங்கறது ரொம்பப் பெரிய பாரம். நான் அதைச் சொல்லத்தான் ட்ரை பண்றேன். லட்சத்து இருபத்திரண்டு ரூபா இதுவரைக்கும் ஆயிருக்கு.''

அண்ணா தொடர்ந்து பேச இறக்கம் இன்னும் அதிகமாகியது.

யாரோ கையைஉதறிக் கொண்டுஇந்தவீட்ல தண்ணி குடிக்கறது கூட பாவம் என்று போகப் போவது நிச்சயம் என்று நீலா பயந்தாள், அண்ணியை ஏறிட்டு நோக்கினாள். அண்ணி சலனமற்ற இருந்தாள்- பதினாறு வருஷ தாம்பத்தியத்தில் தன் புருஷன் இப்படித்தான் பேசுவான்; மாற்றமுடியாது, அந்தப் பேச்சின் விளைவை ஏற்றுதான்



ஆகவேண்டும் என்கிற தெளிவோடுஇருந்தாள்.அண்ணாவின் பேச்சு அவள் வாழ்க்கையை பலமுறை பாதித்திருக்கிறது. அவள் வீட்டை அவளோடு ஒட்டாமல் செய்திருக்கிறது. அண்டை அயலாரை மிரள வைத்திருக்கிறது. கேலிக்குரியதாகியிருக்கிறது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ஒரு குண்டு வெடிப்பில் சிதறி மறைய இரவு பத்து மணிக்கு செய்தி கேட்ட அண்ணா தெருவில் குறுக்கும் நெடுக்கும் ஓடி அழுதான். ''மகா பாவிங்களா... கொன்னுட்டீங்களேடா எங்க தலைவரை'' என்று கதறினான்.

அந்தச் சிறிய தெரு அவன் கதறலைப் பார்த்து மிரண்டது. டொம்...டொம் என்று கதவுகள் சாத்தப்பட்டன அண்ணிதான் சமாதானப்படுத்தி அழைத்து வந்தாள். தெரு கோடியிலிருந்து கைப்பிடியாய் அவனை வீட்டுக்குக் கூட்டி வந்தாள்.

''நம்ம தேசத்து விளக்கு அணைஞ்சு போச்சேடி'' என்று கத்திக் கொண்டே அண்ணா வந்தான்.

''வாஸ்தவம், என்ன பண்றது...? போறாத காலம்...'' அண்ணி மிகுந்த பொறுப்புடன் சொல்லி சமாதானப் படுத்தினர். அரை மணி அப்படியே மல்லாக்க. படுத்திருந்துவிட்டு வாசலுக்கு போனான். மிரண்டு ஒதுங்கின தெரு இப்போது கேலி செய்ய ஆரம்பித்தது.

''கொஞ்சம் எமோஷனலாயிட்டேன். ஸாரி'' என்றான்.

''கொஞ்சம் எமோஷனலா...ஏண்டா குண்டு வச்சீங்கன்னு என்னை வெட்டிருவீங்களோன்னு பயந்தேன். சாமி ஆடிட்டீர் ஓய்...'' என்றது.

''செத்துப் போனாரே... அந்த பிரதமர் கட்சியா நீங்க? ரொம்ப நாள் நண்பரா?''

''நான் எந்தக் கட்சியுமில்லை. இப்படி அநியாயமா
செத்துப் போயிட்டாரேன்னு ஒரு துக்கம்... என்னபண்ற
துன்னே தெரியலை...'' மீண்டும் குரலில் தெரிந்த
நெகிழ்வை தெருக்கூட்டம் அமைதியாய் பார்த்துக்கொண்
டிருந்தது. இப்படியும் ஒரு பைத்தியக்காரனா என்று
சிரித்துக் கொண்டிருந்தது.

சுவரில் சாய்ந்தபடி தரையில் உட்கார்ந்து ஏதோ
யோசித்துக் கொண்டிருந்த அண்ணி திடீரென்று தொண்
டையைச் செருமிக் கொண்டு பேசினாள்.

''நீலா உங்கண்ணா ரொம்ப நல்லவர். தெரியுமா?
ரொம்ப நல்லவாளாலத்தான் இப்படி கூச்சமில்லாம
நடந்துக்க முடியும். கெட்டிக்காரத்தனமா இருக்
கறவாளால முடியாது கெட்டிக்காரத்தனமும் வஞ்சனை
யும் ஒரே மாதிரி விஷயம்.''

நீலா அவளை வியப்போடு பார்க்க அண்ணி
தொடர்ந்து பேசினாள்.

''கொஞ்சம் வெட்கங்கெட்டுப்போய் உனக்கு ஒரு
விஷயம் சொல்றேன். எனக்கு ஏதோ கோவம் இருந்து
அவர் கூச்சல் பிடிக்காம இருந்து ஒதுங்கிண்டா கூட
அதுக்குப் புரியாது. இன்னிக்கு தலைவலி...வேண்டாம்னு
புரண்டு படுத்தாகூட தொந்தரவு பண்ணத் தெரியாது.
உனக்கு தலைவலிச்சா எனக்கு என்னடி... என்று பிடுங்
காது. இழுத்து ஹிம்சை பண்ணாது. தலைவலியா...
சரின்னு தூங்கிடும் நானா ஐயோ பாவம்னு தாங்காத
கிட்டப் போனாத்தான் உண்டு.''

எதற்கு அண்ணி இதைப்போய் தன்னிடம்... நீலா
முகத்தில் சங்கடம் நெளிவதை கணநேரப் பார்வையில்
அண்ணி தெரிந்துக் கொண்டு விட்டாள்.

''உன்கிட்டப் போய்இதைச்சொல்றது அபத்தம்தான்.
உங்க அண்ணாமட்டம்னு நீ நினைக்கறது எனக்கும்பிடிக்



கலை. உனக்கு அண்ணா மட்டுமில்லையே அவர். அதும்
தவிர வஞ்சனையான ஆண்கள் எத்தனைஹிம்சைபண்ணு
வான்னு எனக்குத் தெரியும். எங்க அக்கா அப்படிவாக்கப்
பட்டா. அவ சொல்லிச் சொல்லி அழறதப் பார்த்தா
என் புருஷன் எத்தனையோ தேவலைன்னு படறது.''

''அதென்ன அண்ணியின் அக்கா பட்ட ஹிம்ஸை.''

''டல் கலராதான் புடவை எடுத்துத் தருவானாம்.''

''தான் அழகா இருக்காம்கற கர்வம் பொண்டாட்
டிக்கு வரக்கூடாதுன்னு பேசுவானாம். மாசாமாசம்
அசிங்கப்படற பொம்மனாட்டி அழகுன்னு சொன்னா
அது பச்சைப் பொய்யாம். இங்கிலீஷ்லே பேசினா பிடிக்
காது. பாட்டு பாடினா தப்பு. பவுடர் போட்டுண்டா
ஆகாது. இன்னும் என்னென்னவோ...

மொத்த கதையும் கேட்க கொஞ்சம்...பகீரென்றது
நீலாவுக்கு.

தனக்கும் இப்படி ஒருவன் வாய்த்துவிட்டால் என்ன
செய்வது என்கிற பயம் புறப்பட்டது. பல் கடிக்கும்
கோபம் ஏற்பட்டது. நான் பவுடர் போட்டுக்கக் கூடா
துன்னா நீ கிராப் வச்சுக்கக்கூடாது குடுமி வச்சுக்கணும்.

நான் பாட்டுப் பாடக் கூடாதுன்னா, நீ பேப்பர்
படிக்கக் கூடாது...இங்கிலீஷ் பேசக் கூடாதுன்னா, நீ
ஆபீஸ் வேலைக்கே போகக் கூடாது. சைக்கிள் ரிக்ஷா
ஓட்டணும்...என்கிற புருஷ எதிர்ப்புக்கோபம் வந்தது.
கோபம் கவலை கொடுத்தது. இந்தக் கவலையால்தான்
காதல் வந்தது.

சந்துருவை அவள் சந்தித்தது டைப்ரைட்டிங்
இன்ஸ்டிடியூட்டில். ஷார்ட்ஹேண்ட் வகுப்பில் ஷார்ட்
ஹேண்ட் மாஸ்டர் சந்திரசேகர். இரும்புக் கம்பெனி பகல்
நேர வேலையும் இரவு நேர வகுப்புக்கு ஆசிரியனாகவும்
இருந்தவன்.

''மேடம்'' என்று முதன்முதலில் நீலாவை அழைத்தவன்.

''நான் உங்க ஸ்டூடண்ட்தானே. எதுக்கு மேடம்னு கூப்பிடறீங்க.''

''எங்க ஆபீஸ்ல அறுபது லேடீஸ். எல்லாரையும் மேடம்னுதான் கூப்பிடுவோம். கூப்பிடணும்.''

''லேடீஸுக்கு ஜென்ட்ஸ்கூட ஆபீஸ் வேலைசெய்யறதுல கஷ்டம் உண்டா?''

''ஒரு கஷ்டமும் இல்லை.''

''ப்ரைவேட் செக்ரட்டரின்னா ஒரு மாதிரி நடத்துவாங்களாமே?...''

ஆபீஸ்லேயும் லேடீஸை தப்பா நடத்த முடியாது?''

''தப்பு நடக்கவே நடக்காதா?''

''அது லேடீஸைப் பொறுத்தது?''

''லவ் மேட்டர் உண்டா?''

''இருக்கும். நல்லபடியா கல்யாணம் ஆகி ஜோடியா வந்து போயிண்டிருக்கா.''

''என் வொய்ஃப்போட நீ ஏன் பேசறேன்னு கேட்கமாட்டானா புருஷன்.''

''நல்லா இருக்கே, ஆபீஸ்ல அவ கிளார்க், நானும் கிளார்க். பேசாத இருக்க முடியுமா?''

''ஆபீஸ் மேட்டர் பேசுவீங்க இல்லையா...?''

''எல்லாம் பேசுவோம். பாலிடிக்ஸ், ஃபிளாஸஃபி, கதை. நாவல், சினிமா...''

''பயமில்லையா?''



''பயமா, கெட்ட ஜோக் சொல்ற லேடீஸும் உண்டு.'

''நிஜம்மாவா?''

''லுக் நீலா, உன் கேள்வி என்ன?''

''ஆம்பளை பயம் ஆபீஸ் லேடீஸுக்கு வராதா?''

''கடவுளே...எதுக்குப் பயப்படணும். நீலா, போன வாரம் எட்டு மாசப் புள்ளை தாச்சி ஆபீஸ்ல மயக்கமாகி விழுந்துட்டா. பனிக்குடமோ என்னவோ சொல்வாங்களே...அது உடைஞ்சு போச்சு...அப்படியே அலாக்கா நாலு ஆம்பளைகள்தான் தூக்கிக்கொண்டு போய் கார்ல போட்டு துணைக்கு ஒரு லேடி அனுப்பி மொத்த ஆபீஸும் ஆஸ்பத்திரில...ப்ரீமெச்சூர் பேபி. அவ புருஷன் எல்லோர் கையையும் தனித்தனியா பிடிச்சுண்டு கண்ல ஒத்திண்டான். பெண் குழந்தை நீங்களே பேர் வையுங்கன்னூட்டான். எல்லோரும் கூடி பேசி ஸ்நேகான்னு வச்சோம்.''

''ஏன்...?''

''ஸ்நேகிதர்கள் கொண்டு போய் சேர்த்து பொறந்த குழந்தை ஸ்நேகா.''

''ஹவ் ஸ்வீட்...'' நீலா வாய்விட்டு வியந்தாள்.

''லவ்வுக்கு முன்னாடி ஸ்நேகம் வேணும். லவ்வுக்கு பிறகும் ஸ்நேகம் வேணும். லவ்னா நெருக்கமான ஸ்நேகம் அவ்வளவுதான்.''

அந்த கணமே அவன் மீது ஸ்நேகம் பொங்கியது. கண் திறந்து வைத்தவன்மீது நன்றி ஏற்பட்டது. நன்றி நட்பாகியது. நட்பு காதலாகியது.

''எனக்கு அம்மா அப்பா இல்லை. மூணு அக்கா உண்டு. எல்லோரும் நல்லபடியா இருக்கா. அதுல முத ரெண்டு பேருக்கும் பெண்கள் உண்டு. எம்பொண்ணை

பண்ணிக்கோ...எம் பொண்ணை பண்ணிக்கோன்னு பிரச்சனை. நான் முடியாதுன்னுட்டேன்...''

''ஏன்?''

''அக்கா பொண்ணைக் கல்யாணம் பண்ணிக்கறது சயன்டிஃபிக்கா தப்பு. பிறக்கற குழந்தை மக்கா, செவிடா ஊமையா பொறக்கும். இது உறுதிப்பட்ட விஞ்ஞான கண்டுபிடிப்பு.''

''இதுதான் காரணமா?''

''இது மட்டுமில்லை. முதல் அக்கா பொண்ணைக் கல்யாணம் பண்ணிண்டா இரண்டாவது அக்காவுக்கு வருத்தம் இரண்டாவது அக்கா மகளை சரின்னா மூத்த அக்காளுக்கு மனசு கஷ்டம்.''

''உங்களுக்கு இஷ்டம் தானா?''

''எனக்கு இரண்டுமே இஷ்டமில்லை.''

''ஏன்?''

''அதுகள் காசு காசுன்னு அலையற ஜாதி?''

''என்ன தப்பு?''

''காசு அவசியம்தான். ரொம்ப காசு காசுன்னு புருஷனை விரட்டினா வாழ்க்கை அசிங்கமா போயிடும். ஏதோ பேரம் போல ஆயிடும். நிறைய சம்பாதிக்க லைன்னா சோப்ளாங்கின்றது தப்பான விஷயம்.''

''எப்படியிருக்கணும்?''

''சொந்தமா எட்டு நூறு ஸ்கொயர். ஃபீட்ல ஒரு ஃப்ளாட் ஒரு ஸ்கூட்டர். ரெண்டு பசங்க. இதுதான் அதிக பட்சம். செகண்ட்கிளாஸ் ட்ராவலிங் போதும்.



வருஷத்துக்கு குடும்பத்தோட இரண்டு பயணம் போதும். நாயா பேயா காசு காசுன்னு சுத்தாத எட்டு மணி நேர வேலை. மிச்ச நேரம் வீடு. எப்பவாவது ஓவர் டைம். வாழ்க்கையை அனுபவிக்கணும். மத்தவாளை அனுபவிக்க விடணும்.''

அழகு அழகு என்று வியந்தாள்.

தனக்கும் அதே எண்ணம் என்றாள்.

அவன் உற்றுப் பார்க்க தலை குனிந்தாள்.

''என்னை பிடிச்சிருக்கா'' என்று கேட்கம்...ம்... என்று புன்னகை செய்தாள்.

''வாயைத் திறந்து சொல்ல மாட்டியா?''

''ரொம்பப் பிடிச்சிருக்கு சந்துரு.''

''தாங்க்ஸ் நீலா. வா கோவிலுக்கு போகலாம்.''

''இப்பவேவா? க்ளாஸ் இருக்கே.''

''கட் அடிச்சிரு ''

''ஏன் கோவிலுக்கு?''

''உன்னை மாதவபெருமாள் முன்னால நிறுத்தி பெருமாளே, இவளை எனக்குப் பிடிச்சிருக்கு என்னை இவளுக்கு பிடிச்சிருக்கு. நாங்க கல்யாணம் பண்ணிக்கறது உங்களுக்குப் பிடிச்சிருக்கான்னு கேட்க.''

''மாதவப் பெருமாள் பதில் சொல்வாரரா?''

''சொல்வார்.''

சொல்வாரா ''எப்படி?''

''துளசி கொடுத்தா சிரமம். மல்லி கொடுத்தா சுகம்''

''ஐயோ பயமா இருக்கே.''

''நான் எல்லாத்துக்கும் அங்கேதான் போவேன்.'' போனார்கள்.

அவனுக்குத் துளசியும் அவளுக்கு மல்லியும் தரப் பட்டது.

''இரண்டு பேரும் ஒண்ணாதானே வேண்டினோம் எனக்கு மல்லி உங்களுக்கு துளசி வந்ததே.''

பிரார்த்தனை உன்னை வச்சுத்தான். உனக்கு மல்லி கிடைச்சது எனக்கு சந்தோஷம்?''

''நம்ம கல்யாணம் நடக்குமா?''
''நிச்சயம்.''

''இப்படி திருவுளச்சீட்டு மாதிரி பிரார்த்தனை செய்துக்கறதே தப்புன்னு தோண்றது. பலமில்லாத விஷயமோன்னு படறது,''

''எல்லாம் நம்ம இஷ்டத்துக்கு நம்ம பலத்துல நடக்குமா. இப்படி ஒரு நல்ல கம்பெனில வேலை கிடைக்கும் இப்படி ஒரு நல்ல லவ் கிடைக்கும்னு நான் நினைச்சதே இல்லை இது கடவுள் அருள்.''

''எங்க அண்ணாக்கிட்ட வந்து பேசறேளா?''
''அக்கா அத்திம்பேரைக் கூட்டிண்டு வரேன்?''

வர மறுத்து விட்டார்கள். எவளையோ லவ் பண்ணி எங்கேயோ கல்யாணம் பண்ண நாங்க எதுக்கு என்று ஒதுங்கி விட்டார்கள்.

கொஞ்சம் ஆடிப் போனான். தனியாய் வந்தான்.

''நோ...நோ லவ். பிஸினஸ், ஷார்ட் ஹேண்ட் கத்துக் கொடுக்கறத விட்டுட்டு இதெல்லாம் என்ன காரியம். படியேறி வந்து கேட்க என்ன தைரியம்?'' அண்ணா எகிறினான்.

''நானும் பிராமின்தான் சார்.''



''அதனாலதான் படியேறவே விட்டேன்.'' ஜாதி வெறி வார்த்தைகளால் கொப்பளித்தது.

''நாங்க லவ் பண்றதுல என்ன சார் தப்பு?''

''நீ லவ் பண்றதுக்கா எங்கப்பன் பெத்துப் போட்டுட்டு போயிருக்கான். லவ் என்னடா...லவ்...போய் உங்க அக்கா பொண்ணை லவ் பண்ணு.''

''எனக்கு இஷ்டம் இல்லை சார்.'

''உன்கிட்ட தப்பு இருக்குடா. நீ உள்ளூர்ல விலை போகாத மாடு. அதான் வெளிய வந்து மேயற. உடம் பொறந்தாளே பொண்ணு தர மாட்டேன்னுட்டா. நீ எந்த மூஞ்சி வச்சிண்டு எங்க வீட்டுப்படியேறிபொண்ணு கேட்கற—எங்களை என்ன இளிச்சவாய்னு நினைச்சுண்டியா? தப்பு நிஜம்மா உன் பேர்ல இல்லை. எங்க வீட்டு பொட்டை நாய் அலைஞ்சிருக்கு மோப்பம் பிடிச்சிண்டு வந்துட்டே.''

வார்த்தைகள்...வார்த்தைகள்...வார்த்தைகள் என்ன பேசுகிறோம். ஏன் பேசுகிறோம் என்று அறியாது மயக்கத்தில் கண் தெரியாத அகந்தையில் கிளம்பி தரைமோதிய வார்த்தைகள். பேசப் பேசதான் பேசுவது தனக்கே பிடித்துப் போய்-பேச்சு சுகத்திற்கே மேலும் பேசத்தூண்டிய வார்த்தைகள்.

''நான் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கறேன் சார். நீலாவை எனக்குக் கல்யாணம் பண்ணி வைங்கோ சார்.'' சந்துரு காலில் விழுந்தான்.

நைச்சியம் பண்ணுதல் என்பது தோல்வியின் முதல் படி. பலமற்ற செய்கை. 'கிட்டாதாயின் வெட்டென மற' என்பது உயர்ந்த வாசகம். எவரையும் நம்பி எவரும் இல்லை என்கிற அர்த்தம். ஒன்று மறுக்கப்படுகிறபோது வேறொன்று தரப்படும் என்கிற பேரருள் விஷயம். இன்னது வேண்டும் என்கிற பிடிவாதம் துக்கத்தில் போய் முடியும். கிடைத்த பிறகு பெரும் ஏமாற்றம் சூழக்கூடும்.

இதற்கா இத்தனை பிடிவாதம் செய்தேன் என்கிற இழிவு மனப்பான்மை வந்து விடக்கூடும்.

எல்லாம் தெரிந்தது போல் பேசிய சந்துரு வேரறுந்த செடி போல் விழுந்தது கண்டு நீலா வெதும்பினாள்.

ஐயோ இது தப்பு என்று உள்ளுக்குள் கூவினாள்.

நிறைய பேசுகிறவர்கள் பிரச்கினைகளை சந்திக்கிற போது தடுமாறி விடுகிறார்கள் என்பது புரிந்தது.

அந்தப் பேச்சுகள் கடன் வாங்கியவை. உறுதி இல்லாதவை. வெறும் காகிதக் கத்தி. போருக்கு உதவாத பேச்சு புரிந்தது.'கிட்டாதாயின் வெட்டென மற'சந்துரு இந்த நல்ல வாக்கியம் மறந்தான்.

'கீழோராயினும் தாழ உரை...' அண்ணா இந்தச் சொற்றொடரை அறியாது போனான்.

''கால்ல வுழுந்துட்டா எடுத்துண்டு போன்னுஉன் சப்பரைல பொண்ணைப் போட்டுருவாளா...ஏன்டா பிச்சை கேட்கற பொருளா பொம்மனாட்டி? நாங்க என்ன இளிச்சவாயன்கள்னு நினைச்சியா?''

மனிதருக்கு பல்லாயிரம் முகங்கள். கூனிக் குறுகி குழைந்து பேசும் அண்ணா, கூச்சலாய் அல்ப விஷயத்திற்கு அழும் அண்ணா கால் மேல் கால் போட்டு அதட்டியது வேடிக்கையாய் இருந்தது.

'கீழோராயினும் தாழ உரை'

இந்தவிஷயத்தை இனிமையாய், இதமாய்சொல்லிலும் செயலிலும் கனிவாய் அண்ணா சொல்லியிருக்கலாம். உன் வீட்டிலுள்ள பெரியவர்களைப்பகைத்துக்கொண்டு, அவர்கள் துணையின்றி உன்னைப் பற்றி எந்தப் பொறுப்பும் ஏற்காத விதத்தில் என் வீட்டு படியேறி வந்து என் தங்கையைப்பெண் கேட்கிறாயே? இது நியாயமா, உனக்கு



ஒரு தங்கையிருந்தால் இப்படியொரு சம்பந்தம் ஏற்பாயா நானும் உன் ஜாதிதான் என்று பேசுகிறாயே, இது நம் ஜாதி வழக்கமா? எனக்கும், என் தங்கைக்கும் தாய்தந்தையர்கள் இல்லை-அதனால் இந்தவிஷயத்தில்என்பொறுப்பு கூடுதலாகிறது என்பதை புரிந்து கொண்டாயா?

வந்து படியேறி பெண் கேட்பதாலேயே நீ வீரனாகி விட முடியாது தம்பி. மனித வாழ்க்கை அநித்யமானது. நெருப்பு என்றால் வாய்சுட்டு விடாது. நாளைக்கு திருமணம் என்ற விஷயத்திற்குப் பிறகு, உனக்கோ, என் தங்கைக்கோ சங்கடம் வந்தால் அதைத் தீர்க்க உன்பக்கம் யார் ஆள். ஒருநியாய தர்மம் சொல்லஎவர் உண்டு. உன் வயசுக்கு இந்த விஷயத்தின் கனம் என்பது என்ன என்பதே புரியாது. உனக்குத் திருமணமாகி பெண் பிறந்து, நான் இன்னாரை லவ் பண்ணுகிறேன் என்றுசொன்னால் பரிரென்று போகும் உன் சகோதரிகளுக்குத் திருமணமாகி விட்டது என்று சொல்கிறாய். அவர்களில் யாரும் லவ் மேரேஜா? வீட்டை விட்டு ஓடியவர்களா? ஏன் அவர்கள் ஓடவில்லை. சம்பிரதாய கல்யாணமென்பது சலிப்பான விஷயமல்ல. ஆணும், பெண்ணும் உறவு ஏற்படுத்திக் கொள்ளும் விஷயமல்ல. அது குடும்பமும் குடும்பமும் ஏற்படுத்திக் கொள்ளும் ஒருஉறவு—ஒரு கூட்டமும் இன்னொரு கூட்டமும் கொள்ளும்உறவு. உனக்கு ஒரு வேதனையும் வேண்டாம். நாளைக்கு எனக்கொரு வேதனையென்றால் கூட்டம் வந்து நிற்க வேண்டும்.

நான் சொன்னவைகளை யோசித்துப் பார். காதலுக்குக் காரணம் அழகோ, இளமையோ எனில். அழகும் இளமையும் வெகு சீக்கிரம் மறையும். மறைய, காதலும் காணாது போகும். காதலுக்குக் காரணம் குடும்ப கௌரவமாக இருத்தல் நலம். குடும்ப கௌரவம் என்பது என்றைக்கும் அறியப்படாத விஷயம். அழியப்படக் கூடாத விஷயம். மேன்மேலும் வளரக் கூடிய விஷயம்.

நான் பேசியதை தனியே அமர்ந்து யோசித்தாயாஞல் மறுபடியும் இந்த வீட்டிற்கு வரமாட்டாய். வந்தாயெனில் நீ யோசிக்கவில்லை யென்பதே பொருள். யோசனையில்லாதவனுக்குப் பெண் கொடுக்க எவருமே யோசிப்பார்கள்.

நல்ல விதமாய், இப்படிப் பேசியிருந்தால் அந்தக் காதலனும் கலங்கி ஓடியிருப்பான். காதலிக்கப்பட்ட பெண்ணும் மல்லாந்து படுத்து யோசித்திருப்பாள். தாழ உரைத்தலில், பிறரை தாழ்ச்சியாக உரைத்தலில் கசப்பே மிஞ்சுகிறது. கீழோர் என்பதற்கு வயதில், புத்தியில், வலிமையில் என்றுதான் பொருள் கொள்ளவேண்டும். அண்ணா புத்தியில் கீழோன். பிறரை தாழ உரைத்து தன்னை உயர்த்திக் கொள்ளும் கீழோன்.

நொந்த முகத்தோடு சந்துரு எழுந்து போனதும், நீலா தன்காதல் பற்றியே யோசித்தாள் அண்ணாவிடம் பேசத் தெரியவில்லையே சந்துருவுக்கு என்று கவலைப்பட்டாள். வேறு விஷயங்களில் தெளிவுள்ளது போல பேசிய சந்துரு இங்கே அபத்தமாய் போனது எதனால் என்று கவலைப் பட்டாள். இரண்டு நாள் அதே சிந்தனையாய் இருக்க வேறொரு விஷயம் புரிந்தது.

இங்கே பல பேருடைய புத்திசாலித்தனங்கள் கடன் வாங்கப்பட்ட புத்திசாலித்தனங்கள். புத்தகங்களில் படித்த புததிசாலித்தனங்கள். பக்குவப்பட்டவர்களின் பேச்சைக் கேட்டு அப்படியே கொட்டப்பட்ட புத்திசாலித்தனங்கள். கொஞ்சம் புத்தகப் புழுவாக இருந்தால் கூடப் போதும். நிறைய தத்துவங்கள் சொல்லி விடலாம். படித்த கும்பலில் இரண்டு வருடம் இருந்தால் போதும், வேகமாய் ஆங்கிலம் பேசிவிடலாம். எழுதுகிற நிர்பந்தம் வந்தபோது பேச்சு மொழி புலமை கிழிந்து போகும். வாழ்க்கை என்று வருகிறபோது தத்துவம் செல்லாக் காசாகும்.



சந்துரு எழுந்து போனது சோகமாய் இருந்தது. ஆனால் என்ன சொல்லித் தடுப்பதென்று தெரியவில்லை. சந்துருவை எவ்வளவு தூரம் நம்புவது, அவனோடு செய்யப் போகும் குடித்தனம் எத்தகையதாக இருக்கும் என்ற சந்தேகம் வந்தாலும், தன் காதல் விஷயத்தில் தானும் போராடிப் பார்க்கவேண்டும் என்ற ஆசை எழுந்தது.

''ஆம்பள மேல தப்பில்ல, பொட்டச்சி பல்லைக் காட்டினா எவனும் படியேறி வந்து வழியத்தான் செய்வான். நம்ம பொண்ணு மேல தப்பிருக்கு. இனிமே ஷார்ட்ஹேண்ட் க்ளாஸ் போக வேண்டாம். இனிமே சமைக்கறது. துவைகறது, ஒட்டடையடிச்சி வீடு பெருக்கறது எல்லாம் நீலாவே பண்ணட்டும். உடம்பு கொழுப்பு தானா குறையும்.''

''என்னடி முறைக்கற'' அண்ணா கை ஓங்கினான், டேபிளிலிருந்த இங்க் பாட்டிலிருந்து, கண்ணாடி டம்ளர் வரை ஒரே வீச்சில் தள்ளினாள். ஹால் முழுதும் கண்ணாடி சிதறியது.

''அத்தனை திமிரா நாயே'' அண்ணா விளக்குமாறு எடுத்து வந்தான். நீலா முந்தானையை இடுப்பில் செருகி எதிர்த்து நின்றாள்.

''என் மேல் ஒருஅடி விழுந்தது, ரயில்லேயோ, பஸ்லேயோ விழுந்து செத்துப் போயிடுவேன் என் தற்கொலைக்கு நீதான் காரணம்னு சொல்லிட்டு சாவேன்.''

பல் கடித்து கத்தினாள்.

''வீட்டை விட்டு வெளில போனாதானடி சாவே.''

அண்ணா வாசற்கதவை தாழ்போட்டு கொண்டான்

''நம்ம வீட்டுப் பொண்ணு லவ் பண்ணக் கூடாது. சொந்த ஜாதியா இருந்தாலும் அந்த அசிங்கம் இங்கே நடக்காது. நான் பார்த்து செய்யறதுதான் கல்யாணம். நான் சொல்றவனுக்குதான் கழுத்த நீட்டணும்.''

உரக்க கத்தினான்.

''முடியாது''

நீலா பதிலுக்குக்கத்தினாள். வலதுபுஜத்தில் இரண்டு துடைப்பக் கட்டை அடி விழுந்தது. நீலா புழக்கடைக் கதவை திறந்து கொண்டு ஓடினாள். சுவரேறி அடுத்த வீட்டுப் புழக்கடை யில் குதித்தாள். அடுத்த வீட்டுக்குள் நுழைந்தாள். அங்கே ஐம்பது ரூபாய்கேட்டு வாங்கிக் கொண்டாள். தெருவிலிறங்கினாள். ஓட்டமும் நடையுமாய் தெருமுனைக்குப் போனாள். ஆட்டோ பிடித்து ஸ்நேகிதியின் வீட்டில் இறங்கினாள். ஸ்நேகிதியின் கட்டில் சுருண்டு படுத்து அழுதாள். ரயிலிலோ, பஸ்ஸிலோ விழுந்து தற்கொலை பண்ணும் எண்ணம்வரவேயில்லை.

பயத்தில் பக்கத்து வீட்டில்போய் ஒளிந்து கொண்டிருக்கலாம் என்று நினைத்த அண்ணா அடுத்த அரைமணியில் அவளைத் தேடி, காணோம் என்றதும் பயந்து போனான். வேறு ஆட்டோ பிடித்து உறவினர்கள் வீடு வீடாய்த் தேடியிருக்கிறான். அண்ணியின் ஆலோசனைப் படி, மறுநாள் காலையில் ஸ்நேகிதி வீட்டிற்கு வந்தான். அவள் முழுசாய் இருப்பதைப் பார்த்துவிட்டு அழுதான். ''வீட்டுக்கு வா.'' என்று அழைத்தான்.

''ரெண்டு நாள் கழிச்சு வரேன் போ'' என்று அவள் அவனைக் திருப்பியனுப்பி விட்டாள்.

சந்துருவுக்கு ஃபோன்செய்ய, அவன் லீவில் போயிருப்பது ஏனோ அவன் மீது வெறுப்பு வந்தது ஸ்நேகிதியின் அப்பாவும், அம்மாவும் தீர விசாரித்தார்கள்.

''அந்த சந்துரு நல்ல பையனா இருந்தா விசாரிக்கலாமே காசைக் கொட்டி கல்யாணம் பண்றதுக்கு பதிலா கச்சிதமா முடிக்கலாமே. மறுபடி அவன் ஆபீசுக்கு வரட்டும் நாமபோய் பேசுவோம். அவன் அக்கா வீட்டுக்குப் போய் பேசுவோம்.

ஒருவாரமாகியும் சந்துரு திரும்பவில்லை. அவன்அக்கா வீடுஇவளை தேடி வந்தது. நீலாவின் அண்ணாஇல்லாத



போது வந்தது. சந்துருவின் அக்கா உயரமாய், அகலமாய் இருந்தாள். அடிக்கடி வைர மூக்குத்தியைத் துடைத்துக் கொண்டாள்.

''உங்க வீட்ல ஏதாவது தப்பு நடந்துடுத்தா?'' என்று மன்னியைக் கேட்டாள்

சாதுவான மன்னி சீறியெழுந்தாள். மன்னி அப்படிச் சீறி நீலா பார்த்ததேயில்லை.

''இத்தனை பெரிய பொம்மனாட்டிக்கு ஒரு பதவிசு வேண்டாம். நாக்குமேல பல்லைப் போட்டு இப்படியா கேக்குறது. உன் வீட்ல படியேறி இப்படிக் கேட்டா ஒத்துக்குவியா நீ...''

''எங்க வீட்டுப் பொம்பளைங்க இப்படி அலையறதில்லை...''

எதிர் பதில் வந்தது.

''வெளில போடீ முதல்ல வெளில போ...''

அண்ணி வாசலுக்குக் கை காட்டினாள்.

நெஞ்சு குமுறி தப்புவார்த்தை சொல்லவேண்டாம்னு பார்க்கறேன். என்னை சொல்ல வச்சுடாத போவெளில'' அண்ணி மறுபடி கூவினாள்.

எதிர் பக்கமும் கத்தியது.

''ஏன் உன் உடன்பொறந்தான் அலையறவனா. வீடு வீடா தேடறியே. உனக்கு அடங்காதவனா? எங்க வீட்டு புழக்கடைல உன் தம்பி சாக்கடை வாரிண்டிருந்தான்னு யாரோ சொன்னாளா?''

''என் வீடு சாக்கடையுமில்ல, வாரிப் போட எவனும் வரவுமில்ல உன் தம்பிய எங்காவது தேடு—ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரியா போய்ப் பாரு.''

சாதுவாய் இருப்பவர்களின் வார்த்தைக்கு சக்தி உண்டோ?

சந்துரு திருப்பதி கோவிலில் தலை சுற்றி விழுந்து விட்டானாம். கோவில் நிர்வாகம் கீழ்த் திருப்பதிக்குக் கொண்டு போய் ஆஸ்பத்திரியில் சேர்த்ததாம். மஞ்சள் காமாலை என்று கண்டு பிடித்து வைத்தியம் செய்ததாம். சந்துரு கண் விழித்துப் பேசியபோது விசாரித்து வீட்டிற்குத் தந்தி கொடுத்ததாம். அக்கா வீடு திருப்பதிக் குப் போய் அவனைத் தூக்கிக்கொண்டு வந்து சென்னை ஆஸ்பத்திரியில் சேர்த்தது. இது ஸ்நேகிதி மூலம் நீலா வுக்குத் தெரிந்தது. என்ன செய்வது என்று தெரியாமல் நீலா அழுதாள். சோகமானாள்.

அண்ணியோடு உட்கார்ந்து பத்து தேய்க்கிற போது, ''நான் என்ன பண்ணட்டும் அண்ணி?'' என்று கேட்டாள்.

''மறந்துடு.''

''ஏன்?''

''மனசு பதட்டமா இருக்கிறவாளுக்கு உடம்பு பாதிக்கும். பதட்டமில்லாம இருக்கறதுக்கு ரெண்டு வழி உண்டு. ஒண்ணு தீவிரமா யோசிக்கறது. இல்ல தைரியமா ஸ்வாமி மேல பாரத்த போடறது. தன்னையும் நம்பாம, கடவுளையும் நம்பமா இருக்கிறவாளுக்கு பதட்டம்தான் வரும். பதறின காரியம் சிதறும். சிதறி காரியம் பண்றவன எப்படி நம்ப முடியும்.''

''அண்ணா பதறலியா அவர் கூட நீங்க குடித்தனம் பண்ணலியா?''

''அந்த இம்சையை நீயும் படணும்னு தலையெழுத்தா?''

''அன்னிக்கு அண்ணா நல்லவர்ன்னு பரிஞ்சு பேசினேன். இன்னைக்கென்னவோ குறையா சொல்றேளே.''

''புருஷன்னு பரிஞ்சு பேசினேன். நீ புரிஞ்சுக்கணும்னு கேட்டா இப்படித்தான் சொல்லுவேன்.''



''எப்படி?''

''ஒரு பெண் அமைதியாக இருக்கணும்னா ஒரு புருஷன் பணக்காரனா இருக்க வேண்டாம். படிச்சவனா இருக்க வேண்டாம். பதறாம இருந்தா போதும். குடித்தனம் ரொம்ப சந்தோஷமா இருக்கும். குழந்தைகள் ஆரோக்கியமா வளரும். அந்த சந்தோஷத்தை, ஆரோக்கியத்தை எந்தக் காசாலே வாங்க முடியாது. திடுக்குன்னு எழுந்திருக்காத தூக்கம். தேவையேயில்லாத பயம், நிசையே தெரியாத சண்டை இல்லாத வாழ்க்கைதான் நல்லது. வீடு ஒற்றுமையாக இருந்தா எத்தனை கஷ்டம் வந்தாலும் தெரியாது. நான் நிம்மதியா தூங்கினதேயில்லைன்னு உனக்குத் தெரியுமே. என் பிறந்த வீடு நம்ம வீடு மாதிரியில்லை. எங்கம்மாவுக்கு அப்பா கால் பிடிச்சு விடுவார். எங்களுக்கு சாதம் பரிமாறுவார். எங்களுக்கு சினிமா டிக்கெட் வாங்கி கொடுத்துட்டு படம் முடியற வரைக்கும் வாசல்ல உட்கார்ந்திருப்பார். அவருக்கு சினிமா பார்த்தா தலை வலிக்கும். வீட்ல இருக்கறவா பார்த்துட்டு வந்து கதை சொன்னா ரொம்ப பிடிக்கும். அவருக்கும் கஷ்ட சம்பாத்தியம்தான். ஆனா எங்கம்மா மூஞ்சி சுளிச்சதேயில்லே.

''இதம் தரும் மனையின் நீங்கி
இடர் மிகும் சிறைப்பட்டாலும்...''

பாரதி பாட்டை அடிக்கடி பாடுவார். மனை என்பது இதம். வீடு என்பது சுகம். இது சுகமா இருந்தா, இதுக்காக எத்தனை கஷ்டம் வேணுமானாலும் பட முடியும்னு சொல்லுவார். அப்ப புரியலை இப்ப புரியுது.''

''என் கல்யாணத்துக்காக காசு வேணும்னு வாலண்டரி ரிடையர்மெண்ட் வாங்கினார். காசோட வீட்டுக்கு வந்து ரொம்ப கவலையோட உட்கார்ந்தார். நான் அழுதேன்.''

''சீச்சீ அழாதே,எனக்கு துபாய்ல வேலை கிடைக்கும்.
இதை விடக் கூடுதல் சம்பளம்னு சொன்னார். ஐம்பத்தி
ரெண்டு வயசில துபாய்க்குப்போனது எங்கப்பாவாதான்
இருக்கும். நாலு வருஷத்ல திரும்பி வந்து, போதும் சம்
பாதிச்சதுன்னு சொன்னதும் எங்கப்பாவாதான் இருக்கும்
அந்த நாலு வருஷமும் எங்கம்மா பட்ட தவிப்பு இருக்கே,
அது காதல். அதுதான் காதல். கத்தை கத்தையா அம்மா
லெட்டர் எழுதுவாள். அப்பாகிட்டேயிருந்து லெட்டர்
வரும். அவர் சம்பாதிச்சது போதும்னு வீட்டுக்குத் திரும்
பின மறுவாரம் ரெண்டு பேரும் உட்கார்ந்து எல்லா
லட்டரையும் சிரிச்சுகிட்டே கிழிச்சு எரிச்சுட்டா—அந்த
சிரிப்புதான் காதல்—அதுதான் குடித்தனம். அந்த கடிதங்
களை வேர் யாரும் படிக்கக் கூடாதாம், அவங்களுக்கும்
அது இனிமே முக்கியமில்லையாம்.''

''எங்கப்பா அன்னைக்கொரு வார்த்தை சொன்னாரு
அம்பது வயசுக்குப் பிறகு பொண்டாட்டிய பிரிஞ்சு வேற
ஊர்ல இருக்குப்போது மனசுக்குள்ள ஏற்படற காதல்
இருக்கே அதுதான் பரிசுத்தம்னு. ஏம்ப்பா அப்படி சொல்
றேன்னு கேட்டேன். அத சொல்ல முடியாது அனுபவிச்சா
தான் புரியும்னிட்டாரு. உனக்கு புரியறதா? எனக்குப்
புரியலை, என்னிக்காவது புரியுமா? தெரியலை?''

''ஒண்ணே ஒண்ணு சொல்றேன் நீலா. பதறாதவன்
தான் மனுஷன், அழகன், மன்மதன், அப்படியொரு மன்
மதன் கிடைக்க, எனக்கோ உங்கக்காவுக்கோ கொடுத்து
வைக்கல—சில பாம்பு கடிச்சா விஷம். சிலதுக்கு விஷ
மில்லை—எனக்கு கிடைச்சது விஷமில்லா பாம்பு. அது
வரைக்கும் சந்தோஷம்''

வாழ்ந்தவர்கள் மனசுவிட்டு விளக்கிச் சொல்லும்
போது வாழ்க்கை புரிகிறது. ஆனால் விளக்கிச் சொல்வது
எப்போதாவதுதான் நிகழ்கிறது.



நீலா சந்துருவைத் தேடிப் போகாததற்கு மன்னியும்
காரணம்—மன்னியின் பேச்சும் காரணம்.

காதல் என்று நீலா நினைத்துக் கொண்டிருந்தது
கல்யாணத்தைத்தான். தனக்குப் பிடித்த புருஷனை தானே
தேர்ந்தெடுத்து திருமணம் செய்து கொள்வதுதான். கண்
மூடித்தனமான கிறக்கங்கள் அதில் ஏதுமில்லை. நினைக்
கிற காரியம் சரியாக வராது என்று தோன்றிய நேரம்
முற்றிலுமாய் ஒரு விழிப்பு வந்தது. ஒரு விலகல் வந்தது.
ஒரே ஒரு முறை சந்துரு கைகளைக் கோர்த்து, தோள்
பட்டையில் சாய்ந்தது நினைவுக்கு வந்தது. திருமணத்
திற்குப் பிறகு இவன் எப்படிப் பழகுவான் என்று கண்ட
கனவுகளை அவளே அவசரமாகக் கலைத்தாள்.

சந்துருவின் மீது காதல் குறைந்து கொண்டே வந்த
நேரம் அண்ணா முழுமுரமாக வரன் தேட ஆரம்பித்தான்
அந்த வருஷத்திற்குள் நீலாவின் கல்யாணம் நடந்து
விட்டால் மொட்டை போட்டுக் கொள்கிறேன். எடைக்கு
எடை தருகிறேன். உருண்டு வருகிறேன் என்று பல தெய்
வங்களுக்கு வேண்டிக் கொண்டான்.

ஆனால் தெய்வங்கள் சோதனை செய்தன. முதல்
தடவை பெண் பார்க்க ஒரு என்ஜீனியர் மாப்பிள்ளையும்
அவனோடு இருபது பேர்களும் வந்தார்கள். சந்தையில்
மாடு பல் பிடித்துப் பார்ப்பது போல் பார்த்தார்கள்.
முப்பது சவரன் நகை என்று ஆரம்பித்தார்கள். பெரும்
பட்டியல் கொடுத்தார்கள். ''பெண்ணைப் பிடித்திருக்
கிறதா?'' அண்ணா கேட்டதற்கு ''அது நீங்கள் செய்யும்
சீரிலிருக்கிறது'' என்றார்கள்.

மன்னி அண்ணாவை முந்திக் கொண்டு, கோபப்
படாமல் அவர்களுக்கு பதில் சொன்னாள்.

''ஒரு ரெண்டு வருஷம் பொறுத்துக்கோங்கோ, நீங்க
சொன்ன சீருக்கு மேலேயே பண்றோம். என்ஜீனியர்
மாப்பிள்ளைன்னா சும்மாவா.'' சிரித்தபடி விலக்கினாள்.

''எங்களுக்கு பொண்ணை ரொம்ப பிடிச்சிருக்கு. சீக்கிரமே வந்து சொல்லுங்கோ.'' என்றார்கள்.

நீலாவுக்கும் அண்ணாவுக்கும் திகைப்பாக இருந்தது. மன்னி தட்டிக் கழிக்கிறாள் என்பது புரிந்தது. மன்னியின் தந்திரம் புரியாமல் இரண்டுமுறை அவர்கள் ஆள் அனுப்பிய போது அல்பத்தனமான காரணங்களைச் சொலலி, மன்னி அவகாசம் கேட்டாள். அவர்களுக்குப் புரிந்து போய் வருவதை நிறுத்திக் கொண்டார்கள்.

அடுத்த முறை பெண் பார்க்க வந்தவன் சபையிலேயே நீலாவைப் பிடிக்கவில்லையென்று சொல்லி விட்டான்.

''போட்டோல இருந்த மாதிரி அழகா இல்லை'' என்று சொன்னான்.

அங்கேயும் மன்னி விளையாடினாள்.

''என்ன இப்படி சொல்றார் உங்க பையன். நீலாவுக்கு சினிமால நடிக்க ரெண்டு தடவை சான்ஸ் வந்தது. நாங்க தான் வேண்டாம்னுட்டோம் மேக்அப் போட்டா எல்லா பொண்ணும் அழகாதான் இருப்பா நான்தான் இன்னைக்கு வெள்ளிக்கிழமையாச்சே, வெறும் மஞ்சளும், குங்குமமும் போறும்னுட்டேன்.''

கூட வந்தவர்களால் இந்த குத்தலைத் தாங்க முடியவில்லை.

''மன்னிக்கணும், எங்க வீட்டுப் பையன் தப்பாபேசிட்டான். சட்டுன்னு இப்படி சொல்லியிருக்கக் கூடாது ''

வருந்தினார்கள்.

பெண் பார்க்க வந்த பையனின் தமக்கை மிகுந்த கோபத்துடன் பையனைப் பார்த்து முட்டாள் என்று திட்டினாள். அந்த ஒரு வார்த்தை ஆறுதலாக இருந்தது.



வெட்டுப்பட்ட இடத்தில் ஈரத்துணி கட்டியதுபோல் ஜில்லென்றிருந்தது. உலகத்தில் நல்லவர்களும்இருக்கிறார்கள் என்று நினைக்க வைத்தது. ஆனால் யார் நல்லவர்கள்— எங்கே இருக்கிறார்கள் என்பதுதான் கேள்வி. பெரிய கேள்வி.

ஆறாவது முறை பெண் பார்க்கும் படலம் நடக்கும் போதே மிக அயர்ச்சியாய் இருந்தது. இந்த சிஸ்டமே தப்பு என்று எல்லோருக்கும் தோன்றியது. ஆனால் வேறு வழி முறைகளில் போக விருப்பமில்லாமலிருந்தது. அது துயரமான நிகழ்ச்சி—ஒரு தந்தி.

''நான் இல்லாமல் என் வீடு உங்கள் தங்கையைப் பெண் பார்க்க வருகிறது. மறுத்து விடுங்கள். நான் வேறு ஒரு பெண்ணை நேசிக்கிறேன்.'' எண்ணெயை அடுப்பிலேற்றிக் காய வைத்து பஜ்ஜியைப் போடுகிறபோது தந்தி வர, வீடு ஸ்தம்பித்துப் போயிற்று.

அண்ணா ஓடிப்போய் டெலிபோன் செய்தான்.

''எங்க உறவுக்காரர் ஒருத்தர் தவறிப் போயிட்டார். தந்தி வந்தது. சகுனம் சரியில்லே. நிறுத்திடுங்கோ'' என்றான்.

எதிர் பக்கத்திற்கு ஏதோ புரிந்திருக்க வேண்டும்.

''நீ பஜ்ஜி போடறத நிறுத்தாதே நாம சாப்பிடுவோம். மன்னிக்கு அண்ணா கட்டளையிட்டான்.

பஜ்ஜி சரியானபடி வரவில்லை. மன்னிக்குப் போட மனதில்லை. வெந்ததைத் தின்னும்போதும் ருசிக்கவில்லை.

''பகவானே ஏன் இப்படி தள்ளிப் போறது'' அண்ணா புலம்பினான்.

''அந்த சந்துரு வேணா எப்படியிருக்கான்னு பார்த்துண்டு வரேளா'' மன்னி குரல் கொடுத்தாள்.

''முடியாது. அது மட்டும் என்னால முடியாது. மான ரோஷம் இருக்கறவா யாராவது போய் பார்ப்பாளா?''

அண்ணா கத்தினான். மன்னி மௌனமானாள்.

நீலாவுக்கு தான் பார்த்து வரலாமா என்று தோன்றியது, அப்படிப் பார்த்தால் என்ன பேச? திட்டம் வந்தது. மனிதர்களின் மனதுக்கு சக்தி அதிகம். ஆழ்ந்து ஒருவரை நினைக்க, யாரை நினைக்கிறோமோ அவரை அருகாமையில் கொண்டு வந்துவிடும். மன்னியும் நீலாவும் குழந்தைகளுக்கு யூனிபார்ம் வாங்கப் போகும்போது, கூட்டமான பஸ்ஸில் சந்துருவை எதிரும் புதிருமாய் சந்தித்தார்கள்.

''சௌக்யமா?'' என்று சந்துரு கேட்க, ''இதுதான் சந்துரு.'' அவனுக்குப் பதில் சொல்லாது நீலா மன்னியிடம் பேசினாள். அவனுக்கு பதில் சொல்லட்டுமா என்று கண்களால் கெஞ்சினாள்.

மௌண்ட் ரோட்டில் இறங்கி, போஸ்ட் ஆபீஸிற்குப் போய் மூவரும் உட்கார்ந்து கொண்டார்கள். மன்னி, பேசு என்றாள். அதீத யோசனையில் இருந்தாள்.

சந்துருவுக்கென்று அவன் அப்பா கொடுத்த சொத்து கும்பகோணத்தில் நிலமாய் இருந்ததாம். விற்கப் போனபோது குத்தகைக்காரன் அப்பாவுக்கு டெலிபோன் பண்ணி சொல்லி விட்டானாம். அடுத்த எட்டு மணி நேரத்தில் அத்திம்பேர் கும்பகோணம் வந்தார். ''விற்பதானால் எனக்கு விற்றுவிடு'' ஐம்பத்தைந்தாயிரம் ரூபாய்க்கு எழுதி வாங்கிக் கொண்டார். சென்னை போனதும் பணம் தருகிறேன் என்றார்.

நிலம் ரிஜிஸ்டராகியது. ஆனால் பணம் வரவில்லை.

''எம் பொண்ணை கல்யாணம் பண்ணிக்கோ. ஒரு லட்சம் தரேன். இல்லை வேறு எவளையாவது கல்யாணம் பண்ணிக்கோ அன்னிக்கு பேசின பணம் தரேன். இப்போ எங்கிட்டே பணம் இல்லை இருந்தாலும் தரமுடியாது. நீ கண்டபடி செலவழிச்சுடுவே.''



வேறு விதமாய்ப் பேசினார்களாம். மறுபடி கும்பகோணம் ஓடிப்போய் குத்தகைக்காரனிடம் பயிர் செய்யாதே என்று தடுக்க அவன் அரிவாள் எடுத்துக் காட்டினானாம். கும்பகோணம் போலீசில் மனுஎழுதித் தர ''போதை மருந்து வாங்க நிலம் விக்கிறியே, நீ நல்லாருப்பியா'' என்று திட்டினார்களாம்.

அத்திம்பேர் அவனைப்பற்றி அங்கங்கே அழகாகச் சொல்லியிருந்தார். அவன் பேச்சு எடுபடாமல்போயிற்று.

ஐம்பதாயிரம் ரூபாயோடு நீலாவின் அண்ணாவிடம் மறுபடியும் வரலாம் என்ற கனவு மறுபடியும் உடைந்து போயிற்று. எந்த அக்காவும் உதவி செய்ய வரவில்லை. மாறாய் ''அவனுக்கு ஏன் நிலம் வித்தே எனக்கு விற்க வேண்டியதுதானே'' என்று கேட்டார்களாம்.

''இன்னிக்கி அதனோட மதிப்பு ரெண்டுலட்ச ரூபாய் காவேரி பாசனத்தை கால் காசுக்கு வித்துட்டியே—'' திட்டினார்கள்.

''ஏமாத்திட்டான்னு கேஸ் போடு. பயிர் பண்ண முடியாம ஸ்டே ஆர்டர் வாங்கு. ஆரம்பத்ல கோர்ட், கேசுக்கு முப்பதாயிரம் ரூபா செலவாகும். நீ லோன் வாங்கி கேஸ் போடு. நான் கூட நிற்கிறேன்'' என்றார்கள்.

சந்துரு தவித்துப் போனான், யாரை நம்புவது என்று தெரியாமல் குழம்பி போனான்.

அலுவலகத்திலுள்ள நண்பர்களிடம் பேசினான். ''நிலம் சம்பந்தமான தகராறுன்னா திருப்பதிக்கு வேண்டிக்கோ, கேஸ் போடறதுக்கு முன்னாடி சன்னதிலேயே சீட்டு போட்டு பார்த்துரு.'' நண்பர்கள் அவ்வளவுதான் செய்ய முடியும்.

சந்துரு திருப்பதி போனான். கூட்ட நெரிசலில் மயங்கி விழுந்தான். காதல் போனதும், காசு போனதும் அவனைப் பைத்தியமாக்கி விட்டன.

இது பொங்கு சனி. அடுத்த இரண்டரை வருடத்திற்கு நாய்ப்பட்டபாடுதான் என்றும் பயமுறுத்தினார்கள்.

மஞ்சள் காமாலை என்பதால் இன்னும் ஆறு மாசம் மோர் சாதம் மட்டுமே சாப்பிடச் சொல்லியிருக்கிறார்கள். உடம்பு நோய் குணமாகிவிட்டது. மனநோய் நீடிக்கிறது. கையில் சேமிப்பு என்று நூறு ரூபாய்கூட இல்லை. அப்பல்லோவில் கொண்டுபோய்ச் சேர்த்த உறவுகள் அவனையே காசு கட்டச் சொல்லிற்று. பன்னிரண்டு நாளுக்கு பதினேழாயிரம் ரூபாய் செலவாயிற்று இனி லீவு கிடையாது. வேலைக்குப் போனால்தான் காசு. உடுத்த உண்ண வேலைக்குப் போயே ஆகவேண்டும். பஸ்ஸிற்கு ஓடினால் முதுகு வலிக்கறது. பாரம் தூக்கினால் கை வலிக்கிறது. ஆனால் மனசு மட்டும் நீலா நீலா என்று அலை பாய்கிறது.

''அலறி என்ன புண்ணியம். அலறும் மனதை அடக்குவதே உத்தமம்.''

மன்னி மெல்லிய குரலில் உபதேசித்தாள். ''இப்ப கையில் எவ்வளவு காசிருக்கு'' என்று கேட்டாள்.

''பன்னிரெண்டுரூபாய் நாற்பது பைசா.''

மன்னி அவனுக்கு பர்ஸிலிருந்து நூறு ரூபாய் கொடுத்தாள். அவன் வாங்க மறுத்தான். 'ம்' என்று அதட்டிய போது வாங்கிக் கொண்டான்.

''எங்களுக்கு நேரமாயிடுத்து என்று கிளம்பினாள். நீலாவுக்கு வேறஇடத்தில் மாப்பிள்ளைபார்த்துட்டோம், ரெண்டுமூணுமாசத்துலமுடிஞ்சுடும். உங்களுக்கோ, நீலாவுக்கோ, கொடுப்பினை இல்லை. உங்க காதலைஇதோட விட்டுடறது நல்லது. கண்பட்ட நேரம் சரியில்லை. தொடர்ந்து பேசினா தப்பாதான் போகும். கல்யாணம் பண்ணிண்டாதான் காதலா எங்கேயோ நாற்பதுவயசுல எதிரும் புதிருமா பார்த்து, இது என்னோட முதல்



புள்ள, எட்டாவது படிக்கறான். இது என்னோட முதல் பொண்ணு ஆறாவது படிக்கறதுன்னு மாத்தி மாத்தி பேசிக்கலாம் தயங்கி தயங்கி விசாரிக்கலாம். குழந்தைகள் சட்டுன்னுபேசிக்கும். அதுங்க பேசறது பார்த்துண்டிருக்கலாம். அப்பவும் ஒரு லவ் இருக்கும். இது நீலாவோட குழந்தைன்னு ஒரு வாஞ்சை பெருகும். கை நிறைய சாக்லேட் அள்ளிக் கொடுக்கத் தோணும். அங்க நிறைஞ்சு போயிடும். அதோட சரி—எல்லா லவ்வும் அத்தோட சரி இது விதி. மாத்த முடியாது. இதுதான் எனக்குன்னு சாகற வரைக்கும்னு நிக்கறது காதல் இல்லை. கர்வம். நான் எத்தனை உறுதியானவன்னு ஊருக்கு காட்டற கர்வம். தனக்கு தானே காட்டிக்கற கர்வம். பிடிவாதம் பிடிச்சா அதுக்குப் பேரு காதலா, பிடிவாதத்துக்குப் பேரு பிடிவாதம்தான். எப்படியாவது காதல் ஜெயிச்சே ஆகணும்னு சூழ்ச்சி பண்றது பிசகு காதல்ல சூழ்ச்சி வந்தா சூழ்ச்சிதான் நிற்கும். காதல் போயிடும்.''

''இதைத்தான் சுருக்கமா, சூதும் வாதும் வேதனை செய்யும்ப்பாங்க. வாதுன்னா வாதம் பிடிவாதம். சூதுன்னா சூழ்ச்சி. தந்திரம்—இதால வேதனைதான் வரும். காதல்-வேதனையா. வேதனை தர்ற விஷயத்துக்குப் பேரு காதலான்னு யோசிக்கணும்''

மன்னி மெல்லப் பேசி மிரள வைத்தாள். ஆட்டோ பிடித்து வீடு திரும்பினாள், கதவை பாதி சாத்திக் கொண்டு அறைக்குள் சுருண்டு தூங்கினாள். அன்று சந்துரு மீதிருந்த காதல் நீலாவுக்கு வடிந்து போயிற்று. ஐயோபாவம் என்கிற எண்ணமே மிஞ்சிற்று. ஆனால் ஐயோபாவமும் ஒரு விதக் காதல்தான்.

காதல் எப்படி சட்டென்று வந்ததோ அப்படியே காணாமலும் போயிற்று. தனக்கு மட்டும்தான் இப்படியாகிவிட்டதா என்று யோசிக்க, இல்லை என்று பதில் வந்தது.

டைப்ரைட்டிங் இன்ஸ்ட்டியூட்டில் அவள் வசிக்கிற வீதியில் அவளுக்கு அருகேவசிக்கும் பெண்களின் வாழ்க் கையிலெல்லாம் காதல் வந்து போயிருக்கிறது, வரை முறை தாண்டிய காதலர்களும் கண்டு கொள்ளாமல் விடப்பட்டு வேறு ஏதோ விதத்தில் திருமணமாக்கப் பட் டிருக்கிறது. விசாரிக்க நிறைய காதல் தோல்விகள்தான் காதில் விழுந்தன. மனம் சமாதானமாயிற்று. மெல்ல மெல்ல அவனை மறந்து போயிற்று.

நீலாதாஸன் என்கிற பெயரில் சில கவிதைகளை ஆங் காங்கே பார்க்க முடிந்தது. முதல் கவிதை படிக்க, 'திக்' கென்றிருந்தது. ''ஏமாற்றி விட்டாயடி பாவி'' என்கிற மாதிரிக் கவிதைகள் அவை. நாலாவது கவிதை படிக்கிற போது அவனை முட்டாள் என்று சொல்லத் தோன்றிற்று ''கிட்டாதாயின் வெட்டென மற'' என்ற பழமொழியை நீலா தனக்குள் சொல்லிக்கொண்டாள். அவனைச் சுத்த மாய் மறந்தாள். பல்லிடுக்கில் சிக்கிக் கொண்ட அந்த காதல் இனிப்பு சில சமயம் சுவாரஸ்யமாகவும்,சில சமயம் சுத்தமாய் வாய் கொப்பளிக்க வேண்டுமென்கிற எண்ண மாகவும் தோன்றின.

ஆனால் கணேசன் தனியாக பெண் பார்க்க வந்த போது, அவனை மிக மரியாதையாய் வரவேற்றது. ஆச்சரியமாக இருந்தது.

' அப்பா அம்மா வர முடியலே கடைசி நேரத்தில் டிக்கட் கேன்சல் பண்ண வேண்டிய நிர்பந்தம். வீட்டுக்கு ஜல்லியடிக்கறது வேலையாட்களால் தள்ளிப் போறது விட்டுட்டு வரவும் பயம். வயலூர். வீடு கட்டறோம் வயலூர்ன்னா நிஜமாவே வயலூர். சுத்தி வயல் இருக்கற ஊர். சிமெண்டும், மணலும் திருடு போச்சுன்னா கஷ்டம் தேதிய மாத்தாதே, தள்ளிப்போடாத நீ போய் பார்த் துண்டு வா, தள்ளிப்போட்டா பெண் வீட்டுக்காரர் களுக்கு மனசு சங்கடமா இருக்கும்னு சொன்னாங்க.



எனக்கு இப்பவே பொண்ணை பார்க்கணும்னு ஒண்ணும் அவசியமில்லை. எங்கப்பாம்மாவோட வரும் போது பார்த்துக்கறேன். பெத்தவா வரலைன்னு சொல் லிட்டு போகத்தான் வந்தேன்.''

''அவன் உட்கார்ந்த தோரணை பேசியவிதம், எல்லா வற்றிலும் ஒரு அவசரமே இருந்தது. வந்தாச்சு பார்த் துருங்களேன் உங்கப்பாட்ட ஜாதகம் கொடுத்த போது உங்க முடிவுதான் அவர் முடிவுன்னு சொல்லிட்டாரு.''

அண்ணா கை கூப்பினார்.

''அந்த போட்டோல இருக்காளே அவதான்னா பொண்ணு எனக்குப் பிடிச்சிருக்கு. சட்டென்று கூடத்தில் இருந்த குடும்ப போட்டோவைக் கை காட்டினான். மிகச் சரியாய் அவளைக் கண்டு பிடித்தான். வீடு கொஞ்சம் ஆச்சர்யப் பட்டது.

''பார்த்துதான் ஆகணும்னா பார்க்கறேன். மத்தபடி பாட்டு நமஸ்காரமெல்லாம் வேண்டாம்''

''ஏன் பாட்டு பிடிக்காதா?'' மன்னி நடுவில் புகுந் தாள்.

''பாட்டு பிடிக்கும். ஆனா பாடப் பிடிக்காது.''

''புரியலையே''

''ரொம்ப பாட்டிருந்தா யோசிக்கறது குறைஞ்சுடும்' என் தொழில் என் யோசிப்பதோடு சம்பந்தப் பட்ட விஷயம்.''

''என்ன தொழில்?''

''உங்க வீட்டுக்காரர் சொல்லலையா என்னது டிரா வல்ஸ். ஆறு கார் வச்சுருக்கேன்... இது தவிர நாலு வேன், மூணு டெம்போ என் டிராவல்ஸ்ல ஓடறது.பேச்சுத்தான் பிசினஸ் பேச யோசிக்கணும், யோசிச்சுதான் பேசணும். நான் பாடினா சரியா வராது.''

''சந்தோஷம்.''

மேற்கொண்டு என்ன பேசுவதென்று எவருக்கும் தெரியவில்லை.

''சிட்டில வியாபாரத்த வச்சுண்டு வயலூரில் வீடு கட்டுவானேன்.''

''அது என் வீடில்லை. அப்பாவோட வீடு.''

''வயசான காலத்துல அங்கே தனியா இருப்பானேன்.''

''ரெண்டு பொண்ணு. மூணு புள்ளைன்னு இத்தனை நாளா ஒன்னாதான் இருந்தோம். இப்ப தனியா போகணும்னு அப்பா ஆசைப்படறா. லெட் தெம் என்ஜாய். பத்து வயசிலேர்ந்த கிராமத்து வாழ்க்கைய மறுபடியும் அனுபவிக்கணும் அவருக்கு தோணியிருக்கு.''

''வயசானவாள அங்க தனியா விடலாமா?''

''எங்க வீடு கொஞ்சம் விசித்திரம். ஒரு வயசு வந்துட்ட பிறகு அவங்கவங்க இஷ்டத்துக்கு விட்டுடுவோம் ப்ளஸ்டூக்கு அப்புறம் என்னபண்ணப்போறேன்னு எங்கப்பா கேட்கவே இல்லை. உன் இஷ்டம். என்ன வேணாலும் பண்ணுன்னுதான் சொன்னாரு. நான் பத்தாயிரம் சீப்பு பாம்பேலேர்ந்து வாங்கிட்டு வந்து தமிழ்நாடு முழுவதும் வித்தேன்.''

''தலை வார்ற சீப்பா''—அண்ணா தேவையின்றிக் கேட்டான்.

''வேற எதுக்கு?'' பளிச்சென்று பதில் வந்தது மன்னி மெல்லியதாய் சிரித்துக்கொண்டாள். அவனுக்குபம்பாயை பற்றி, பெங்களூரைப்பற்றி, டெல்லியைப்பற்றி, கல்கத்தா



வைப் பற்றித் தெரிந்திருந்தது. ''கடவுள் நம்பிக்கை உண்டா?'' அண்ணா திடுமென்று கேட்டான்.

இத்தனை அனுபவமுள்ளவன், தன்னம்பிக்கையுள்ளவன் கடவுளை நிராகரிப்பானோ என்ற பயத்தில் கேட்டான்.

வந்தவன் பக்கம் மௌனம் நிலவியது... ''கடவுள் நம்பிக்கை உண்டா என்றுநீங்கள் கேட்கிற கேள்விக்கு அர்த்தம், கடவுள் இருக்கிறாரா இல்லையா என்பதாய் எடுத்துக் கொள்ளட்டுமா? இதற்குப் பதில் எனக்கு தெரியாது. எனக்கு பதில் சொல்லத் தெரியாது. இந்தக் கேள்வியைக் கொஞ்சம் மாற்றினால் பதில் சொல்வேன். கடவுள் வேண்டுமா, வேண்டாமா என்று கேட்டால், வேண்டும் என்று பதில்சொல்வேன். சில சமயம் சிலவிஷயங்களில் முடிவு செய்ய என்னால் இயலவில்லை. அப்போது கடவுள் என்றவிஷயத்தின் மீது பாரத்தைப் போட்டு விடுவேன். அப்போது யோசிக்க வேண்டிய அவசியமில்லாது போகிறது.''

மன்னி முகம்மலரச் சிரித்தாள். அவளுக்குவந்தவனை பிடித்துப் போயிற்று என்பது அவள்கண்களில் தெரிந்தது

''நீலா இங்கு வா'' என்று கூப்பிட்டாள். அறிமுகப்படுத்தினாள். ஒரு ஐந்து வினாடிகள் கணேசனின் கண்கள் அவள் உடம்பு முழுவதும் மேய்ந்தன

''என் பேர் கணேசன். குட்லிங் டிராவல்ஸ்.''

பாக்கெட்டிலிருந்து கார்டு எடுத்துக் கொடுத்தான். கை கூப்பினான். நீலாவுக்கு சிரிப்பு வந்து விட்டது. அவனும் சிரித்தான். மன்னியும் சிரித்தாள். அண்ணா மட்டும் எதற்கு சிரிக்கிறார்கள் என்பது தெரியாமலிருந்தான்.

''சட்டுன்னு விசிட்டிங் கார்டு கொடுத்தது முட்டாள்தனம்தான், எனக்கென்னவோ பெண் பார்க்க வர்றதே பிடிக்கல. அந்தமாதிரி சூழ்நிலை ரொம்ப இறுக்கமா

இருக்கு போலியா இருக்கு. சகஜமா, சாதாரணமா இருக்கட்டுமேன்னுதான் விசிட்டிங் கார்டு கொடுத்தேன். ஒரு வேளை நம்ம சம்பந்தம் ஏற்படலேன்னாக்கூட கார் டிராவல்ஸ்ன்னு ஒரு காண்ட்ராக்ட் வச்சுக்கலாமே. அப்பநான் வரட்டுமா. உங்களுக்கு பிடிச்சிருந்தா இந்த நம்பருக்கு ஃபோன் பண்ணுங்கோ...அப்புறம் அம்மாவ அனுப்பறேன்.''

இனி முடிவு உங்கள்கையில் என்பதுபோல அவன் போனது மிகுந்த நிறைவைக் கொடுத்தது.

'அந்த மனுஷன் நடையில் ஒரு அவசரம் தெரியலை' நீலா கேட்டாள். மன்னி மறுத்தாள்.

''மகாகெட்டிக்காரன்— எல்லா அவசரத்திலேயும் எல்லா விஷயங்களையும் கவனமா பார்த்துக்கறவன். என்ன கேள்வி கேட்டாலும் பதில் தயாரா வச்சிருக்கறவன். அடுத்தது. இந்த கேள்வி வரும்னு தெரிஞ்சு கேள்விக்கு முன்னாடியே பதில் சொல்றவன்.''

''இவன் நல்லவனா, கெட்டவனா?'' நீலா மறுபடி கேட்டாள்.

''இதுவரைக்கும் கெடலை. இனி எப்படியோ தெரியாது. கெட்டிக்காரன் கெட்டுப் போனா சரசரன்னு அதலபாதாளம் போயிடுவான். நல்லபடி இருக்கத் தீர்மானிச்சா ரொம்ப உசரம் போயிடுவான். அது வளர்ப்பு சூழ்நிலையைப் பொறுத்தது.''

''கெட்டுப் போகலைன்னு எப்படி சொல்ற மன்னி''

''உத்து உன் உடம்பைப் பார்த்தான். நீ வெட்கப் படறேன்ன உடனே சாதாரணமாயிட்டான். என்ன பாக்கறபோது கண்ணை பார்த்து பேசினான். எனக்கென்னமோ இவன பிடிச்சிருக்கு. உன்னை மாதிரி தத்திக்கு இவன்தான் சரி.''



நீலாவால் இந்த விமர்சனத்திற்கு பதில் கூடசொல்ல முடியவில்லை, வந்தவன்மீது காதல் வரவில்லை. அவனைப்பற்றி ஒரு ஆச்சர்யம் வந்தது. அவனுடைய அப்பாவும், அம்மாவும் வந்து பார்த்தார்கள். ஐந்து நிமிடம் மட்டுமே பேசிக் கொண்டிருந்தார்கள்.

''உங்க இஷ்டத்துக்கு எதுவேணாலும்பண்ணுங்கோ—எங்க பக்கம் அறுபது எழுபது பேர்வரலாம். எங்களுக்கு வசதியும் வேண்டாம். புடவை வேஷ்டியெல்லாம் வேண்டாம். உங்க சம்பிரதாயத்ல எது செய்ய முடியுமோ அது செய்தாப்போதும்.''

''எங்க சம்பிரதாயம்'' என்று மன்னி நீட்டி முழக்க அதுவும் தடுத்து நிறுத்தப்பட்டது.

''எம்புள்ளைக்கு உங்க பொண்ணை பிடிச்சிருக்கு. உங்க குடும்பம் பிடிச்சிருக்கு. உங்களை ரொம்ப பாராட்டினான்.''

மன்னியைச் சுட்டிக் காட்டினார்கள். மன்னி மெனிதாய் மிரண்டாள்.

சம்பிரதாயமான திருமண அழைப்பு அச்சடித்து, ஐம்பது அவனிடம் கொடுக்கப்போன போது பதிலுக்கு நூறு அவன்போட்ட கார்டு கொடுத்தான். மூன்று நாட்களுக்க கார் கொடுத்தான். அவள் அம்மா, அவன் பங்காய் கொடுத்த நகை என்று ஒட்டியாணமும் கல் வளையலும் கொடுத்தான். விருப்பமிருப்பின் திருமணத்தன்று போட்டுக் கொள்ளட்டும் என்றான்.

ஜானவாசமில்லை. முதல் நாள் மாலை ரிஸப்ஷன். கோட்டுசூட் இல்லை முழுக்கை சட்டையும், பேண்டுமே அணிந்திருந்தான். நிறையபேர் கார் டிராவல்ஸ். ஏதேதோ கம்பெனி ஆட்கள்...ஏகப்பட்ட டிரைவர்கள்... மெக்கானிக்ஸ் அந்தக் கூட்டத்தில் ஒரேஒரு கூவல் மட்டுமே நீலாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''கணேசு...ஐயரா நீ. இத்தினி நாளு எங்க ஜாதின்னு நினைச்சுகிட்டிருந்தேன்.''

மறுநாள் முகூர்த்தத்திற்கு ஒரு குறிப்பிட்ட வங்கியை சேர்ந்த பெண்கள் மட்டும் வந்திருந்தார்கள். அந்தவங்கி கூட்டத்திலிருந்துதான் கற்பகமும், தமயந்தியும் அவளுக்கு அறிமுகப் படுத்தப்பட்டார்கள். நலங்கு முடிந்தவுடன் மாலை டிபனோடு சத்திரம் காலி செய்யப்பட்டது. அவன் வீட்டில் இரவு விருந்திருந்தது. அன்றைக்கே சாந்தி முகூர்த்தமும்.

அது வாடகை வீடு. பன்னிரெண்டு தனித்தனி ப்ளாட் கொண்ட அடுக்கு மாடி அவன் பெற்றோருடன் இன்னும் ஆறேழுபேர் அன்று தங்க, அவர்கள் தனி அறைக்குப் போய், அறை ஒட்டிய பால்கனியில் அமர்ந்து கொண்டார்கள்.

''உங்க மன்னி க்ரேட் வுமன்''

இதுதான் அவன் பேசிய முதல் வார்த்தை.

''எதிராளியை ரொம்ப சூட்சமமா எடை போடற பொம்மனாட்டி. எங்க பக்கத்லேர்ந்து ஒருகுறை கூட வரலை. இந்தக் கல்யாணம் இவ்வளவு நல்லா நடந்ததுக்கு உங்க மன்னிதான் காரணம். நாளைக்கு நமக்குன்னு ஒருகுழந்தை பிறந்தாக் கூட அந்த குழந்தையை உங்க மன்னி பார்வையில் வளர்க்கணும்னு நினைக்கறேன்.''

''மன்னியும் உங்கள பத்தி ஆகா ஓஹோங்கறாங்க. எனக்குத்தான் ஒண்ணும் புரியலை.''

''புரியும். புரியும்படியா நான் சொல்லித்தரேன். கத்துக்கணும்னு ஆசை மட்டும் இருந்தா போதும். எப்படி எதைன்னு நான் சொல்லிக் கொடுத்துருவேன். எதைக் கத்துக்கக் கூடாதுன்னு நான் சொல்லிக் கொடுத்துருவேன்.''

''எதைக் கத்துக்கக் கூடாது?''



''பெரும்தீனி, பிடிவாதம், பகல் தூக்கம், வெறும் கற்பனை இந்த நாலும் ஆபத்தான விஷயங்கள். சாப்பாடு, சாப்பாடுன்னு உணவு ருசி வந்துட்டா வேற நல்ல விஷயம் மண்டைல ஏறாது. இந்த புடவை வேணும், இந்த நகை வேணும்னு பிடிவாதம் வந்துட்டா அடுத்த வங்க உணர்ச்சி புரியமா போயிடும். ராத்திரி சரியா தூக்கம் வரலேன்னா பகல்ல கண்ணு சுத்தும். ரெண்டு மணி நேரம் பகல்ல நல்லா தூங்கிட்டா மதமதப்பா இருக்கும். ஒண்ணுமே புரியாது. அன்னிக்கி நாள் வேஸ்ட். இந்தக் கற்பனைன்னு ஒரு விஷயம் இருக்கே அதுதான் பயங்கரம். நம்ம சுத்தியிருக்கிற நிஜம் என்ன அப்படீன்னு புரியாம பண்ணிடும். நீ ரொம்ப அழகுன்னு உன்ன நினைச்சுக்கறேன்னு வச்சுக்கோ... விதவிதமா மனசுக்குள்ள அலங்காரம் நடக்கும். எத்தனை அலங்காரம் பண்ணினாலும் உனக்கு திருப்தி இருக்காது. மனசு போடற ஓவியத்துக்கு முன்னாடி நிஜம் எடுபடாது.''

''நான் அழகில்லையா?'' சட்டென்று நீலா கேட்டாள். கணேசன் சில வினாடிகள் தயங்கினான்.

''ராஜா மெச்சின ரம்பா. என் கண்ணுக்கு நீதான் அழகு. நீ மட்டும்தான் அழகு. வா உள்ள போகலாம். அவள் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

நீலா வெட்கப் பட்டாள். அடுத்தது அவன் செய்யப் போவதைப் பற்றிக் கற்பனை செய்தாள். இன்னும் அதிகமாக வெட்கப்பட்டாள்.

''இது என்ன செயின். நகை உள் இது என்ன டாலர்'' என்று கணேசன் அவள் நகைகளை ஆராய்ந்தான். அவன் ஆராயவில்லையென்று தெரிந்து கொள்ள அவளுக்கு நான்கு நிமிடங்கள் தேவைப்பட்டன.

அதற்குள் ஆராய்ச்சி வேறு பக்கம் திரும்பி விட்டது. அடுத்து வெட்கப்பட முடியாமல் போய்விட்டது.

வெட்கத்தை விட காமம் வலிது, காமம் வெட்கம் இழக்கும். நீலா இழந்தாள்.

விடிந்து அறையைவிட்டு வெளியேறிய போது ஒரே விஷயம் புரிந்தது. தன் புருஷன் கணேசன் வேறு மாதிரியான ஆண். இதுவரை சந்தித்திராத ஆண். அவனுக்கு இணையாய் நின்று குடித்தனம் செய்வது கடினமான விஷயம். மிக கவனமாக இருக்க வேண்டும்.

மற்ற உறவுகள் இரண்டு நாட்களில் விடை பெற, கணேசனுடைய பெற்றோர்கள் ஒரு வாரத்தில் விடை பெற நீலா தனியானாள். வீட்டை ஒழுங்குபடுத்துவதில் மும்முரமானாள்

''எல்லா வண்டியும் வெளில போயிருக்கு. எனக்கு அங்க ஒரு வேலையும் இல்ல. எங்கேயாவது வெளில போகலாமா. இல்ல இங்கேயே உட்கார்ந்து பேசிட்டிருக்கலாமா?''

''இங்கேயே உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கலாம்.' நீலா சட்டென்று பதில் சொன்னாள்.

''என்ன பேசுவது என்று யோசித்தாள். கற்பகம், தமயந்தி என்று பெயர்கள் ஞாபகம் வந்தன.

''கற்பகத்த இதுக்கு முன்னால லவ் பண்ணினேளா...?''

''இல்லையே. அது சும்மா கேலி. அந்த பாங்க் ஒரு மாசத்துக்கு இருபதாயிரம் பிசினஸ் தரும். அந்த பில்லை பார்க்கறது கற்பகம்தான் எனக்கும் அவளுக்கும் சண்டை வரும். சண்டையால ஸ்நேகம் வந்தது. அது லவ் இல்லை. அவங்க வீட்ல ஒரு துக்கம் நடந்தப்போ நானே வண்டிய மதுரை வரைக்கும் எடுத்துண்டு போனேன். அதுல ஸ்நேகம் பலமாச்சு. கற்பகத்துக்கு பெரிய குடும்பம். அவ காசு அங்க ரொம்ப முக்கியம். கற்பகம் யாரையும் கல்யாணம் பண்ணிக்கற மாதிரி இல்லை. நாங்க சண்டை போட்டுக்கறதையும், உதவி செய்துக்கறதையும் பார்த்து



எல்லாரும் லவ்வுன்னு நினைச்சாங்க. இல்லைன்னு சொல்றதுக்குள்ள பெரும் பாடா போயிடுத்து.''

''தமயந்தி யாரு?''

''இன்னொரு டிராவல் ஏஜன்சில அக்கவுண்டண்டா இருந்தா ரொம்ப பெரிய டிராவல்ஸ் அது. நாலு பஸ் ஓட்றகம்பெனி.''

''அது லவ்வா''

''ஆமாம்.''

'.இன்னமும் லவ் இருக்கா?''

''இருக்கு''

''போகாதா?''

''எப்படி போகும். ஆனா வளராது. லவ் வளரணும் வளரலேன்னா செத்துட்டுதுன்னு அர்த்தம். பாறையா இறுகிடுச்சுன்னு அர்த்தம்.''

''ஏன் இப்படி ஆச்சு?''

''அங்கேயும் குடும்பம்தான் காரணம். அவ அப்பா காரணம். அவளுடைய அப்ப உங்க அண்ணா மாதிரி அங்கே உங்க மன்னி மாதிரி அடக்கி சரி பண்ண யாரும் இல்லாதிருக்காங்க.''

''லவ் கூடாதுன்னு சொல்லிட்டாங்களா?''

''ஆமாம்.''

''என்ன காரணம்''

''நிலையா ஒரு வேலையில்லை எனக்கு. கார் டிராவல்ஸ்ன்னா என்னன்னு புரியாத ஆள் அவங்க அப்பன்.''

''ஆறு கார் இருக்குன்னு சொன்னேளே''

''இப்ப இருக்கு. அப்ப இல்லை. வெறும்பய, வேலையில்லாத பய என்ன தைரியத்ல வந்து பொண்ணு கேக்கறான்னு தமயந்தியோட அப்பன் கத்தினான்.''

''நீங்களா போய்ப் பெண் கேட்டேளா?''

''என் கல்யாணம் என் இஷ்டம், வேற யாரை எதுக்கு கூட்டிட்டுப் போறது''

''அப்பாம்மாவ கூட்டிட்டுப் போயிருக்கலாமே''

''ஒரு உண்மை சொல்லட்டுமா. நான் பார்த்து சரின்னு சொன்ன பொண்ணைத்தான் எங்கப்பாம்மா பார்ப்பேன்னு சொல்லிட்டா. சும்மா சும்மா பொண்ணு பார்க்கறதுக்கு இஷ்டமில்லைன்னுசொல்லிட்டா, அப்படி பார்க்கறது பார்த்து குறை சொல்றது மகாபாவம்னு சொல்லிட்டா,''

''உங்க வீடு ரொம்ப ஆச்சர்யம்.''

''அதுதான் பிரச்னை. வீடு என்னைநம்பறது—வெளியுலகம் நம்பல. இதுதான் தமயந்தி மேட்டர்லயும் பிரச்னை. அது தவிர எனக்கு நிலையான வேலையில்லைன்னு பேரு. அஞ்சு வருஷம் பல ட்ராவல்ஸ்ல இருந்தேன். போர்டே போடாம நிறைய சம்பாதிச்சேன். ஆனால் நம்ம ஜனங்களுக்கு கம்பெனி பேர் வேணும். என்ன பதவின்னு தெரியணும். அஞ்சு வருஷம் கிளார்க்கா இருந்தவனைவிட எனக்கு வருமானம் அதிகம். ஆனா கிளார்க் வேலை நிலையான உத்தியோகம். எனக்கு நிலை இல்லை.''

''எப்படி லவ் வந்தது.''

''டிராவல்ஸ் ஒரு இடம். அங்க இருக்கற கார் பார்க்கிங் பண்றது ஒரு இடம். ஒரு நாலு கிலோ மீட்டர் தூரம். எங்க பார்க்கிங் பண்றாங்களோ அங்க தமயந்தி வீடு இருந்தது. பார்க்கிங் பண்ற இடத்லேர்ந்து கார் எடுத்துண்டு டிராவ்ஸ்க்கு வருவேன். வரும்போது தமயந்தி



கூட்டிண்டு வருவேன். இதுக்காக நல்ல காபி எனக்கு கிடைக்கும். அரிசி கொடுத்து, பருப்பு கொடுத்துன்னு நாம நலுங்குல விளையாடினோமே அது மாதிரி காபி கொடுத்து, லிஃப்ட் கொடுத்து ஒரு விளையாட்டு. அதும் தவிர நான் டிராவல்ஸ் தனியா ஆரம்பிக்கறபோது தமயந்தி மாதிரிஒருஅக்கவுண்டண்ட் எனக்கு வேணும்னு தோணித்து. மொத்த அக்கவுண்ட்ஸ் ஒரே ஆளா பார்க்கறதும், எப்போ என்ன கேள்வி கேட்டாலும் பதில் சொல்றதும் எனக்குப் பிடிச்சிருந்தது. அதுவும் தவிர...''

''எங்க மன்னி மாதிரி கெட்டிக்காரி—நீலா குரலில் ஆதங்கமிருந்தது.''

அவள் இடை மறித்தலை கணேசன் கூர்மையாக நோக்கினான்.

''இல்லை. அந்த கெட்டிக்காரத்தனம். அவகிட்ட இல்லை. இருந்திருந்தா நம்ம கல்யாணம்நடந்திருக்காது. அவகிட்டேயிருந்தது அவளோட தங்கை மேலிருந்த பாசம். வீட்டை விட்டு ஓடி வரியான்னு கேட்டபோது மாட்டேன்னுட்டா.''

''ஓடி வந்தா கெட்டிக்காரியா. எங்க மன்னி ஓடி வரடைப்பா?''

''ஆத்திரமா பேசற நீலா. இதுக்குப் பேருதான் பிடிவாதம் ஒரு விஷயம் புரிஞ்சுக்கறதுக்கு முன்னாடி நான் பேசறது ரைட்டுங்கற பிடிவாதம். உங்க மன்னி ஓடி வந்திருவான்னு சொல்லல. அவளுக்கு எது முக்கியம். எவ்வளவு முக்கியம்னு நல்லா தெரியுது,''

''பழகாம எப்படி அபிப்பிராயம் சொல்றேள்''

''நா உன்னை பார்க்கறது முக்கியமில்லைன்னுபெண் பார்க்க வந்த அன்னிக்கே சொன்னேன். பார்த்தே ஆக-

ணும்னு உங்க மன்னி தீர்மானம் பண்ணிட்டா. உங்க அண்ணாவுக்கு முன்னாடி உன்னைக் கூப்பிட்டு அறிமுகப் படுத்தி வச்சா—இதுதான் எங்க வீட்டுப்பெண் நீலா அப்படின்னு கன கம்பீரமா சொன்னா. வந்துநமஸ்காரம் பண்ணச் சொல்லலை. கொண்டு வராம ஒளிச்சுக்கவும் இல்லை. ரொம்ப சரியான நேரத்துல, சரியான அறிமுகம் அது. அதுதான் கெட்டிக்காரத்தனம். என்ன செய்றதுன்னு தெரியாத முழிக்கல. கற்பனை பண்ணிப் பார்க்காம நிஜத்த பார்க்கற குணம் அது''

''தமயந்தி கதைய பாதில விட்டுட்டேளே.''

நீலாவின் ஆவலுக்கு கணேசன் சிரித்தான்.

''உன்னை பார்க்க வந்தா மாதிரி தமயந்தி வீட்டுக்கும் போய் அவ அப்பாகிட்ட பேசினேன். ஏதோ பிலிப்ஸ்ல வேலை. முப்பத்திரெண்டு லருஷம் சர்வீஸ். அவங்க அப்பனுக்கு அது ஒன்னுதான் பெருமை. எனக்கு நிரந்தரமான வேலையில்லைன்னு எகத்தாளம். என்ன தைரியத்துல படியேறி பொண்ணு கேக்கறேன்னு ஒரு அலட்டல்.''

''உங்கப்பன் வரமாட்டானா. உன்னையே பார்த்துக்க சொல்லிட்டானா. என்னடாது தத்தாரிக்குடும்பமா இருக்கே. பெத்தவன் தண்ணி தெளிச்சுவிட்ட புள்ளைக்கெல்லாம் பைத்தியக்காரன்தான் பெண் கொடுப்பான். நான் பைத்தியக்காரன் இல்லை. என் பொண்ணுதத்தாரியில்லை. இப்ப மாட்டேன்னு சொல்றதமனசில வச்சிண்டு வேற ஏதாவது பண்ணினே அவளை வேலைய விட்டு நிறுத்திடுவேன். வெளில போ. இப்படி வந்து கேட்டதை யாருக்கும் சொல்லாதேன்னு விரட்டி அனுப்பிச்சான். நான் வேற டிராவல்ஸ் மாறிட்டேன் ''

''அப்புறம் தமயந்திய பார்க்கவே இல்லையா?''

''பார்த்தேனே. நடந்ததை தமயந்தி அந்தடிராவல்ஸ் முதலாளிகிட்ட சொல்லியிருக்கா. விக்கிவிக்கிஅழுதிருக்கா.



அவர் பார்க்க முரடன். மனசு இளகல்இட்டுண்டு போயிடு கணேசா. நான் கார் தரேன் எங்கனா போயி கல்யாணம் பண்ணி வச்சுடு, அத்த ஐயரு எதுனா பேசினா ஹேண்டில் பார்லேயே ஒருஅடி போடறேன். என்ன சொல்றன்னு கேட்டாரு. நான் தமயந்திய தனியா கூட்டிண்டு போயி சமாதானப் படுத்தினேன். எங்கப்பாம்மா பெண் பார்க்க வருவா. ஆனா நான் செட்டில் ஆகறதுக்கு இன்னும் ரெண்டு வருஷம் ஆகும். நீ கூட இருந்தாஒருவருஷம் ஆகும். இனிமே எந்த கம்பெனிலேயும் ஜாய்ன் பண்ண முடியாது. யார்கிட்டேயும் கை நீட்டி வேலைசெய்ய முடியாது. இனி வாழ்க்கை கடைசி வரைக்கும் டிராவல்ஸ் தான். வேற வேலை செய்ய விருப்பமில்லை. விளக்கிச் சொன்னேன். தமயந்திக்கு நான் எங்கேயாவது பர்மனென்ட்டா வேலை செய்யணும்னு ஆசை ஆறு மாசம் காத்திருக்கேன். பர்மனென்ட்டா எங்கேயாவது சேர்ந்துடுங்கன்னு வேண்டினா, நான் விட்டுட்டேன்.''

''டிராவல்சையா?''

''இல்லை. தமயந்தியை''

''ஏன்?''

''தமயந்திக்கே எம்மேல, டிராவல்ஸ்ங்கற தொழில் மேல நம்பிக்கையில்லை. உன்னை விட எனக்கு டிராவல்ஸ் முக்கியமில்லை தமயந்தின்னு சொல்லிட்டேன்.''

''அப்புறம்''

''உள்ள ஒரு வெறிவந்துடுத்து. என்ன பர்மனென்ட் ஜாப்' டிராவல்ஸ்ல நின்னு காமிக்கணும்னு ஒரு ஆத்திரம் வந்துடுத்து. அந்த டிராவல்சை விட்டுட்டு வேறபேட்டைக்குப் போயிதனியா ஆரம்பிச்சேன். நாற்ப்பத்தைஞ்சாயிரம் ரூபாய்க்கு இனிமே தேறாதுங்கற அம்பாஸடர் காரை வாங்கினேன். டூரிஸ்ட் லைசென்ஸ் இல்லாத, பி. டி. ன்னு போடாத அறுகார் ஓட்டினேன். பி. டின்னு போட்ட காரைவிட, பி. டின்னு போடாதே காருக்கு மரி

யாதை இருந்தது. ஜனங்களுக்கு அது சொந்தக் கார்ன்னு காட்டிக்க வசதிஇருந்தது. என்புத்தி, மனசு எல்லாம் டிராவல்ஸ்லேயே உட்கார்ந்துடுத்து. தமயந்திய மறந்துடுத்து. என்காதல் கார் மேலே போயிடுத்து. வெளில போனகார் திரும்பிவரணுமேங்கற பயம் கவலை, ஏக்கம், தாபம் எல்லாம் வந்துடுத்து. காதலிக்கறவளை தாஜா பண்றதை விட கஸ்டமரை தாஜா பண்றது பிடிச்சுப் போச்சு. இருபத்திநாலு மணி நேர வேலை எப்ப படுத்தாலும் தூக்கம். வேலையே போதையாயிடுத்து. காதல் போதையைவிட இது சுகமா இருந்தது. நாலு வருஷத்துலே ஆறு கார், அஞ்சு லட்ச ரூபா கடன், அறுபது எழுபது கஸ்டமர்ஸ் மாசம் ஒருலட்ச ரூபா டர்ன்ஓவர். இதை தவர எதுவுமே புத்தில இல்லை.''

''என்னை ஏன் பிடிச்சது ''

''நல்ல கேள்வி. பெண் பார்க்க வந்தப்போ மொத்த பேச்சையும் கவனிச்சு மன்னி கூப்பிட்டதும் டக்குன்னு வந்தபார் வெட்கப்படாம கை கூப்பின பார். அது பிடிச்சது. நான் விசிட்டிங்கார்ட் கொடுத்த உடனே ஒரு சிரிப்பு சிரிச்சபார் அது பிடிச்சுது. அந்த இடத்தை உன் சிரிப்பு ஈஸியாக்கிடுச்சு. அதும் தவிர...''

''நான் அந்த தமயந்தியவிட அழகா?'' நீலா பேச,

கணேசன் வாய்விட்டு சிரித்தான். ''அப்பப்ப அசட்டுதனம் வந்துடறதே'' என்றான்.

''நான் அழகில்லையா?''

''அது முக்கியமில்லை.''

''எது முக்கியம்.''

''எல்லாத்துக்கும் மன்னி கட்டளைய எதிர் பார்த்துண்டிருந்த. உங்க மன்னிமுக மாற்றதையே கவனிச்சுட்டிருந்தே. மன்னிதான் உனக்கு டீச்சர். மன்னிதான் உனக்கு எல்லாம்னு எனக்குப் புரிஞ்சு போச்சு. நீ மன்னி



வளர்த்த பொண்ணு ஸோ...நீ என் கிட்டேயும் நல்லா வளர முடியும். உன்னைப் பேச வைக்க முடியும்னு தோணித்து.''

''எனக்கும் கொஞ்சம் பேசணும்''

''பேசு''

கணேசன் நிமிர்ந்தான். நீலா சந்துருவைப் பற்றிப் பேசினாள்.

சொல்லும்போதே சொல்லுவதைப் பற்றிய பயம் வந்தது. இதன் எதிர் விளைவுகள் என்ன ஏற்படும் என்கிற கவலை வந்தது.

''நான் ஒருத்தரை லவ் பண்ணினேன் என்று அவள், ஆரம்பித்தவுடனேயே கணேசன் குதூகலமானாள்.''

''அப்படியா? நிஜமாவா? ஆனா நீ லவ் பண்ணினேங்கறத கேக்றதுக்கே விநோதமா இருக்கு. லவ்வுங்கற வார்த்தைய கேட்டாலேசீச்சீன்னு சொல்றஜாதியோன்னு நினைச்சேன். அவன் சொல்ல அவள் வெட்கப்பட்டாள்.

''நானும் ஆசை இருக்கற பெண்தான். வீட்டு நிலைமை, அண்ணா எல்லாத்தையும் அனுசரித்துதானே போக வேண்டியிருக்கு ''

''அது சரி ஆள் யார்?''

''சொன்னாநீங்க தப்பா நினைச்சுக்க மாட்டேளே?''

பாதி சொல்லி விட்டு நீலா உத்திரவாதம் கேட்டாள். கணேசன் அவளை உற்று நோக்கினான்.

''இதோ பார், நீ ரொம்ப கற்புக்கரசின்னு உன்னை நான் கல்யாணம் பண்ணிக்கலை. அத ஒரு குவாலிபிகேஷனாகக்கூட நான் நினைக்கல. உன்னுடைய கற்பு பற்றி மட்டுமில்லை. இந்த ஊர்ல உள்ள எந்த பெண்ணோட கற்பு பற்றியும் எனக்குஅக்கறையில்லை. இதில்என்னோட

அம்மாவும் சேர்த்தி. போன தலைமுறை கற்புபக்தி ரொம்ப பேசினாளேன்னு கேட்கலாம். போன தலைமுறைல பொம்மனாட்டி தலை முடி, பற்றி கூட ஒரு அபிப்பிராயம் வச்சிருந்தா. தொடை வரைக்கும் முடி தொங்க இருக்கிறது பெருமைன்னு நினைச்சா. இப்பமுடி மேல் முதுகு வரைக்கும் இருந்தாப் போதும். கற்பு, தலைமுடி எல்லாம் ஒன்று, நான் இதைக் கோபமா சொல்லல. கற்பு மிகப் பெரிய பொய் அது இருப்பதும் இல்லாதிருப்பதும் தனிப்பட்டவர்களின் சௌகர்யம். அது அணிகலனில்லை, ஒரு மனோநிலை. கோபம் போலும் ஒரு மனோநிலை. கோபமே வராதவருக்கும் கோபித்துக்கொள்ளும் நிர்பந்தம் உண்டு. இதனால் அவர்கள் எந்த விதத்திலும் குறைந்து போய்விட மாட்டார்கள். எதையாவது பெருமை என்று நினைததுக் கொள்கிற போது அந்தப் பெருமைக்கு பங்கம் வரும். மூச்சு விடுவது போல கற்பு இயல்பாய் இருந்தால் அது நலம். வலிந்து வைத்துக் கொண்டால் ஹிம்சை நீ நல்லவளா கெட்டவளா என்பதே எனக்குப் பிரச்னை. என்னை எப்படி நடத்துகிறாய் என்பதும் இதில் உண்டு. திருமணத்திற்கு பின் நீ என்னவாக இருக்கப் போகிறாய் என்பதே என் அக்கறை.''

''மனதளவில் நீ கற்புள்ளவளா இல்லையான்னு நான் பார்க்க முடியாது. எத்தனை பேரைக் காதலிக்கிறாய் என்பதைக் கண்டு பிடிக்க முடியாது கண்டுபிடிக்கவேண்டிய அவசியமும் இல்லை. இன்றைய சூழ்நிலை என்ன? நீ வேற யார்கூடயாவது சிரிச்சிபேசினா அல்லதுநெருங்கிபழகினா மூணாவது மனுஷன் சந்தேகப்படுவான். கேள்வி கேட்பான். நான் வேற பொண்ணோட சுத்தினாலும் இதேகதிதான் அந்த மூணாவது மனுஷனுக்குப் பயந்துதான் ஊர் வாய்க்கு அவலாகக் கூடாதுன்னுதான் கற்பு. விதவைங்கற விஷயம் பற்றி இந்த தேசம் எவ்வளவு கவலைப் பட்டுச்சு. எத்தனையோ கஷ்டப்படுத்துச்சு. இப்ப கவலைப்படலை. கஷ்டப்படுத்தல. பெண்கள் கற்பு பத்தின கவலையும் இப்படி காணாத போதும். உலகத்தோட கவலைக்கேற்ற



படிதான் நாம நடந்துக்கணும். அதே சமயம் அந்தக் கவலைல எவ்வளவு நிஜம்னு கண்டு பிடிச்சக்கணும். ஆனா மாறாத ரூல் ஒண்ணு உண்டு. சார்ந்திருப்பது மனிதனை மனிதன் சார்ந்திருப்பது. இதுக்குப் பேர் காதல். இதற்குத் தூண்டுதல் காதல். ஆனால் சார்ந்திருக்கும்போதே இல்லை என்பது புரியும். அது புரிய துறவு. உனக்குப் புரிகிறதா நீலா.

நீலா இல்லையென்று தலையாட்டினாள்

''சரி, போனாப் போறது உன் லவ் பற்றிச் சொல்லு.''

அவள் விவரித்துச் சொன்னாள். சில சமயம் குரல் தாழ்ந்து வந்தது. ஒரு சமயம் கண்ணில் நீர் ததும்பிற்று.

''சந்துரு நல்லவன்தான். ஆனா தோல்விய தாங்கமுடியலை—நான் இல்லாதது ஏத்துக்க முடியலை. நான்மக்கு. நானே சரியாகிட்டேன். அவன் என்னவோ தாடிய வளர்த்துண்டு, சிகரெட் புடிச்சுண்டு, தனக்குத்தானே பேசிண்டு சிலசமயம் இதை நினைககறபோது வயிறுகலங்கறது. எம்மேல தப்போன்னு தோன்றது. ஏன் பேசினோம், ஏன் பழகினோம்னு துக்கம் வருது. இன்னொரு சமயம் இப்படி கோழையா இருக்கானேன்னு கோபம் வருது. அவன் நல்லவன், கற்புள்ளவன், அதனால் அவஸ்தைதப்படறவள், நான் கெட்டவள். கற்பில்லாதவள் அதனால் சந்தோஷமா இன்னொருத்தர கைப்பிடிச்சுட்டேன். யார் மனசையோ கலைச்சி, என் வேலைய பார்த்துண்டு போயிட்டேங்கற மாதிரி ஒரு குற்ற உணர்ச்சி வருது.''

கடைசி வார்த்தை சொல்லும்போது நீலா விக்கி விக்கி அழுதுவிட்டாள். கணேசன் சோபாவில் சப்பணம் கூட்டி உட்கார்ந்து கொண்டான். கணேசன் மீண்டும் யோசனை செய்தான் மெல்ல சிரித்தான்.

''உன்னை தொட்டிருக்கானா நீலா'' திடீரென்று கேள்வி கேட்டான்.

நீலா மிரண்டாள்.

பேச்சு தப்பாகி விட்டதோ என்று பயந்தாள். ''ஏன் கேக்கறேள்'' என்றாள் குரலில் நடுக்கமிருந்தது.

''இங்க வா. என் பக்கத்ல உட்காரு. மறுபடி சொல்றேன் உன கற்பு பத்தி எனக்கு அக்கறையில்லை. நீ எங்கிட்ட எப்படி நடந்துக்கப் போறங்கறதுதான் முக்கியம். நமக்குள்ள பொய் அவசியமே இல்லை. எங்கிட்ட ஒரு உண்மைய சொல்ல அதைப் பின்னால குத்திக் காட்டிப் பேசற அயோக்கியன் இல்லை நான். மத்தவங்க தப்பா பெரிசு பண்ணி என்ன யோக்கியன்னு காமிக்கற அல்பம் இல்லை நான். உனக்கு உதவி செய்யத்தான் நான். எனக்கு உதவி செய்யத்தான் நீ. பரஸ்பரம் உதவி செய்யறதுதான் நன்றி. அதன் பேருதான் காதல். மனைவிக்குள்ள பரஸ்பரம் நன்றி இல்லேன்னா குடித்தனம் கெட்டுப் போயிடும். நன்றி யாருக்கு இல்லாமப் போகும்? சுயநலமிக்கு தான் மட்டுமே முக்கியம். தனக்குத்தான் எல்லாமும் முக்கியம்னு நினைக்கறவன், உருப்படவே முடியாது. குடும்ப வாழ்க்கையில் மட்டுமில்ல. எங்கேயும் ஜெயிக்கமுடியாது. பெண்டாட்டி உதவிக்கு தாங்யூன்னு சொல்றத அவமானமா நினைச்சா அவன் குடும்பத்துக்கே லாயக்கில்லை. நன்றி அல்லது காதல் வீட்டிலேர்ந்துதான் ஆரம்பிக்கணும். பரவணும். வீட்டுக்குள்ள நன்றி கெட்ட தனமா இருந்தா கொஞ்ச நாள் சமாளிக்கலாம். சில வருஷம் ஒப்பேத்தலாம். வெளில நன்றி இல்லாத இருந்தா உடனே அழிச்சுடுவாங்க. ஓரமா உட்கார வச்சுடுவாங்க. இதைத்தெரிஞ்ச பல பேர் வெளியே நாய் மாதிரி வால் குழைச்சுகிட்டும் வீட்ல பேய் மாதிரியும் ஆடிட்டிருக்காங்க.''

''நன்றிங்கறது ஒரு சொல். இதனோட செயல் என்ன விட்டுக்கொடல் ''

''நீ எனக்காக சமைக்கப்போறே. என் துணிமணிகளை சௌகரியங்களைப் பார்த்துக்கப்போற, உனக்காக நான் விட்டுக் கொடுத்தா என்ன, மனைவிய தண்டிக்கவா புருஷன், புருஷனை தண்டிக்கவா மனைவி. வீட்ல சுமுகமில்லாம வெளில எவ்வளவு அன்பு காண்பிச்சாலும் பொய். வீடு சுமுகமா இருந்தா வெளில ரொம்ப சந்தோஷமா ஜெயிக்கலாம் இது ஒரு ரகசியம்.சாதாரண கணக்கு இதுதெரியாதத்தான் நிறையப் பேர் புழுங்கி சாகறான். இப்ப நான்பேசறது புரியுதா?''



புரிகிறது என்று தலையாட்டினாள்.

சந்துருவை ஒரு முறை முத்தமிட்டதும், இடுப்பைச் சுற்றிக் கொண்டு பல முறை பீச்சில் நடந்ததும், ஜெய்ண்ட் வீலில் பயந்து போய் தானே தழுவிக் கொண்டது சொன்னாள்.

''இது போறுமே, ஒரு ஆம்பளைய பைத்தியக்காரனாக்கறதுக்கு இது போறுமே. ரொம்ப நாளைக்கு அவனுக்கு இது மறக்காது. அவனுடைய மரணம் வரைக்கும் மறக்காது. கொஞ்சம் எமோஷனல் ஆளா இருந்தா அடிக்கடி பொங்கி தொந்தரவு படுத்தற விஷயம். மறந்து போன்னு இதைச் சொல்ல முடியாது. பொங்கிப் பொங்கித் தாக்கறத மட்டுப் படுத்திக்கலாம். டைவாட் பண்ணிக்கலாம். காமம் இல்லை காதல். இதை சரியா சானலைஸ் பண்ணினா, திசை திருப்பிவிட்டா ஆன்மீகமா மாறிடும். எல்லாரையும் நமக்கு வேண்டியவரா அன்போட பார்க்கறதுக்குப் பேர்தான் ஆன்மீதம்.''

''அந்தக் கற்பகத்தோட நான் ஜாஸ்தி பழகினதில்லை வெறும் கேலி கிண்டல்தான். இப்ப கற்பகத்த பார்த்தாலும் ஏதாவது வம்புக்கு இழுக்கத் தோணும், நீயும் உன் பௌடரும்னு சண்டை ஆரம்பிக்கத் தோணும். போறபோது கற்பகம் என்ன சொல்லிட்டுப் போனா தெரியுமா? —அப்பாவி பொண்ணாப் பார்த்து கல்யாணம் பண்ணியிருக்கியா, கேக்றதுக்கு ஆள் இல்லைன்னு நினைப்பா. ஏதாவது எசகு பிசகா நடந்தது ஆள்விட்டு அடிப்பேன்னு சொல்லியிருக்கா''.

''பதிலுக்கு நான் என்ன சொன்னேன் தெரியுமா அடுத்த வருஷம் இதே தேதிக்குள்ள நீ எவனையாவது கல்யாணம் பண்ணிண்டு தொங்கத் தொங்க தாலியோட நிற்கலை, நானும் ஆளனுப்புவேன் தூக்கிக் கொண்டு போய் பாம்பேலேயோ துபாய்லோ வித்துடுவேன். தயவு செய்து நான் விளையாட்டுக்குப் பேசறதா நினைக்கா தேன்னு பேசியனுப்பிச்சேன். இதுக்குப் பேர் லவ். அல்லது அக்கறை, பரஸ்பர அக்கறை''.

ஆனா தமயந்தியும் நானும் நிச்சயமா கல்யாணம் நடக்குங்கற நினைப்பில் ரொம்ப இழைஞ்சிருக்கோம். இறுக்கி கட்டி முத்தம் கொடுத்திருக்கோம். இதை மறக்க முடியாது. இதுல எம்மேல தப்பும் கிடையாது, தமயந்தின்னு எங்கே பேர் கேட்டாலும் எனக்குள்ள ஒரு முகம்தான் வரும் ஆனா அவ வீட்டுப் பக்கமா போறது கூடத்தப்பு. அவளுக்கு இடைஞ்சல்.''

''என் கல்யாணத்துக்கு பத்தாயிரம் ரூபா குறையுது கணேசான்னு கற்பகம் கேப்பா—நானும் சந்தோஷமா தருவேன். ஆனா தமயந்தி கேட்கவும் மாட்டா, தரவும் முடியாது. உன்னோட போய் நின்னாலும் அவ வீடு சந்தேகப்படும் எதுக்கு மறுபடின்னு கோபப்படும். அந்த சந்துரு தாடி வளர்த்துண்டு அலையறது முட்டாள்தனம், முடிஞ்சா நீ அவனை சரி பண்ணு. உன்னால அவன் அழிஞ்சான்னு வரக்கூடாது''

''போய் சொல்லு. நான் சந்தோஷமா இருக்கேன். நீயும் சந்தோஷமா இருன்னு சொல்லு. நார்மலா இருக்கச் சொல்லு நல்ல பொண்ணாப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கச் சொல்லு''

''ஐயோ நான் போகமாட்டேன்''

''போகலாம். தப்பில்லை-ஒரு வேளை ஏதாவது தற்கொலை மாதிரிபண்ணின்டா உனக்கு ரொம்பகஸ்டம்மா



ஏறும். முழங்கால்ல இடிச்சுண்டாலும் அவன்தான் சபிக்கிறானோன்னு பயம் வரும்.''

'என்னால முடியவே முடியாது. நீலா திட்டவட்டமாக மறுத்தாள்.''

''எதுக்கு பயப்படற—யாருக்கு பயப்படற?கணேசன் கேள்வி கேட்டான்.''

நீலா மௌனமாயிருந்தாள்.

''ஒரு முயற்சி பண்ணிப்பாரு நீலா. அதில தப்பில்லை. அப்புறம் அவன் தலையெழுத்து. உன்னால அவன் பாழாயிட்டானோன்னு ஒரு குறுகுறுப்பு உனக்குள்ள இல்லாது போகும்.

''நீங்க கூட வரேளா'' நீலா அவனைக் கலவரத்துடன் நோக்கினாள்.

''நீ போய்ப் பேசு—அவசியமானால் நான் வரேன்.''

''நான் போய்ப் பேசிய பிறகு என்ன தப்பா நினைச்சேன்னா.''

''பேசச் சொல்றதே நான்தானே.''

முதல்ல கம்பீரமா அனுப்பிச்சுட்டு அப்புறம் என்னை கெடு கெட்டவள்னு சொல்லிட்டேள்னா...''

கணேசன் தலை குனிந்து யோசித்தான். அவள் கேள்வி அவனை வேகமாய்த் தாக்கியது.

''தப்பு உன் பேர்ல இல்லை. ரெண்டாயிரம்வருஷமா ஆம்பிளை மேல பொம்பளைக்கு இருக்கற சந்தேகத்த ரெண்டு வாரத்ல எப்படிப் போக்க முடியும். உனக்கு இஷ்டமில்லைன்னா நீ போக வேண்டாம்.''

''எனக்கு போய்ப் பேசினா நல்லதாகுமோன்னு தோணறது.''

நீலா தன் சந்தேகத்திலிருந்து தானே வெளியே வந்தாள்.

''நான் போன்னுதானே சொன்னேன்.''

''ஒரு வேளை நீங்க தமயந்திய சமாதானப் படுத்தப் போட்டுமான்னு கேக்கறளோ.''

''அப்படிப் போடு உண்மை இப்பத்தான் வருது. போனா என்ன பண்ணுவே.',

''அழுவேன்.''

கணேசன் வேதனையோடு கண்களை மூடிக் கொண் டான். ஆண்கள் யாரும் நம்பத் தகுந்தவர்கள் அல்லர் என்று பெண்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆண்களும் அவ்விதமே இருக்கிறார்கள். இங்கு நம் பிக்கையென்பது காசோ, பொருளோ, அறிவோ, மனமோ அல்ல. கற்பு நிலை மட்டுமே. எதை அதிகம் சந்தேகிக்கிறோமோ அதுவே நமக்கு எதிராய் இயங்கு கிறது. காமத்தை வெறுப்பதன் மூலம் அதை ஜெயிக்க முடியாது. கற்பு நிலை காமத்தோடு சம்பந்தப்பட்டது. எதை நீ வெறுக்கிறாயோ அதுவே உன் வெறுப்பை உண்டு வளரும். காமத்தை வெறுக்க வெறுக்க எப் போதும் நீ காமத்தோடுதான் இருப்பாய்.

''தமயந்தியின் மீது எனக்கு காமமில்லை நீலா. இதை தெளிவாக உணர்ந்து உனக்குச் சொல்கிறேன். தமயந்தி மீதுள்ள ஈடுபாடு என்னவென்று நான் என்னையே விசாரித்து தெளிந்திருக்கிறேன். தமயந்தியை அனுபவிப்பதற்காக நான் அவளைக் காதலிக்கவில்லை. அனுபவிப்பது மட்டுமே எண்ணமெனில் கல்யாணம் என்கிற பேச்சையே எடுத்திருக்க மாட்டேன். வெறும் காமத்திற்காகப் பெண் என்பது வீண். அதில் நிறைவு இல்லை. பூரணம் இல்லை. என்னைப் போற்றிப் பாராட்டுகிற பெண்ணோடுதான் நான் பேசிச் சிரிக்க முடியும். காமத்திலுள்ள சந்தோஷம் எல்லையில் லாதது. அதை விலைக்கு வாங்க முடியாது. உன்



சந்தேகம் தேவையற்றது, எனக்கு நீ போதும், ஒரு பெண்ணை ஒரு ஆண் அனுபவிப்பது படுக்கையில்மட்டும் அல்ல நீலா. உணவில், உடையில், மூன்றாம் மனிதர் களிடம் அறிமுகப் படுத்துவதில், என் குழந்தை களுக்குத் தாயாய் இருப்பதில், தாய் தந்தையர்களிடம் வாஞ்சையாய் இருப்பதில் என்று பலதும் இருக்கிறது. இந்த இடங்களிலும் நல்ல மனிதன் ஒரு மனைவியை அனுபவிக்கிறான். அந்த அனுபவித்தலில் ஒரு நிறைவும், கம்பீரமும் கொள்கிறான். அந்த நிறைவு வர, வர மனைவியை உயர்வாய் மதிக்கிறான்.''

தமயந்தி வேண்டுமெனில் நீ எதற்கு? உன்னை மணந்த பிறகு தமயந்தி எதற்கு? நான் உன்னை சந்துருவிடம்போக சொன்னது அந்த மனிதன் பாழாகிவிடக்கூடாது என்று. அவனைச் சமாதானப் படுத்தவே, உன் வாழ்க்கை சந் தோஷமாக இருக்கிறதென்று தெரிந்தால் அவனும் சந்தோஷத்திற்குத் திரும்பக்கூடும். என்னை விட நல்ல பெண் உனக்குக் கிடைப்பாள் என்று நீ சொன்னால் அவன் கேட்கக்கூடும். ஆங்கிலத்தில் கணேசன் பேசப் பேச நீலா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவனையும் அவன் பேச்சையும் அவளுக்குப் பிடித்துப் போயிற்று.

''ரெண்டு நாள் யோசனை பண்ணின பிறகு போறேன்.''

''என்ன யோசனை?''

''நான் சொன்னா அவன் கேட்பானான்னு யோசிக் கணுமில்லையா?''

''வெரிகுட், செய்''

''நான் ரொம்ப லக்கி இல்லை...?''

''என் நீலா?''

கல்யாணம் பத்தி நான்பயந்துண்டே இருந்தேன், என் குடித்தனம் சரியா அமையணுமேன்னு கவலைப் பட்டுண்டே இருந்தேன். நீங்க நல்லவரா இருக்கேள், எனக்கும் இப்படி யோசனை பண்ணத் தெரியறது, ஆனா வெளில சொல்ல பயமா இருக்கு. எல்லா மனுஷாளையும் நல்ல படியா நடத்தணும்னு தோண்றது. செயல் படுத்த தயக்கமா இருக்கு. நாம செய்யறது சரின்னு சொல்லஒரு மாரல் சப்போர்ட் தேவையா இருக்கு. எங்க அண்ணா கிட்ட அது கிடக்கல. அதனால்தான் கூச்சல், குழப்பம், வெறுப்பு எல்லாம் வந்தது.''

''இப்போ உன் மன்னியை யோசனை பண்ணிப்பாரு. அந்த லேடி எவ்வளவு கஷ்டப்படுத்தப்பட்டிருப்போ, மனசுக்குள் எவ்வளவு தவிச்சிருப்போ, நீ சொல்ற மாரல் சப்போர்ட் இல்லாமேயும் அந்த பொம்மனாட்டி தன் குடித்தனத்தை ஜெயிச்சிருக்கா. அதனால்தான் அவளை கிரேட் வுமென்னு சொல்றேன். மன்னி மேல லவ்வான்னு பேசிடாதே—பெண்கள் தெளிவாயிட்ட அடுத்த தலை முறை பிரமாதமாக இருக்கும். அம்மா பயமில்லாமல் இருந்தா குழந்தைகள் புத்திசாலியாக இருக்கும். ஒரு குழந்தையோட ஆரம்பவளர்ச்சியில் அம்மாவுக்குரொம்ப பார்ட் இருக்கு. முதல் கோணல் முற்றும் கோணல். இங்கே நிறைய பேர் கோணலா இருக்கிறதுக்குக்காரணம் அம்மா சரியில்லாதது. ஆரம்ப வளர்ப்பு சரியில்லாதது.''

''நீங்க தெளிவா இப்போ இருக்கிறதுக்குக் காரணம் உங்க அம்மாங்கறேளா?''

''எஸ். எங்கம்மா தெளிவா இருக்கிறதுக்கு எங்க அப்பாதான் காரணம்''

''நானும் நல்ல அம்மாவா இருப்பேன்.''

நீலா அவனை நெருங்கி தழுவிக் கொண்டாள்.



அவர்கள் பகலை இருட்டென்று கொண்டார்கள். இருட்டை பகலென்று செய்தார்கள். காமம் கண்ணில் லாதது. நேரமரியாதது. கண் தெரிய காமம் வேண்டு மெனில் புத்தி விழித்திருக்க வேண்டும். கண் மண் தெரி யாமல் காமம் அனுபவிக்க காலவரையற்ற உறவு வேண்டும். கட்டுகளற்ற சிந்தனை வேண்டும். இது கணவன் மனைவிக்கு இடையே மட்டும் நடத்தல் சாத்தியம்.

ஒரு ஞாயிறு பகல் பொழுதில் நீலா சந்துருவை நோக்கி போனாள். மெருகு குலையாத தாலி மின்ன தன்னைத்தேடி வந்தவளைப் பார்த்து சந்துரு அதிர்ந்து போனான்.

ஒரு வீட்டிற்குள் தனியறையில் துணி துவைத்து உலர்த்திக் கொண்டிருந்தவன் அந்த செயலுக்கு வெட்கப் பட்டவன்போல் வரவேற்றான். ஏன் எதற்காக வந்தாள் தெரியாமல் தவித்தான்.

''உன்னை சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கச்சொல்ற துக்குதான் வந்தேன் சந்துரு.''

''கல்யாணமா— எனக்கா அப்படியொரு விஷயம் என் வாழ்க்கையிலே இல்லை என்றான்.''

''வசனம் பேசாதே சந்துரு பிராக்டிக்கலா பாரு.''

''இதோட நூற்றிப் பன்னிரண்டு கவிதை எழுதிட் டேன். நீலா இன்னைக்கு எப்படியும் ஒரு மூணு எழுதிடு வேன். தொகுப்பா போடப் போறேன்.''

கவிதை தொகுப்பு போடறதுக்கே காதலிச்சியா?''

''அதுல உன் போட்டோ வருவதற்கு பர்மிஷன் கொடுக்கணும்'' நீலா.

''முட்டாள். நான் இன்னொருத்தர் மனைவி எப்படி என் போட்டோ உன் கவிதைத் தொகுப்பிலே வரும்?''

''எனக்கு காதலியான பிறகுதானே இன்னொருத்தர் மனைவியான?

''ஸோவாட். காதல் சரியா வரலை பிரிஞ்சிட்டோம். கல்யாணம் நல்லபடியா நடந்து நான் சௌக்கியமா இருக்கேன்.''

''பொம்பளைங்க புடவையை மாத்திக்கிற மாதிரி ஆம்பளையும் மாத்திப்பா? பத்து புடவை எடுத்துப் போட்டா ஒரு புடவை எடுத்துக்கிற ஞபாம்பள ரொம்ப கம்மி. ரெண்டோ மூணோ எடுத்துகிற பொம்பளதான் ஜாஸ்தி. வசதியிருந்தா மொத்த புடவையையும் வாரிக்கணும்தான் ஆசை.''

''மறுபடியும் அபத்தமா பேசாதே. நானும் எதாவது முட்டாள்தனமா உதாரணம் சொல்லலாம். பேண்ட் சினிமா, சிகரட்ன்னு நானும் உவமை சொல்லலாம். உவமையோடு பேசறது கேட்கறதுக்கு அழகா இருக்கும். புரிஞ்சுக்கிறதத் தடுக்கும்.''

''அப்ப ஏன் இங்கே வந்தே?''

''என் வீட்டுக்காரர் உங்ககிட்ட பேசச் சொன்னார் அதனாலே வந்தேன். முட்டாளா இருக்க வேண்டாம்னு உங்ககிட்ட சொல்லச் சொன்னார்—அதனால வந்தேன்.''

''அவர் கிட்டே நம்ம விஷயத்தை சொன்னியா?''

''முழுக்க சொல்லிட்டேன்''

''எல்லாமுமா?''

''எல்லாமும்''

''நான் உனக்கு முத்தம் கொடுத்ததைக் கூடவா?''

நீலாவுக்கு பதில் சொல்லப் பிடிக்கவில்லை. இருந்தாலும் ''உம்'' என்றாள்.

''நான் படற வேதனையை அவர் கிட்டே சொன்னியா?''

''அதனாலேதான் இங்கே அனுப்பிச்சாரு.''



''அவனும் லவ் பண்ணின ஆளோ?''

''முன்ன இருந்திருக்கு இப்ப இல்ல.''

''அவளைப் போய் அவன் பார்க்கிறானா?''

''இல்லே. பார்க்க மாட்டார்.''

''இருக்காது. இன்நேரம் பார்த்திருப்பான். அது தெரிஞ்சிட்டா கலாட்டா பண்ணுவேன்னுதான் உன்னை என்கிட்டே அனுப்பியிருக்கிறான். ஆம்பளைங்களை நம்பாதே நீலா. அதுவும் கம்பீரமா பேசற ஆம்பளைய நம்பாதே. எல்லாம் தெரிஞ்ச மாதிரி பேசற ஆம்பளைய நம்பாதே.''

''கணேசன் அப்படியில்லை.''

''வேற எப்படி—எதுக்கு உன்னை இங்கே அனுப்பணும். நான் எக்கேடு கெட்டா கணேசனுக்கு என்ன? இன்னிக்கு வரைக்கும் நான் உன்னைத்தவிர வேறு யாரையும் மனசால கூட நினைச்சுப் பாக்கல ''

''என்ன உளர்ற சந்துரு?''

''இது சத்தியம்.''

''தேவையில்லைங்கறேன். வேறு யாரையாவது கல்யாணம் பண்ணிக்கோன்னு சொல்லத்தான் வந்தேன்.'

''முடியாது. என் நீலா எனக்கு வேணும்?''

நீலா கலவரமானாள். எழுந்து நின்றாள். அவன் வழியை மறித்துக் கொண்டான்.

''என் வேதனையை புரிஞ்சிக்காம போகாதே நீலா'' என்று கெஞ்சினான்.

''கணேசனை தவிர என் மனசுல வேறு யாரும் இல்லே.''

''என்னை மறந்துடுவியா?''

''பேரும் ஊரும் ஞாபகம் இருக்கும் ''

''அவ்வளவுதானா?''

''நிச்சயம் அவ்வளவுதான் வழிவிடு...''

''நீ போனா நான் தூக்குமாட்டிட்டு செத்துடுவேன்.'

''அப்படியானா நீ என் கல்யாணத்தன்னைக்கே செய்திருக்கணுமே.''

''கணேசனை பிடிக்காமப் போய் எங்கிட்டே வரு வேன்னு காத்திட்டிருந்தேன்.'' இவ்வளவு சீக்கிரம் வரு வேன்னு நினைக்கவேயில்லை.''

''கணேசனைப் பிடிக்கலைன்னு நான் சொன் னேனா.''

''நீ சொல்லலை, இப்ப சொல்ல. பின்னாலே சொல்லுவே. ஆனா ஒரு விஷயம் நிச்சயம். உன்னை கணேசனுக்கு பிடிக்கலை. இல்லேன்னா உன்னை இவ்வளவு சீக்கிரமா உன்னை ஏன் இங்க அனுப்புறான்.',

''அடப் பாவி என்ன முட்டாள்தனமா பேசறே.''

''வந்துரு நீலா. உன்னை நான் கண்ணுல வச்சு காப்பாத்தறேன்.''

''உனக்கு பைத்தியமா பிடிச்சிருக்கு சந்துரு.''

''ஆமா பைத்தியமாத்தான்—உன்மேல பைத்தியமாத் தான் நான் அலையறேன். நீலா நீலான்னு உம்மேல எத்தனை கவிதை எழுதியிருக்கேன் பார். நீலாயதாட்சி அறுபதுன்னு கவிதைத் தொகுப்பு போடப் போறேன்.''

''புல்ஷிட். என் பெயர் போட்டே கொன்னுடுவேன்.'

நீலா எழுந்திருந்தாள்.

''உட்கார் நீலா.'' அவன் அவள் தோளில் கைவைத்து அழுத்தினான்.



நீலா அவனை பளீரென்று அறைந்தாள். ''என்ன தைரியம் என்னைத் தொட'' என இரைந்தாள்.

''நான் தொட்ட உடம்பு தானே இது.''

அவன் மறுபடியும் தொட்டான். நீலா அவன் கையைத் தட்டி விட்டாள். எழுந்து வாசலை நோக்கி நடந்தாள். அவன் பின்பக்கம் வந்து அவளைக் கட்டிக் கொண்டான். கண்டபடி கைவைத்தான். நீலா முழங் கைகளால் இடித்து அவனை தள்ளினாள். கைப்பையால் அவன் முகத்தில் ஓங்கியடித்தாள். பையின் ஜிப் கொக்கி அவன் முகத்தில் கோடு போட்டது,

''கிட்டே வந்தே வெட்டிடுவேன்' என்று கத்தினாள்.

அறைவாசலில் யார் யாரோ கூடினார்கள். விலக்கிக் கொண்டு நீலா வெளியே வந்தாள். தெருவில் வேகமாக நடந்தாள்.

கணேசன் இதைக் கேட்டா என்ன சொல்வானோ என்று பயந்தாள். ஆட்டோ பிடித்து வீட்டுக்குப் போய் சகலமும் சொன்னாள்.''

''என்னை ஏன் போகச் சொன்னேள்...'' என்று வாய் விட்டு கதறினாள்.

கணேசன் அவளை இறுக்கக் கட்டிக் கொண்டான்.

''இது என் தப்புதான். ஸாரி, ஸாரி'' என்று பல முறை கெஞ்சினான்.

இரவு அவளுக்கு ஜுரம் வந்தது. கணேசன் டாக்டரை அழைத்து வந்தான். தூக்கி சாய்த்து மருந்துக்கள் கொடுத்தான். நெற்றியில் ஈரத்துணி போட்டு, கை களைப் பிடித்தபடியே அருகில் நின்றான். விடியும் வேளையில் அவளுக்கு வியர்த்து விட்டது. வெந்நீர் துண்டால் உடம்பு துடைத்து விட்டான். அவளுக்கு அருகே அவளைக் கட்டிக் கொண்டு தூங்கி போனான்.

மஃப்டி போலீஸ் நன்றாய் விடிந்தபிறகு கதவு தட்டியது. சந்துரு நாற்பத்தியேழு தூக்கமாத்திரை சாப்பிட்டு இறந்து விட்டான் என்று தகவல் சொல்லியது.

''நீலான்னு ஒருத்தங்க வந்தாங்களாமே அவங்க இங்கே இருக்காங்களா?'' விசாரித்தது.

முழு விசாரணைக்கும் கணேசன்கூட இருந்தான். காதல் தோல்விதான் தற்கொலைக்குக் காரணம் என்று சந்துரு எழுதி வைத்தது வழக்கை விரைவாய் முடிக்க சாதகமாய் இருந்தது,

''பேரும், ஊரும்தான் ஞாபகம் இருக்கும்னு சொன்னேள்—அவன் சாவும் ஞாபகம் இருக்குமே.''

நீலா கதறினாள்.

''நான் பாட்டுக்கு நாய் மாதிரி உங்களை சுத்திண்டிருப்பேனே. என்னை ஏன் அவன்கிட்டே அனுப்பிச்சேள்.' என்று கத்தினாள்.

அவளை சமாதானப்படுத்த கணேசன் பெருமுயற்சி எடுக்கவேண்டியிருந்தது, அம்மாவையும் அப்பாவையும் துணைக்கு அழைக்க வேண்டியதிருந்தது.

''நீங்க பண்ணினது டூ மச்'' என்கிற நீலாவின் அண்ணா வார்த்தையைக் கேட்க வேண்டிருந்தது.

''இது தேவைதானா'' என்கிற நண்பர்கள் ஏளனத்தை சகித்துக் கொள்ள வேண்டியது.

கல்யாணம் ஆயிரங்காலத்துப்பயிர். அதுல பொண்டாட்டி விதை நெல். நின்னு கவனமா பாத்துக்கணுமே தவிர மாடு மேயறத பார்த்துக் கொண்டிருப்பாளோ? பல்வேறு நபர்களின் ஏச்சுக்களைஏற்க வேண்டிருந்தது.

கணேசன் நீலாவின் உடல் நலம் பற்றியே கவனமாக இருந்தான். காதலோ,காமமோ, இல்லாமல் வெறுமனே



வெறித்தபடி இருக்கும் மனைவியை மடியில் போட்டு சமாதானப்படுத்தினான்,

காலம் மெல்ல காயத்தை மாற்றியது. நீலா அதிர்ச்சியிலிருந்து மீண்டும் எழுந்து சமைக்க மூன்று மாதமாகியது. நீலாவின் மன்னி ஒரு நாள் அவள் டிராவல்ஸிற்கு வந்தாள்.

''அவ தலையிலே நிறைய வேலை சுமத்தணும். நீங்க அவசியம் தேவைங்கிற மாதிரி ஒரு நிலைமையை ஏற்படுத்துங்கோ? உங்களை பத்தி யோசிச்சு, யோசிச்சு புரிஞ்சுக்க ஒரு இடைவெளி கொடுங்கோ. பொம்பளைய கொஞ்சிண்டே இருந்தேள்ன்னா நிஷ்டூரமாயிடுவா. கண்டபடி பேசறதே பழக்கமாயிடும். நட்பினோட அருமை தெரியணும்னா கொஞ்சம் விலகி நிக்கனும். நிழலோட அருமை தெரியணும்னா வெயில்லே தவிக்கணும். நான் சொல்றது உங்களுக்கு புரியும்னு நினைக்கிறேன்.''

சொல்லிவிட்டுப் போனாள். கணேசனை தீவிரமாக யோசிக்க வைத்து விட்டுப் போனாள்.

ஒரு மாதம் கழித்து கணேசன் நீலாவை தன் டிராவல்ஸிற்கு அழைத்துப் போனான். அங்குள்ள வேலைகளை, பேச வேண்டிய முறைகளை கணேசன் கற்றுக் கொடுத்தான். டிரைவர்களுக்கு அறிமுகப்படுத்தினான். கம்பனியில் உள்ள தொடர்பாளர்களை நேரில் அழைத்துக் கொண்டு போய்க் காட்டினான். கார் பகுதிகளைப்பற்றி விவரம் சொன்னான். வரவுசெலவு கணக்கு காட்டினான். சில விஷயங்களை அவளையே நேர்முகமாக எடுத்து நடத்தச் சொன்னான்.

''எனக்கு இது வேண்டாமே நான் வீட்டோடு இருக்கேனே'' நீலா கெஞ்சினாள்.

''எதுக்கு நீலா-நடந்ததையே நினைச்சு வருத்தப்படவா? தினம் தினம் ஒரே சமையல் பண்ணவா. ரொடீன்ல மாட்டாதே. மாட்டினா கனவு காணும் மனசு போயிடும். நடந்ததையோ நடக்கப்போவதையோ சுத்தி

தான் இருக்கும். புதுசு புதுசா பிரச்சனை வர இடம் இது. பிரச்சனை வர்ற இடத்துல நிகழ் காலத்துல இருந்துதான் ஆகணும். இப்ப இங்கே என்னன்னு யோசனை பண்ணித்தான் ஆகணும். அப்போ பழசு மறந்துடும்-கனவு காண அவசியமில்லாத போகும்-நான் தமயந்திய மறந்ததுகூட கார் மேல இருக்கிற காதலனால தான் வேலை மேல் இருக்கிற விருப்பத்தினால்தான் போன கார் திரும்ப வரணுமேங்கிற கவலை வந்திருச்சுன்னா செத்துப் போன காதல் மீது கவிதை எழுத தோணாது. காதல் கவிதை. எழுதி எழுதி கண்ணும் புத்தியும் மங்காது.

''உங்க மன்னிய இங்க கேஷியரா போட்டுருவோம் இரண்டாயிரம் ரூபா சம்பளமா தரோம். நீ மட்டுமே நின்னு இந்த கம்பெனியை நடத்து ''

''அப்ப நீங்க''

நீலா வியப்போடு கேள்வி கேட்டாள்.

''நான் கூரியர் ஆரம்பிக்கப்போவேன். இடம்இடமாப் போயி காண்ட்ராக்ட்ஸ்பிடிக்கப்போகிறேன். டிராவல்சும் கூரியரும் ஒண்ணோட ஒண்ணுஇணையா நடத்தமுடிஞ்ச விஷயம் ஒரு மூணுமாசம் சுத்திட்டு வந்தேன்னாவிஷயம் பிடிபடும். நான் அடுத்த வாரம் கிளம்பறேன். நீ பயப்படாம நடத்து, உனக்கு இது நல்லது,'' நீலா தயங்கினாள். பிறகு சரி என்றாள். மன்னியை வரவழைத்து அவளுக்கும் கணேசன் வேலை சொல்லிக் கொடுத்தான். மன்னி ஆர்வமாக கற்றுக்கொள்வதைப் பார்த்து நீலாவும் மனசு செலுத்தினாள்.

அவன் கிளம்பும் அன்று ''ஒரு வேளை இதில் சிக்கல் வந்தால் உடனே வருவேளா!'' கட்டிக் கொண்டு கேட்டாள்

''அடுத்த ஃப்ளைட்ல வருவேன். தினம் எஸ். டி. டி. பேசுவேன். ரெண்டு வாரம் சமாளிச்சாப்போதும். நான் பேச வேண்டிய அவசியமே இருக்காது.''



அவன் கிளம்பிப் போனான். அவன் ஊருக்கு கிளம்பிய மறுநாள் தமயந்தி டிராவல்சுக்கு வந்தாள். கணேசன் இல்லையா? என்று கேட்டாள். நீலாவுக்கு திக்கென் றிருந்தது.

''இல்லையே, என்ன விஷயம்'' என்று பயத்தோடு கேட்க, தமயந்தி ஒரு போட்டோ காட்டினாள்.

''எனக்கும் இவருக்கும் வர மாசம் கல்யாணம். போன வாரம் வந்து பார்த்திட்டு சரின்னு சொல்லி விட்டு போனார். ரயில்வே உத்யோகம். பாங்க்ல லோன் கேட்டிருக்கிறேன். கைக்கு கிடைக்க பத்து நாள் ஆகும். ஒரு இருபதாயிரம் ரூபாய் இருந்தா பழைய வெள்ளிப் பாத் ஆரம் வாங்கி பாலீஷ் போட்டுடுவேன் கணேசன் கல்யாணத்துக்கு ஹெல்ப் பண்றேன்னு சொல்லியிருந்தாரு. இப்ப என்ன பண்றது.''

கண நேரம் ஒரு கற்பனையில் தான் பயந்ததை நினைத்து வெட்கப்பட்டாள். நிம்மதியானாள்.

''இருபதாயிரம் தானே நான் தரேன். இப்பவேதரேன் இதுக்கு கணேசன் எதுக்கு.''

அவளே வங்கிக்குப் போய் காசு எடுத்துக் கொண்டு வந்தாள். ரூபாய் இருபதாயிரம் கடன் வாங்கிக் கொண்டேன் என்று தமயந்தியிடம் ரசீது வாங்கிக்கொண்டாள்.

''ரசீது வாங்கினதுக்கு கணேசன் கோபிச்சுக்கிட்டா என்ன பண்ணுவே மன்னி கேட்டாள்.''

''தமயந்தி யாருன்னு கணேசனுக்குத் தெரிஞ்சிருக்கலாம். எனக்கு தெரியாதே இருபதாயிரம் சும்மாவா ஆயிரம் ரூபா லாபத்திற்காக எவ்வளவு அவஸ்தை பட வேண்டியிருக்கு. கேட்ட நேரத்துக்கு வட்டியில்லாம தராமே அது உதவி கணேசன் ஒன்றும் சொல்ல மாட்டார்.''

''தமயந்தி ஏமாத்திடுவான்னு நினைக்கறியா?'' மன்னி மறுபடி கேட்டாள்.

''நான் ஏமாறக் கூடாதுன்னு நினைக்கிறேன்.'' நீலா திட்டவட்டமாய்ச் சொன்னாள்.

''நேத்து வரைக்கும் ஏமாளியா இருந்தே இன்னிக்கு எப்படி திடீர்ன்னு'' மன்னி கட்டிக்கொண்டு கேட்டாள்.

''ஒரு தடவை ஏமாந்தேன் இல்லையா-அதுதான்.''

மன்னி மாதிரியே நீலாவும் கண் சிமிட்டிச் சொன்னாள். பேச்சுக்கு நடுவே டெலிபோன் அடித்தது.

''ஹலோ கணேஷ் டிராவல்ஸ் ஹியர்.''

நீலா நாற்காலியில் சாய்ந்து கொண்டு பேசினாள்.

''நான் மிஸஸ் கணேசன் பேசுறேங்க, நல்லாயிருக்கீங்களா. சார் ஊருக்குப் போயிருக்காங்க. எந்த வண்டி வேணும் சொல்லுங்க மாருதி தௌஸனா நாளைக்கு காலையிலேயா, அனுப்பிடலாங்க.''

இன்றைய பெண்களுக்கு ஒரு மாரல் சப்போர்ட் மனித நேயம் மிகுந்த ஆண் துணை போதும்-வானம் வசப்படும் என்று மன்னிக்குத் தோன்றியது.

—முற்றும்—